ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

# ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்

FOR PRIVATE CIRCULATION ONLY - Not for sale



பராங்குஶ திருஅவதார ௵
5111
விக்ருதி ௵ ஆனி
25, 9–7–2010
க்ரந்த பரிபாலந ட்ரஸ்ட்
வெளியீடு

ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம்।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம்।।

जीवोज्जीवनसङ्कल्पं हरेः पूर्णं विधित्सुकाम्।श्रियं सत्याशिषं कुर्वत्सदाचार्यपरम्परा ।।
यावत् , विजयतां तावत्सीमातिक्रान्तवैभवा ।श्रीशैलेशदयापात्रनाम्नीयं पत्रिका शुभा ।।

ஆலோசகர்: ஸ்ரீ.உ.வே.பரதன்ஸ்வாமி
ஆசிரியர்:
ஸ்ரீவைஷ்ணவமஹாநிதி R.ரகுராமன் (பாலாஜி)9994606427
24/71,புத்தூர் அக்ரஹாரம் திருச்சி–620 017.
துணையாசிரியர்: K.ஆராவமுதன் (98942 12038)

# பொருளடக்கம்

**மலர் 3 இதழ் 3** **பக்கம்**


| | |
|---|---|
| பரியனாகி வந்த அவுணன் பாசுரார்த்தம் | 1–04 |
| புருஷகாரம் – சிறையிருந்தவள் ஏற்றம் | 05–08 |
| கைகேசியின் மனமாற்றம் | 09–14 |
| ஸ்ரீரங்கராஜஸ்தவவுரை | (37–38) 15–16 |
| மஹநீயர்களைப்போற்றுவோம்-5 | 17–24 |
| திவ்யஸூரிசரிதம் | (29–32) 25–28 |
| ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருத உரை | (57–60) 29–32 |
| அஷ்டபிரபந்தம் – திருவரங்கத்தந்தாதி | (17–24) 33–40 |
| பெரியாழ்வார்திருமொழி வ்யாக்யாநங்கள் | (197–204) 41–48 |


## ஸ்ரீசிக்கதேவராஜ விண்ணப்பம்

*(திருநாராயணபுரத்தில் 6.7.1952 முதல் காரப்பங்காடுஸ்வாமி ஸாதித்த உபந்யாஸங்களின் சிறுபகுதி)*

திருநாராயணபுரம், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை வளர்த்த நம் ஸ்வாமி எம்பெருமானாருக்கு இடமும் காவலும் அளித்த பெருமை வாய்ந்தது. இங்கு ஸர்வரக்ஷகனான எம்பெருமான், எம்பெருமானாரின் ரக்ஷணைக்கு அடங்கிச் சிறுபிள்ளையானான். செல்வப்பிள்ளையானான்.

இராமபிரான் இருபத்தைந்தாம் வயதில் தந்தை சொல்லைப் பின்பற்றிக் காடேகினான். கண்ணனோ பிறந்த உடனேயே தன் பெற்றோரின் சொல் படி தான் பிறந்த அதிசய உருவத்தை மாற்றிக்கொண்டான். அவதாரங்களில் இவ்வாறு பெற்றோர் சொல் மிக்க மந்திரமில்லை என்று நடத்திக்காட்டியது போதாது என்று அர்ச்சையிலும் கூட இங்கு தந்தையாகிய எம்பெருமானாரின் சொற்படி நடந்துள்ளான். அவர் டில்லியில் கூப்பிட்டபோது நடந்து வந்து குழந்தை போல் அவர் மடியில் உட்காரவில்லையா? உடையவருடன் நேரில் பேசிய இவ்வர்ச்சா விக்ரஹத்தை எவ்வாறுதான் போற்றுவது.

எம்பெருமானாரும், எம்பெருமானும் மாபெரும் பக்தகோஷ்டியும் எழுந்தருளியுள்ளயிடத்தில் அடியேன் ஸ்ரீசிக்க தேவராஜ விண்ணப்பத்தைப்பற்றிப் பேசமுற்படுவது – பெரியோர்களின் ஆதரவினாலேயே.

முதல்விண்ணப்பம்

ப்ரஹ்ம ஜ்ஞாநத்தினின்றும் முக்தி என்பதை, வேதத்தை அங்கீகரித்த எல்லா மதத்தினரும் ஒப்புக்கொள்வர். அந்த ப்ரஹ்ம ஜ்ஞாநத்தைப் பற்றியே ஸ்ரீசிக்கதேவராஜர் தம்முடைய முதல் சில விண்ணங்பங்களில் பேசி உள்ளார்.

பரமாத்மாவுக்கு விக்ரஹமும், குணங்களும் உண்டு. அவன் ரூபம் ஐந்து வகையாயிருக்கும். இவைகள்

தொடர்ச்சி ராப்பர் 3ல்

mail us: melathirumaligai@gmail.com

visit us: www.srivaishnavan.com

ஸ்ரீ:



## நரஸிம்ஹாவதார வைபவம்

பரியனாகி வந்த அவுணன்

வாகம்ருதவர்ஷீ ஸ்ரீ.உ.வே.வேளுக்குடி வரதாசார்யஸ்வாமி

ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனால் மயர்வறமதிநலம் அருளப்பெற்ற திருப்பாணாழ்வார், பெரியபெருமாள் தன்னுடைய திருப்பாதகமலம், நல்லாடை, உந்தி, தேட்டரும் உதரபந்தம், திருமார்பு, கண்டம், செவ்வாய், வாட்டமில் கண்கள் எல்லாவற்றையும் தமக்குக்காட்ட, அவற்றைத் தாம் கண்டபடியை ஆஶ்சர்யமாக வர்ணநம் செய்யும்படியாக அமைந்துள்ளது தான் அமலனாதிபிரான் என்னும் திவ்யப்ரபந்தம். இதிலே எட்டாவது பாசுரத்திலே ''பரியனாகிவந்த அவுணன் உடல் கீண்ட அமரர்க்கரிய ஆதிப்பிரான்'' என்னும் பகுதியாலே ஆழ்வார் நரஸிம்ஹாவதாரத்தை அநுபவிக்கிறார். நரஸிம்ஹாவதார அநுபவபரமாக ஆழ்வார் இங்கே திருவுள்ளம் பற்றியருளின அர்த்தங்களை நமதாசார்யர்கள் விவரித்திருப்பதை அடியொட்டிச் சில விஷயங்களை இனி அநுபவத்தில் கொள்வோம்.

திருப்பாணாழ்வார், பத்தே பாசுரங்களில் பரமவேதாந்த ஸாரபூதமான அர்த்தங்களை எல்லாம் வெளிப்படுத்தும்படியாய் அமைந்துள்ளது இந்த திவ்யப்ரபந்தம். இதிலே ஐந்தாவது பாசுரத்திலே 'பாரமாய பழவினை பற்றறுத்து' என்று ஆழ்வார் அருளிச்செய்ததின் மேல் சில ஆக்ஷேபங்கள் எழ, அந்த ஆக்ஷேபங்களுக்கு ஸமாதாநமாய் மேல் பாசுரங்கள் சில அமைந்துள்ளன என்பது பூர்வாசார்யர்களுடைய வ்யாக்யாநம்.

'பாரமாய பழவினை பற்றறுத்தான்' என்கிறார் ஆழ்வார். 'பெரிய பிராட்டியார் புருஷகாரம் செய்தருளினபடியாலே பெரியபெருமாள் தாம் அநாதிகாலமாகச் செய்த பாபங்கள் – துஷ்கர்மங்கள் அனைத்தையும் போக்கினான்' என்று ஆழ்வார் திருவுள்ளமாக, 'அது கூடுமோ? பகவான் உம்முடைய பழவினைகள் எல்லாவற்றையும் அறுத்திருப்பனா? என்ற கேள்வி எழுந்தது. உடனே, 'துண்டவெண் பிறையன் துயர்தீர்த்தவன்' – 'தம்முடைய தகப்பனாருடைய தலையைக் கொய்து விட்டதால் பரமஶிவனார் மஹாபாதகியானார். அந்த பாபத்துக்குண்டான நிவ்ருத்தியை எம்பெருமான்

உண்டாக்கினனே!' என்று ஆழ்வார் த்ருஷ்டாந்தம் காட்டுகிறார். பரமஶிவன் விஷயத்திலேயும் பெரியபிராட்டியார் புருஷகாரத்தினுடைய ப்ராபல்யம் தான். ஆழ்வார் விஷயத்திலேயும் பெரியபிராட்டியார் புருஷகாரத்தினுடைய ப்ராபல்யம் தான். அங்கேயும் பரமஶிவனுருடைய பாபத்தைப் பெரிய பெருமாள் போக்கினார். இங்கேயும் ஆழ்வாருடைய பாபங்களைப் பெரிய பெருமாள் போக்கியருளினார். அவர் செய்த பாபம் தகப்பனார் தலையைக் கிள்ளியது. இங்கே ஆழ்வார் தாம் அக்ருத்யகரண, க்ருத்யாகரண, பகவதபசார, பாகவதாபசாராதிகளான எத்தனையோ பாபங்களைச் செய்ததாகச் சொல்லிக்கொள்கிறார்.

இந்த த்ருஷ்டாந்தத்தின் மேல் ஓர் ஆக்ஷேபம் எழுகிறது. 'எம்பெருமான் பரமஶிவனுருடைய பாபத்தைப் போக்கியருளினான் என்று வேண்டுமானால் சொல்லலாம். அதற்குப் பல காரணங்கள் இருக்கிறபடியாலே. ஆனால் ஆழ்வாருடைய பாபங்களைப் பகவான் போக்கினான் என்று எப்படிச் சொல்லமுடியும்? பரமஶிவனார் பகவானுடைய குமாரரான ப்ரஹ்மாவினுடைய புத்ரராகையாலே பகவானுக்கு பௌத்ர ஸ்தாநத்திலே அமைந்தவர்; ஸம்ஹார கர்த்தாவாய் பகவான் நியமித்தருளிய தொழிலைச் செய்து கொண்டிருப்பவர்; அதற்கும் மேலே எம்பெருமானிடத்தில் சென்று தன்னுடைய பாபத்தைப் போக்கடிக்குமாறு ப்ரார்த்தித்துக் கொண்டவர். இக்காரணங்களாலே எம்பெருமான் பரமஶிவனுருக்கு அநுக்ரஹம் புரிந்தான் என்று சொல்வதை ஒப்புக்கொள்ளமுடியும். பரமஶிவனுரை ஆழ்வார் தமக்கு த்ருஷ்டாந்தமாகக் கொள்ளமுடியாது' என்று ஆக்ஷேபம் எழுகிறது. இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநமாகத்தான் ஆழ்வார் அடுத்த பாசுரத்தில் 'எம் ஐயனார் அணியரங்கனார்' என்று அருளிச்செய்கிறார்.

அடுத்தபடியாக 'பாரமாய பழவினை பற்றறுத்து' என்று அருளிச் செய்திருப்பதற்கு மேலும் ஒருவகையில் ஆக்ஷேபம் எழ, அதற்கு 'பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்ட அமரர்க்கரிய ஆதிப்பிரான்' என்று அடுத்த தான எட்டாவது பாசுரத்திலே ஸமாதாநம் அருளிச்செய்கிறார் ஆழ்வார். இங்கே மூன்று விஷயங்களை நாம் குறிக்கொள்ளவேண்டும். 1. 'ஆழ்வார் தம்முடைய பாபங்களைப் போக்கடித்தான் பகவான்' என்று ஐந்தாவது பாசுரத்திலே சொல்கிறார். 2. ஆறாவது பாசுரத்திலே 'துண்ட வெண்பிறையன் துயர் தீர்த்தவன்' என்று அதற்கு த்ருஷ்டாந்தம் சொல்கிறார். 'அவர் யார்? நீர் யார்? அவரை நீர் த்ருஷ்டாந்தமாக எடுக்கமுடியுமா?' என்ற ஆக்ஷேபத்துக்கு

ஸமாதாநத்தை ஏழாவது பாசுரத்திலே அருளிச்செய்கிறுர். 3. மேலும் ஓர் ஆக்ஷேபம் எழ, அதற்கு ஸமாதாநத்தை அடுத்ததான எட்டாவது பாசுரத்திலே அருளிச்செய்கிறுர். இப்படி ஐந்தாவது, ஆறுவது, ஏழாவது, எட்டாவது பாசுரங்களுக்குண்டான தொடர்பை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இனி இந்த ஆக்ஷேபமாவது என்னவென்பதைக் காண்போம்.

நம்மாழ்வார் திருவிருத்தம் முதல் பாசுரத்திலே 'பொய்ந்நின்றஞானமும் பொல்லாஒழுக்கும் அழுக்குடம்பும்..' என்று அருளிச்செய்திருக்கிறுர். 'பொய்ந்நின்றஞானம்' எனப்படுவது அஜ்ஞாநம். 'பொல்லாவொழுக்கு' என்பது – அவித்யா ஸஞ்சிதமான கர்மங்கள். அழுக்குடம்பாவது கர்மாதீந மான ஶரீரம். ஆக ஶரீரத்தைச் சொல்லி, அதற்கு மூலகாரணமான கர்மங்களைச் சொல்லி, அதற்கும் மூலகாரணமான அஜ்ஞாநத்தைச் சொல்லுகிறுர் ஆழ்வார் இப்பாசுரத்திலே. பொய்ந்நின்றஞானம், தத்கார்யமான பொல்லாவொழுக்கு, தத்கார்யமாக அழுக்குடம்பு என்று கார்யகாரண பாவத்திலே அமைந்துள்ளது இப்பாசுரம்.

சிலவிடங்களிலே செடிகள் முளைக்கின்றன. அவற்றை வெட்டி விடுகிறோம். ஆனுல் சிறிது நாள்களில் அச்செடியானது மறுபடியும் முளைக்க ஆரம்பித்து விடுகிறது. செடியினுடைய வேரை அழித்தாலன்றோ, அது மறுபடியும் வளராமல் இருக்கும்! 'பாரமாய பழவினை பற்றறுத்தான்' என்று கர்மங்களை பகவான் அழித்தான் என்றுல், செடிகளுக்கு வேர் போன்று இந்த கர்மங்களுக்கு மூலகாரணமான அஜ்ஞாநம்–அவித்யா என்னும் வேரைத் தானே பகவான் போக்கடிக்கவேண்டும்? இங்கே 'ஆழ்வாருடைய அஜ்ஞாநம் தொலைந்ததா?' என்று கேள்வி.

'பாரமாய பழவினை பற்றறுத்தான்' – பகவான் ஆழ்வாருடைய அஜ்ஞாநத்தைப் போக்கடித்தான் என்றுல்தான் தத்கார்யமான – அஜ்ஞாநத் தாலே ஆர்ஜிதமான கர்மங்கள் எல்லாம் தொலைந்தன எனலாம். 'அஜ்ஞாநத் தைப் போக்கடிக்க ஆழ்வார் என்ன பண்ணினுர்?' என்ற கேள்வி எழுகிறது. தம்முடைய அஜ்ஞாநத்தைப் போக்கடிக்கத் தாம் ஒன்றும் பண்ணவில்லை என்கிறுர் ஆழ்வார். அப்படியென்றுல் ஆழ்வாருக்கு அஜ்ஞாநம் எப்படி ஒழிந்தது? இங்குதான் ஆழ்வார் அருளிச்செய்கிறுர் – அஜ்ஞாநமே, தமோகுணமே ஓர் வடிவெடுத்தாற்போலே இருந்தவன் ஹிரண்யன் – அவனை ஒழித்த நரசிங்கப்பெருமாளே – அவன்தான் திருவரங்கத்து எம்பெருமான்– தம்முடைய அஜ்ஞாநத்தையும் அழித்து விட்டான் என்று.

அஜ்ஞாநம் – அவித்யை என்பது எப்படிப்பட்டது? அவித்யா பண்ணும் கார்யம் என்ன? என்பதை நமதாசார்யர்கள் ஆஶ்சர்யமாகத் தெரிவிக்கிறார்கள். தன்னோடு ஸம்பந்தித்தாரை பகவத்ப்ரவணராக ஆகவொட்டாதே விபரீதங்களை அநுஷ்டிப்பிக்குமிறே அஜ்ஞாநம். விபரீத அநுஷ்டாநத்துக்கு ஹேதுபூதமாய் இருப்பது அவித்யை. அதனால்தான் பொய்ந்நின்றஞானம் என்று சொன்ன உடனே பொல்லாஒழுக்கு என்கிறார் ஆழ்வார். விபரீதமான அநுஷ்டாநம் – துராசாரம் – பொல்லாத ஒழுக்கமாகும். அஜ்ஞாநம் தன்னோடு ஸம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் துராசாரம் உடையவர்களாக ஆக்கிவிடும். தன்னோடு ஸம்பந்தித்தாரை துராசாரம் படைத்தவர்களாக ஆக்குகிறதோ இல்லையோ, அவர்களை ஸதாசாரம் இல்லாதவர்களாக ஆக்கிவிடும். இப்படிப்பட்ட அஜ்ஞாநத்தினுடைய திரண்டபாவம் – தமோகுண அபிபூதமான தத்த்வம்தான் ஹிரண்யன் என்று காட்டியருளுகிறார் ஆழ்வார்.

அஜ்ஞாநமே, தமோ குணமே ஓர் வடிவெடுத்தாற்போலேயிருக்கிற ஹிரண்யனைத் தன் திருக்கையிலுள்ள நகத்தாலே கிழித்தெறிந்தது போலவே தன்னுடைய ஜ்ஞாநக்கையினாலே தம்முடைய அஜ்ஞாநத்தையும் போக்கி யருளினான் நரசிங்கப்பெருமாளாகிற திருவரங்கத்து எம்பெருமான் என்கிறார் ஆழ்வார். 'ஞானக்கை தா' (திருவாய் 2–9–2) என்று பகவானை ப்ரார்த்திக்கிறார் நம்மாழ்வார். ''அமிழ்ந்தினார்க்குக் கை கொடுத்தாற்போலே இருக்கையாலே ஞானலாபம். 'ஞானமான கையைத்தா' என்கிறார் என்று ஈடு வ்யாக்யாநம். எம்பார் முதலியாண்டானைப் பற்றி ஐதிஹ்யம் ஒன்று இங்கே நினைவு கொள்ளத்தக்கது. முதலியாண்டானுக்கு ஒருமுறை தற்காலிகமாக எங்கேயோ வெளியூர்க்கு எழுந்தருளும்படி நேரிட்டது. அப்போது அவருடைய அந்தரங்க ஶிஷ்யர் ஒருவர் எம்பாரை ஆஶ்ரயித்து அவரிடத் தில் கைங்கர்யம் புரிந்துவந்தார். முதலியாண்டான் வெளியூரிலிருந்து திரும்பி வந்ததும் பழையபடியே முதலியாண்டானை ஆஶ்ரயித்து அவருக்கு அந்தரங்க கைங்கர்யம் புரியஆரம்பித்துவிட்டார். அப்போதுதான் அவர் முதலியாண்டானுடைய ஶிஷ்யர் என்பதை அறிந்த எம்பார் 'ஐயோ! முதலியாண்டானுடைய ஶிஷ்யராய் இருந்த ஒருவரை (என்னுடைய ஶிஷ்யராய் நினைத்து) என்னுடைய கிங்கரராகக்கொண்டு விட்டேனே! முதலியாண்டானிடம் அபசாரப்பட்டுவிட்டேனே!' என்று மனம் வருந்தி முதலியாண்டானிடம் சென்று தன்னுடைய அபராதத்தை பொறுத்தருளும்படி வேண்டிநின்றார்.

தொடரும்...

# புருஷகாரம் – சிறையிருந்தவள் ஏற்றம்

## (ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் ஶதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்யஸ்வாமி)

(சென்றவிதழ் தொடர்ச்சி)

ஆகவே தேவரீரே ஓர் நல்லவிடத்தைத்தேடி,'''இங்கே இப்படி இப்படிப் பர்ணசாலையைச் சமையும்' எனக் கட்டளையிடவேணும்'' என்று வேண்டிக்கொண்டு, பிராட்டியும் புருஷகாரம் செய்யத் தம் விருப்பத்தைப் பெறுகிருர். ஆகவே ஸீதாப்பிராட்டி பெருமாளுடன் கூடியிருக்கும் போது இளையபெருமாளையிட்டுப் புருஷகாரத்தன்மை வெளிப்பட்டமை தெரியவருகிறது.

இனி, காகாஸுரனையிட்டுப் புருஷகாரத்வம் வெளிப்பட்டமையையும் பார்க்கலாம். சித்ரகூடபர்வதத்தில் ஒரு பர்ணசாலையை அமைத்துக்கொண்டு பெருமாளும், பிராட்டியும், இளையபெருமாளும் வாஸம்செய்துவரும் நாளில், ஒருநாள் இளையபெருமாளும் அருகிலில்லாமல் வெளியில் சென்றிருந்தபோது, பர்ணசாலையின் வாயிலில் தர்ப்பத்தாலான விரிப்பில், பெருமாள்மடியில் தலைவைத்து ஸீதாப் பிராட்டி தூங்குகிருள். சிறிது நேரம் கழித்து, பிராட்டி மடியில் பெருமாள் தலைவைத்துத் தூங்குகிருர். பிராட்டியும் பெருமாளின் கிடையழகை அநுபவித்துக் கொண்டிருக்கிருள். அப்போது இந்த்ரனின் பிள்ளையான 'ஜயந்தன்' என்பவன், காக்கை வடிவு கொண்டு வந்து தன் மூக்கால் பிராட்டியின் திருமுலைத்தடத்தைக் கொத்துகிருன். பிராட்டி எத்தனை விரட்டினுலும் போய்வந்து போய்வந்து கொத்துகிருன். தான் அசைந்தால் பெருமாள் எழுந்து விடுவரே என அவர் துயிலுறும் அழகில் ஈடுபட்ட பிராட்டி பொறுத்துக் கொள்ளுகிருள். ஆனுல் அவனுண்டாக்கின புண்ணிலிருந்து ரத்தம் வெளிப்பட்டு மடியில் படுத்திருக்கும் பெருமாள்மேல் சிந்துகிறது. உடனே உணர்த்திகொண்ட பெருமாள் ''எவன் ஐந்துதலை நாகத்துடன் விளையாடுகிருன்'' என்று அவன்மேல் சீறி அவன் தலையை அறுக்க ப்ரஹ்மாஸ்த்ரத்தை ஏவுகிருர்.

ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்கான அவன்நிலையைக் கண்டு இரங்கின பிராட்டி அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் உடனே அவன் தலையை அறுக்காதபடி அவனைப் பின்தொடர நியமிக்கிருள். அந்த ப்ரஹ்மாஸ்த்ரமும் சடக்கென அவன் தலையை அறுக்காமல் அவனைத் துரத்துகிறது. அவனும் புகல்தேடி, முறையே, பிதா, மாதா, தேவர்கள், தேவபத்நிகள், ருஷிகள், ருஷிபத்நிகள் – எல்லாரையும் சரணடைகிருன். அவர்கள் அனைவருமே, வெறும் ஜயந்தனல்லாமல், மஹாபாதகத்தைச் செய்து ப்ரஹ்மாஸ்த்ரம் பின்தொடரும்படிநின்ற ஜயந்தனுகையாலே ராமசரத்துக்கு அஞ்சிப்புகல்தரவில்லை. இவ்விதம் ஆபாஸபந்துக்கள் – பந்துக்கள்போல் தோற்றமளிப்பவர்கள் – அனைவராலும் கைவிடப்பட்ட காகாஸுரன் தன்பால் ப்ரஹ்மாஸ்த்ரம் விட்ட பெருமாளையே புகலடைகிருன்; அதாவது – புகல்தேடி மூன்றுலகங்களையும் பலதடவை சுற்றித்திரிந்தும் எங்கும் புகல்பெருமல் இறக்கைகளில் பலமற்றமையால் தரையில் விழுந்து விடுகிருன். விழுந்தவிடம் பிராட்டியின் அநுக்ரஹத்தால் பெருமாள் திருமுன்பாக அமைகிறது.

அப்படிவிழுந்தவன் பெருமாள்பக்கல் புச்சமும் (வாலும்) மறுபக்கம் தலையுமாகத்தான் விழுகிறான்; அந்நிலையைப் பெருமாள் காண்பதற்கு முன்பு பக்கத்திலிருந்த ஸீதாப்பிராட்டி அக்காகத்தின் தலையைப் பெருமாள்பக்கம் திருப்பிப் பெருமாள் திருவடிகளில் சேர்த்து, பர்த்தாவான பெருமாளைப்பார்த்து 'இவனை ரக்ஷிக்கவேணும் ரக்ஷிக்கவேணும்' என வேண்டினாள்; கருணையாகிற அமுதத்துக்குக் கடலான பெருமாளும் அந்தக் காகத்தைக் கையால் எடுத்து ரக்ஷித்தார்; தயையுடன் பார்த்தார் – என்கிறது பாத்ம புராணம்.

இவ்விதம் தரையில் விழுந்த சரணாகதனான காகாஸுரனை, பெருமாள் ஶரணாகத ரக்ஷகராகையாலே (தன்னைப் புகலடைந்தாரைக் காப்பவராகையாலே) அவன் தம் நினைவால் கொல்லத்தக்கவனானாலும் க்ருபையினால் நன்றாக ரக்ஷித்தார். அவன் மேல் ஏவின ப்ரஹ்மாஸ்த்ரத்தைக் கொண்டு அவனுடைய ஒரு கண்ணைமட்டும் பறித்து ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கே கண்ணழிவு – குறைவு–உண்டாக்கினார். இங்கு அவன் தலையை அறுக்கவேண்டியிருக்க, ஒருகண்ணை மட்டிலும் பறித்து அவனைப் பிராணனுடன் விட்டதே ரக்ஷணமாகும். காகத்தின் ஒருகண்ணைப்போக்கினதாவது, நமக்கு ஒரே ஸமயத்தில் இரண்டுகண்களும் தெரிவதுபோலல்லாமல் ஒருஸமயத்தில் இடதோ வலதோ ஒரு கண்மட்டிலும் தெரியும்படியாக. ஒரு கண்ணையே இரண்டு கண்களாக்கினார் பெருமாள் என்பது பெரியோர்களின் நிர்வாஹம். ஆகவே பெருமாளுடன் கூடியிருக்கும்போது ஸீதாப்பிராட்டி காகாஸுரனை ஏற்று ரக்ஷிக்கும்படி புருஷகாரம் செய்தாள் என்பது வெளிப்படுகிறது. இவ்விதம் இளையபெருமாளையும் காகாஸுரனையும் பெருமாளை ஏற்கப்பண்ணினது பெருமாளுடன் ஸீதாப்பிராட்டி சேர்ந்திருக்கும் நிலையிலேயாகையாலே, ஸம்ஶ்லேஷதஶையில் புருஷகாரத்வம் தோற்றிற்று.

இனி ''விஶ்லேஷதஶையில் – அதாவது எம்பெருமானைப் பிரிந்திருக்கும்போது பிராட்டி புருஷகாரம் செய்கிறாள்'' என்பது விவரிக்கப்படுகிறது. ஸீதாப்பிராட்டி பெருமாளை விட்டுப்பிரிந்து அஶோகவனத்திலிருக்கும்போது, கெட்ட நினைவுடன் தன் எதிரில் நின்று கண்டபடி பிதற்றின இராவணனின் நிலைக்கிரங்கி ''இவனும் பெருமாளுக்கு அநுகூலனாகி –வேண்டியவனாகி–வாழட்டுமே'' என்கிற நினைவுடன் இராவணனைக் குறித்து ''உன் ஊரில் உனக்கு உபதேஶம் செய்து திருத்த நல்லவர்களே கிடையாதா? அப்படிச் சொல்லமுடியாதே; விபீஷணன் போல்வாருண்டே; அல்லது நீ தான் அவர்களை அண்டுகிறதில்லையோ? இதனை நான் எவ்விதமறிந்தேன் என்றால், பிறழ்ந்திருக்கிற உன்புத்தியானது நன்னடத்தை கெட்டிருக்கிறதே'' என்று உபதேஶித்து இராவணனையும் பெருமாளுடன் சேர்க்க வழிதேடுகிறாள். அதேபோல் இராவணன் மாண்டபிறகு அதைப் பிராட்டியிடம் தெரிவிக்கவந்த திருவடி (ஹநுமான்) பிராட்டியைப் பத்துமாதம் நலிந்த ராக்ஷஸிகளை (அரக்கியரை) சித்ரவதம் பண்ண முயன்று, அதைப் பிராட்டிக்குத் தான் பெருமாள் வெற்றிபெற்ற நற்செய்தி சொன்னதுக்குப் பரிசாகப் பிராட்டியிடம் கேட்க, அத்திருவடியைக் குறித்து, ''கற்றறிந்த உம்மால் இவர்கள் திறத்து தயையே செய்யத்தக்கது'' என்று அத்திருவடி அரக்கியர்பால் இரக்கமே கொள்ளத்தக்க

வார்த்தைகளைச் சொல்லி, அவர்களின் குற்றங்களைத் திருவடியைப் பொறுப்பிக்கிறாள். ஆகவே, பிராட்டி பெருமாளைப் பிரிந்திருக்கும்போதும் புருஷகாரம் செய்கிறாள் என்பது தேறுகிறது. இங்கு ''அரக்கியரைத் திருவடியிடமிருந்து ரக்ஷித்தாள் என்பது தேறுமே தவிர, புருஷகாரம் செய்தாள் என்பது தேறாதே'' என்னில்: திருவடியை பலாத்காரத் தாலன்றிக்கே நல்ல வார்த்தைகளால் அரக்கியரின் குற்றங்களைப் பொறுக்கச் செய்தபடி யாலே, ''பிரிந்திருக்கும் தசையில் தன் உபதேஶத்தால் சேதநர்களைத் தன் வசப்படுத்து வள்'' என்பது தேறுகிறபடியால் இதுவும் புருஷகாரம் எனப்படுகிறது.

பிள்ளைஉலகாசிரியரே முமுக்ஷுப்படியில் ''திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே'' என்று அருளிச் செய்கிறார். ஆகவே, ''எம்பெருமானுடன் கூடியிருக்கும்போதும் பிரிந்திருக்கும்போதும் இவளின் புருஷகாரம் செய்யும் (சேதநனையும் எம்பெருமானையும் சேர்த்துவைக்கும்) தன்மை நன்கு தோற்றும்'' என்பதற்கு இதனையும் சேர்த்துக்கொள்ளலாம். இவ்விரண்டு நிலைகளிலும் இவள் எவ்விதம் புருஷகாரம் செய்கிறாள் என்றால், எம்பெருமானுடன் கூடியிருக்கும் போது எம்பெருமானைத் திருத்துகிறாள். பிரிந்திருக்கிறபோது சேதநனைத் திருத்துகிறாள். திருத்துகையாவது – மாறுபடுத்துகை. அதில் ஈஶ்வரனை (எம்பெருமானை)த் திருத்துகையாவது, சேதநர்களின் குற்றங்களையே பார்த்து 'க்ஷிபாமி' (இவனைத் தள்ளிவிடுகிறேன்) ''ந க்ஷமாமி'' (பொறுக்கமாட்டேன்) என்றிருக்கும் எம்பெருமான் நிலையை மாற்றி, தன்னைச் சரணம்புக்க சேதநனை இரங்கி ஏற்றுக்கொள்ள விருப்ப முள்ளவனாக ஆக்குகை. சேதநனைத் திருத்துகை(மாறுபடுத்துகை)யாவது – செய்யத் தகாத காரியங்களைச் செய்வதையே தனக்கு தன்மையாகக் கொண்டவனாய், அதனாலேயே எம்பெருமானை வெறுத்துத் திரிகிற சேதநனை, அந்நிலை குலைந்து எம்பெருமானையே புகலாகக்கொள்ள விரும்பப்பண்ணுகை.

ஆக, பிராட்டி எம்பெருமானுடன் தான் கூடியிருக்கும் போது தன் உபதேஶத்தால் சேதநன் எம்பெருமானை ஆஶ்ரயிக்க இசைந்திருப்பன். அச்சேதநன் அதற்கு முன்பு பண்ணின அபராதத்தையே பார்த்து ''எம்பெருமான் அச்சேதநனை ஏற்றுக்கொள்ளா திருக்குமளவில், அந்த எம்பெருமானின், யாவருக்கும் வஶப்படாது, தன் இஷ்டப்படி நடக்கப்பண்ணும் ''ஸ்வாதந்த்ர்யம்'' என்கிற தன்மையைத் தவிர்த்து எம்பெருமானிட முள்ள அவன் ஸ்வாதந்த்ர்யத்தால் அமுக்குண்டிருந்த க்ருபை முதலான குணங்களைக் கிளப்பி ஸ்வாதந்த்ர்யத்தை தலைசாயப்பண்ணி, தன்னை வந்து பற்றின இச்சேதநனை ஏற்றுக்கொள்ளும்படி பண்ணுகை. எம்பெருமானைப் பிராட்டி திருத்துகையாம்.

எம்பெருமானை விட்டுப் பிரிந்திருக்கும்போது எம்பெருமான் தன் க்ருபையால் சேதநனை அவன் குற்றங்களைப் பாராமல் ஏற்க இசைந்து வந்திருக்கும்போது, இந்தச் சேதநன் தான் பண்ணின புண்யபாபமாகிற வினையடியாக எம்பெருமானருகும் வரவிரும்பாமலிருக்கும்போது, இச்சேதநனின் ப்ராதிகூல்யத்தை (எம்பெருமானைப் பற்றுதலில் விருப்பமின்மையை) மாற்றி விருப்பத்தை உண்டாக்கி எம்பெருமானைப்

பற்ற இசையும்படி பண்ணுகை – சேதநனைப் பிராட்டி திருத்துகையாம்.

ஆக, இவ்விதம் தன்னைப்பற்றின சேதநனை ஏற்றுக்கொள்ளத் தடையான எம்பெருமானின் ஸ்வாதந்த்ர்யத்தை மாற்றி ஏற்றுக்கொள்ளுகைக்கு உடலாக க்ருபை முதலிய குணங்களை மேலெழும்படி செய்பவள்; எம்பெருமான் தன்னை ஏற்க ஸித்தமாய் வந்திருக்கும்போது சேதநன் அவனைப் பற்ற இசையாமலிருக்கும் தன்மையைமாற்றி எம்பெருமானைப் பற்றுவதில் விருப்பம் முதலானவையை உண்டாக்குமவள் பிராட்டி என்பது – பிராட்டிக்கு வாசகமான பெயரான ''ஸ்ரீ:'' என்கிற சொல்லாலேயே கிடைக்கிறது. எப்படி எனில் – ''ஶ்ரூ ஹிம்ஸாயாம்'' என்றொரு தாது; அந்த தாதுவிலிருந்து ''ஸ்ரீ:'' என்கிற சொல் உண்டாகிறது. அந்த தாதுவுக்கு ''போக்குகை'' என்பது பொருள். ஆகவே ஸ்ரீ: – பெரியபிராட்டியார் எம்பெருமானிடமுள்ள, தன்னைவந்து பற்றின சேதநனை ஏற்கத்தடையானபடியால் குற்றமாக எண்ணப்படுகிற ஸ்வாதந்த்ர்யத்தைப் போக்குகிறாள். ஆகவே ஸ்ரீயாகிறாள். எம்பெருமான் தன்னை ஏற்க விரும்பி வந்திருக்கும் போதும் அவனைப் பற்றாமலிருக்கையாகிற சேதநனிடமுள்ள தோஷத்தை – குற்றத்தைப் போக்குகிறாள்; ஆகவே ஸ்ரீயாகிறாள். அதேபோலே ''ஶ்ரூ–விஸ்தாரே'' என்றொரு தாது. அந்த தாதுவிலிருந்தும், ''ஸ்ரீ:'' என்ற சொல் உண்டாகிறது. அந்த தாதுவுக்கு ''பெருக்கச்செய்கை'' என்று பொருள். ஆகவே ''ஸ்ரீ:'' – பெரிய பிராட்டியார் எம்பெருமானின் சேதநனை ஏற்கப்பண்ணும் க்ருபை முதலான குணங்களைப் பெருக்க மடையச் செய்கிறாள்; ஆகவே ஸ்ரீயாகிறாள். அதேபோலே சேதநனின், எம்பெருமானையே தனக்குப் புகலாகப்பற்ற விரும்புகை முதலான குணங்களைப் பெருக்கச்செய்கிறாள். ஆகவே, ''ஸ்ரீ:'' எனப்படுகிறாள்.

எம்பெருமானையும் சேதநனையும் திருத்துவது எவ்வழியாலே? எனில், இருவரையும் திருத்துவதும் உபதேசத்தாலே. அதாவது – எம்பெருமானுடன் கூடியிருக்கும் போது, பிராட்டி ஒரு சேதநனை ஏற்கனவே திருத்தி அந்த எம்பெருமான் முன்பு பொகட்டு ''இவனை தேவரீர் ஏற்கவேணும்'' என்பாள்; அப்போது எம்பெருமான் எல்லாமறிந்தவனாகையாலே தன்முன் நிற்கும் சேதநனுடைய எல்லாக் குற்றங்களையும் நன்கறிந்து கணக்கிட்டு அவனை ஏற்க மறுப்பனாம்; உடனே பிராட்டி ''நீர் இவ்விதம் இவனைத் தள்ளிக் கதவடைத்தால் இவனுக்கு வேறொரு புகலுண்டோ. உமக்கும் இவனுக்கும் உள்ள உறவைப்பார்த்தால் ''உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது'' (எம்பெருமானும் சேதநனுமாகிய நமக்குண்டான உறவோ என்றால் எம்பெருமானான உன்னாலும் ஒழிக்க ஒழியாது. என்னாலும் ஒழிக்க ஒழியாது. நாமிருவரும் உடன்பட்டு ஒழிக்கப்பார்த்தாலும் ஒழிக்க ஒழியாத உறவு) என்று ஆண்டாள் அருளிச்செய்கிறபடியே ஒழிக்கஒழியாததன்றோ. சேதநனுக்கும் எம்பெருமானுக்கும் உண்டான உறவு ஒன்பது விதம். (தொடரும்)

# கைகேசியின் மனமாற்றம்

**(ஸ்ரீ.உ.வே.பக்ஷிராஜய்யங்கார்ஸ்வாமி)**

மிதிலை நகரத்திலே திருமணம் முடிந்ததும் தன் தாய்மாரை வணங்கச் செல்லும் ராமன் முதன் முதலாகக் கைகேசியின் பாதங்களிலே வணங்குகிறான். அவனைத் தொடர்ந்து சீதையும் அவளையே முதலில் வணங்குகிறாள். அயோத்தி யிலே தான் பிரியத்துடன் வளர்த்துவந்த அழகிய கிளியைக் கையிலேந்தி அன்புததும்பும் முகத்தோடு 'என் கிளிக்கு யார் பெயரை இடுவது?' என்று சீதை கொஞ்சி வினவ, ராமன் 'கைகயன் மாது; என் அன்னை தன் பெயர் ஆகுக,' என்று கைகேசியின் பெயரையே இடச்சொல்கிறான். கைகேசி ராமனைப் பெற்ற தாயா? பின் ஏன் அவளுக்கு இவ்வளவு மரியாதை. அவளிடம் இவ்வளவு ப்ரேமை? பெற்ற தாயினும் பன்மடங்கு அதிகமாக அவள் ராமனிடம் அன்பாய் நடந்ததே அதன் காரணம். ராமன் இவ்விதம் அவளிடம் காட்டிய பக்தி ஒரு போதும் மாறியதில்லை. அவன் அவளைத் தாயாக மட்டுமா கருதினான். தெய்வ மாக வழிபட்டான். ராவணவதம் முடிந்தபிறகு தேவர்களுடன் தன்னை வாழ்த்த வந்த தந்தையிடம் வரம் வேண்டும் போது கைகேசியைக் குறித்து 'தீயவள் என்று நீ துறந்த என் தெய்வமும்' என்று ராமன் கூறுவதைக் காண்கிறோம்.

இவ்வளவு அன்பும் பக்தியும் தன்பால் கொண்ட ராமனிடம், கைகேசிக் கும் அளவிறந்த அன்பும் கருணையும் இருந்திருக்கவே வேண்டும். அவ்வாறு இருந்ததாகவே பலவிடங்களிலும் காண்கிறோம். ஆனால் ராமன் காடு செல்வானேன்; அதற்கு அவளன்றோ காரணம். கைகேசி ஏன் அவ்வன்பைத் துறந்தாள். எவ்வாறு எப்போது துறந்தாள். அவள் ராமனிடம் காட்டிய கொடுமை அதன் பின் அவளுடன் என்றுமே நிலைத்திருந்ததா? இல்லையானால் அவள் மனம் கொடுமையிலிருந்து மறுபடி அன்பு நிலையை எப்போது அடைந்தது? என்றெல்லாம் பலவிதமான கேள்விகள் எழுகின்றன.

அயோத்தியிலே மந்திரிப் பிரதானிகள் நிறைந்த சபை முன்னே தசரதன் ராமனுக்கு முடிசூட்டத் தீர்மானிக்கிறான். அந்த நற்செய்தி நகரமெங்கும் முரசறைவிக்கப்படுகிறது. ஜனங்களிடையே தோன்றிய குதூகலம் அளவிட முடியுமா? ஒவ்வொருவரும் தாமே முடிசூடுவதுபோன்று எண்ணி, களிக்கின்ற னர். நகரமெங்குமே மகிழ்ச்சி நிறைகிறது.

மனிதனுடைய வாழ்க்கையில் கேடு என்பது கேட்டுக்கொண்டா வருகிறது? எதிர்பாராமல் தோன்றி திகைப்பும் சோகமும் விளைப்பது தானே அதன் இயற்கை! அயோத்தி மக்களுக்கு இல்லை, இவ்வுலகுக்கே – ஒரு பெரிய கேடு வருகிறது.

எங்கிருந்தோ 'தோன்றினள் கூனியும்'' ''யதோ ஜாதா'' என்கிறார்

வான்மீகி முனிவரும். எவ்விதமாக அவள் அங்கு தோன்றினுள் என்று கேட்பதற் கில்லே. கோபமும் பொருமையும் உள்ளேகிடந்து பொங்க, தீமையே போல வருகிருள். ராவணன் செய்த தீமையை கூனியாக உருவெடுத்தது என்கிருர் கவிஞர்.

ராமனுக்கு ராஜ்யாபிஷேகம் என்றதும் கூனியின் இருண்ட மனசிலே பழைய காட்சிகள் பளிச்சென்று தோன்றுகின்றன. உள்ளே புழுங்கிய வஞ்ச உணர்ச்சி சீறி எழுகிறது. ''ராமன் பால்யத்தில் கையில் வில்லெடுத்து, சிறு மண்ணுருண்டைகளே வில்லில் கோத்து எறிகிருன். தெருவோடு கெந்திச் செல்லும் கூனியின் வளேந்த முதுகு அவனுடைய உண்டைக்கு இலக்காகிறது. சிறுவனுக்கு விளேயாட்டு; ஆனுல் கூனிக்கோ கொதிப்பு. சக்ரவர்த்தி மகன். என்ன சொல்வது? என்று வருந்திய மனத்தோடு போகிருள். அதே சிறுவன் இப்போது சக்ரவர்த்தியாகப் போகிருன் எனத்தெரிந்த அவள் நெஞ்சம் வேதனேயில் துடிக்கிறது. தன் பழியைத் தீர்த்துக்கொள்ள இதுவே தருணம் என்று துணிகிருள். கைகேசியின் கோயிலே நோக்கி விரைவாகப் போகிருள். கவிஞரின் கற்பனே பின் தொடர்கிறது.

திருப்பாற்கடல் அலேநடுவே ஒருபவளக் கொடி படர்ந்திருக்கிறது. அதில் ஒளிவீசும் ரத்னங்களேயும் அழகு மலரும் தாமரைகளேயும் பூத்திருக்கின்றது. அக்காட்சியைக் காண்கிருர் கம்பர். என்ன அபூத வர்ணனே என்று வியக்கிருேம். ஆனுல் கூனியோடு சென்ற கம்பர், அந்தப்புரத்திலே, நுரை போன்ற வெள்ளிய பாயலின் மீது துயிலும் கைகேசியைக் கண்டதும் தாம் அறிந்த உண்மையையே கூறினுர். அவள் உறங்குகிருள். எனினும் அவள் காருண்யம் மூடிய இமைகளே யும் கடந்து பொங்கி ததும்புவதைக் கவிஞர் காண்கிருர்.

அரசியாயிற்றே உறங்குகிருளே என்று கூனி தயங்குகிருளா? கூசாமற் போய் கைகேசி பாதங்களேத் தொடுகிருள். கைகேசியை ஒரு கால சர்ப்பம் தீண்டியதாகவே கம்பருக்குப் படுகிறது.

கைகேசி எழுகிருள். தூக்க கலக்கம் இன்னும் நீங்கவில்லே. கூனி பேசுகிருள்; ''உன்னேப் பெருங்கேடு சூழ்கிறது. ஆனுல் நீயோ உணர்ச்சியின்றி உறங்குகிருய்.'' தீங்கு என்பது உண்டு என்று கூட கைகேசி இதுவரை கருதியதில்லே. உலகிலே வேதம் நிலவுமானுல் தீமை இருக்க முடியுமா? ராமனே மகனுகப் பெற்ற என்னே எந்தத் தீங்கு அணுகமுடியும்? என்று கேட்கிருள் அவள்! ராமனிடம் தான் அவளுக்கு என்ன அன்பு! அதில் எத்தனே அழுத்தம்! அவனே மகன் என்று சொல்லிக் கொள்வதில் எத்தனே பெருமிதம்!

ஆனுல் கூனியா விடுபவள்? கைகேசியின் அன்புக்கோட்டையைத் தகர்க்க வேறு வழி தேடுகிருள். பெண்களுக்கு கோபமூட்ட அவள் சக்களத்தியைப் பற்றி உயர்த்திக் கூறுவதைத் தவிர வேறு நிச்சயமான வழியுண்டோ? அதையே

கூனியும் பின்பற்றுகிறுள். ‘‘உன் மாற்றுள் கோசலை பெருவாழ்வு பெற்று விட்டாள். உனக்கு உறக்கம்தான் கண்டபலன்’’ என்கிறுள்.

கூனியின் கொக்கரிப்பு கைகேசியின் தற்பெருமையில் தைக்கிறது. தான் தனது என்ற ஆங்கார எண்ணம் மேலிடுகிறது. முன் ராமனைப்பெற்ற எனக்கு என்ன குறை என்றவள்; சக்ரவர்த்தி என் கணவன்; மகனே புகழ்பெற்ற பரதன்; இதைவிட அவளுக்கு வந்த வாழ்வு என்னடி? என்று கேட்கிறுள்.

கூனிக்கு அவள், ‘‘பரதன் என் மகன்’’ என்று சொன்னதில் சற்று திருப்தி. இனி மெதுவாக ராமனைப் பற்றிக் கூறலாம் என்று தைரியம் கொள்கிறுள். ராமர் பட்டாபிஷேகச் செய்தியை அவளுடைய கோணல் மணம் விபரீதமாகச் சித்திரிக்கிறது.

‘‘புருஷோத்தமனை ராமனைக் கண்டு நகைக்கிறுர்களாம் உலகில் உள்ள ஆடவர்கள் எல்லாரும். உலகில் ஆண்மையே வெட்கித் தலைகுனிந்ததாம்.ஏன்? ராமன் தாடகையை வதை செய்தானல்லவா?வேறு என்னவேண்டும் இழிவு? பயங்கர ரூபம்; நெருப்புக் கண்கள்; குகை போன்ற வாய்; ஊண் தொங்கிய விகாரமான கோரப்பற்கள்; ஒரு கையில் மலையும், ஒரு கையில் சூலமும் ஏந்தியவளாய், மலைகளைத் தூளாக மிதித்து, இடியும் அஞ்ச ஆரவாரம் செய்து ராமன் முன் தோன்றிய தாடகை கூனியின் கோணப் பார்வையில் பெண் நலன் எல்லாம் உடைய ‘‘தையல்’’ ஆகிவிடுகிறுள். அத்தகைய உத்தமான ஒரு நங்கையை கொல்ல ராமன் வில்லையா வளைத்தான் ஆண்மையின் நேர்மையை அல்லவா வளைத்துவிட்டான். இந்தப்பெண்கொல்லி வீரன், தொன்று தொட்டு புகழோங்கி விளங்கிய இக்ஷ்வாகு குலமணி முடியை நாளைச் சூடப்போகிறுன். ஆண்மையையும் வீரத்தையும் பெண்கொலைசெய்து பழிக்கவல்லவன் சக்ரவர்த்தியானுல் வேறு விபரீதம் என்ன வேண்டும்? இதைவிட உன் மாற்றுளுக்கு வேறு என்ன செல்வம் வேண்டும்? என்று அடுக்குகிறுள் கூனி.

ஆனுல் ராமன்பால் இயற்கையில் தான் கொண்ட அன்புதான் கைகேசி யிடம் இன்னமும் தோன்றுகிறது. ராமபட்டாபிஷேகமாகிய மகிழ்ச்சிச் செய்தியை கொணர்ந்ததற்காக அவள் ஓர் உயர்ந்த ரத்னமாலையை கூனிக்குப் பரிசாக அளிக்கிறுள்.

கூனியோ சீற்றத்தோடு மாலையைப் பிடுங்கி எறிகிறுள். கைகேசி சேடியின் செயலைக் கண்டு அசைவற்றுப்போகிறுள். தன்னை இவ்வாறு அவமதித்த தாதியை அவள் கோபிக்கிறுளா? கூனி மேலும் பேசுகிறுள். ‘‘உனக்கு என்ன உவகை வேண்டியிருக்கிறது? வெறும் பகட்டுக்காரியான சீதையும்; விகாரமாகக் கறுத்த மேனியையுடைய ராமனும் – என்ன ஜோடி! இவர்கள் கோப்புடைய சீரிய சிங்காதனத்தில் வீற்றிருக்க நீ பெற்ற மகனை பரதன் அவநதனுய், வெறுந்தரையில் கைகட்டி நின்று, சேவகம் செய்யப் போவதைக் காண்போம்

என்று உவகையா? உன் மாற்றுள் தன் மகனுடைய நல்வாழ்வில் கருத்துள்ள வளாய், காலமறிந்து செய்வன செய்து பெருஞ்செல்வத்தைப் பெற்றுவிட்டாள். உன் வயிற்றிலே வந்து பிறந்த தோஷம், எல்லாச் செல்வங்களையும் அடையத் தகுதியுள்ள பரதன், இனி இறந்தவர்களோடு வைத்து எண்ண வேண்டியவனுகி விட்டான். ஆம்! இப்போது தெரிந்தது தசரதன் வெகு பரிவோடு பரதனைக் கேகய நாட்டுக்கு அனுப்பியதன் உண்மைக்காரணம். என்ன ஜாலம்! அவளுடைய பேதித்த மனத்திலே ஒவ்வொரு சாதாரண நிகழ்ச்சிக்கும் ஒரு விபரீத காரணம் கற்பிதமாகின்றது. பரதனிடம், தசரதனையும் கைகேசியையும் விட அவளுக்குத் தான் அன்பாம்! ''தந்தை வஞ்சகமாக உன்னை நாடு கடத்திஞன்; மாற்றவள் மகன் செல்வம் கண்டும் தாய் மனம் மகிழ்கிறுள். இத்தகைய கொடிய தந்தையையும் தீய தாயையும் உடைய பரதனே, உனக்கு இனி தெய்வம் தான் துணை'' என்று சாமர்த்தியமாக ஒரு கபட நாடகம் நடிக்கிறுள்.

படுக்கையிலே கூனியாகிய காலசர்ப்பம் அவளைத் தீண்டியதல்லவா. அதன் விஷம் கைகேசியின் மனத்துள்ளே பரவத்தொடங்குகிறது. தருமசிந்தை தலையெடுத்துப் பேச வழியில்லை. எனினும் இயல்வான அவள் நீதியுள்ளம் பேச முயற்சி செய்கிறது. ஆனுல் என்ன தோல்வி! தன் தாதியைச் சினந்து கூறி வெளி யனுப்ப அவளுக்குத் தைரியம் இல்லாது போய்விடுகிறது. ''நீ எனக்கும் பரதனுக்கும் நன்மை செய்பவளா. நான் பொறுத்தேன். இதைப் பிறர் அறிந்தால் என்ன நினைப்பார்கள் போடி அறிவிலி'' இவ்வளவே அவளால் கூறமுடிகிறது.

கூனி தன்னுள்ளே மகிழ்ச்சி கொள்கிறுள். வெற்றி தன்னதே என்று அவளுக்குத் தைரியம் பிறக்கின்றது. கைகேசியின் மனம் சலனமடைந்து விட்டது என்று உணர்ந்துகொள்கிறுள். நீதி தருமம், ராமன் பால் அன்பு, வஞ்சகம், பொறுமை, பரதன்பால் மோகம் என்னும் இப்பல்வேறு உணர்ச்சி ஜ்வாலைகளால் உருகி உருவற்ற நிலையிலுள்ள கைகேசியின் மனத்தைத் தன் பழியாகிய வார்ப்பிலே வடித்து உருவாக்கிவிடலாம் என்ற நிச்சயம் பிறக்கிறது கூனிக்கு. தன் பேச்சில் முழுவேகத்தையும் கொட்டுகிறுள். வார்த்தைகள் அடிபோல் பளீரென்று விழுகின்றன. தான் தாதி, அவள் அரசி என்ற நினைவே போய்விடுகிறது. மனேதிடமிழந்து அவளுக்குச் செவிகொடுக்கும் கைகேசி செயலற்று சுவதந்தரத்தையே பறிகொடுத்துவிடுகிறுள்.

''ராமனை நீ தர்மிஷ்டன் என்று மயங்குகிறுய். ஞானியாயினும் பெறுதற் கரிய செல்வம் பெற்றுல் அவன் சிந்தனை பிறழ்வது நிச்சயம். பழமையை உன்னி உனக்கு ஒரு கேடும், வேண்டுமென்று ராமன் செய்ய மாட்டான் என்றே கொள்வோம். ஆனுல், அவன் செல்வச் செருக்கால் செய்யும் எத்தனையோ செயல்கள், உன்னுடைய, உன் அருமை மகனுடைய, ஏழ்மையை பளிச்சென்று எடுத்துரைக்குமே. ராமன் அரசனுனல் கோசலை ராஜமாதா. அவள் மனமுவந்து

கொடுப்பதைத் தவிர உன்னது என்று நீ உரிமை பாராட்ட ஒரு பொருள் உண்டா? யாவும் அவளுடையதானுல் உன் உடைமைகள் யாவும் பிச்சை யேற்ற பொருள்கள்தானே உன்னை ஒரு ராஜமஹிஷி என்று பலர் வந்து எப்போதும் போல் யாசிப்பார்களே; அவர்களுக்கு நீ உன் மாற்றவளிடம் யாசித்துப் பெற்றுக் கொடுப்பாயோ, வந்தவர்க்கு இல்லை என்று சொல்ல வெட்கி உயிர் விடுவாயோ, அல்லது என்னிடம் கொடுப்பதற்கு யாதொன்றுமில்லை என்று ஈகை மறந்து வெட்கமின்றி உயிர் வாழ்வையோ? உன் தாய் வீட்டார் இங்கு வந்தால் அவர்கள் யார் செல்வத்தைக் காண்பார்கள். அவர்க்கு ஒரு உதவி வேண்டுமானுல் உன் மாற்ருள் தயவையா நம்பி இருக்கவேண்டும்?'' என்று பொழிகிருள் கூனி. கடைசியாக வருகிறது பிரம்மாஸ்திரம். இன்னும் கேளடீ. உன் அப்பனை ஜனகன் இன்னும் விட்டு வைத்திருப்பது தசரதன் உன் கணவனுகவிருப்பதால் என்பது உனக்குத் தெரியுமே. ராமன் சக்ரவர்த்தியாகி விட்டால், அவன் ஜனகன் அருகிருப்பானு, உன் அப்பன் பக்கம் இருப்பானு உன் அப்பன் காட்டுக்குத்தான் ஓடவேண்டும். அதற்கு நீ தான் உதவுகிருய்.

என்ன துடுக்கு! ஒவ்வொரு மொழியும் கூரிய பாணம் போல் கைகேசியின் பேதித்த மனசிலே தைக்கிறது. நஞ்சம் கலந்த அந்த மொழிகள் அவளுடைய தூயமனத்தை முற்றிலும் மாற்றிவிடுகின்றன. இயல்வாக உள்ள கருணை, அன்பு, தருமம், நீதி இவை அந்த நச்சுப் பெருக்கிலே மாய்கின்றன. கைகேசி கூனியின் போதனு மயக்கிலே ஆழ்ந்துவிடுகிருள்.

அந்தப்புரத்திலே கைகேசியைக் காணேம். பாற்கடலில் படர்ந்த பவளக் கொடியாகக் காட்சியளித்த அதே கைகேசி வஞ்சனையும் தீமையும் வடிவெங்கும் கொழுந்துவிடும் மூதேவியாகக் கவிஞர் கண்களில் தோன்றுகிருள். கூனியின் போதனை கைகேசியின் மனத்தை மட்டுமல்ல வடிவத்தையே அழித்து மாற்றி விடுகின்றது.

உலகத்திலே 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்பதல்லவா உண்மை. இங்கு அதற்கு மாருன நிலைமை உண்டாகிவிட்டதே என்று நாம் பதறுகிறோம். ''இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ'' என்று கூறிய கைகேசி இப்போது அவனைக் காட்டுக்கு அனுப்பத் தீர்மானிக்கிருளே. எதனுல் அவள் மனம் மாறியது? கூனியின் சாகஸம்தானு?'' அது மட்டும் இல்லை. கைகேசி ராமன் மீது வைத்த அன்பு கூனியின் போதனையால் மட்டும் மறைந்துவிடக் கூடிய அவ்வளவு அற்பமானதல்ல; வேறு தடுக்கமுடியாத காரணங்களும் உண்டு என்கிருர் கவி.

அரக்கர்கள் இதுவரை செய்துவந்த பாவம் முற்றி அழியும் காலம் வந்துவிட்டது. ராவணனின் தீமை கூனியின் உருவெடுத்தது. அப்பலனை அளித்தது. இது ஒன்ரு? தேவர்களும் மற்ற சாதுக்களும் இயற்றிய தவங்களும்

பலனளிக்காமல் போகுமா? தருமத்தின் வெற்றிக்காகச் சூழ்ச்சி செய்தனர் தேவர்கள். தீமையே தீமையை அழிக்கும் கருவியாக அமைந்தது. ''இமையோர் கள் வல்ல விரகு யார் வல்லார்?'' ''பரதன் என் மகன்'' என்றும் அவன் ராஜ்யமாள்வதைக் காணவேண்டுமென்றும், ஒரு ஆசையைக் கைகேசியின் மனசிலே தோற்றுவித்தனர் கூனிமூலமாக. கைகேசியின் ''தூய சிந்தையும் திரிந்தது'' ராமன் வனம் புகுகிருன். ராவண வதம் ஸங்கல்ப உலகிலே நிறைவேறி விடுகிறது.

இவ்வாறு அவள்மனம் திரிதலும், இயல்பிலேயே கைகேசியின் மனசில் உள்ள காருண்யம் தவிக்கின்றது. கைகேசியை விட அதற்கு மனமில்லை. ஆனுல் இமையோர் சூழ்ச்சி அவளை நோக்கி 'விரட்டு அதை' என்று உத்தரவிடுகிறது. அச்சூழ்ச்சிச் சுழலில் அகப்பட்டுக் கலங்கும் கைகேசி அருளைத் துறக்கிருள். உலகை வெறுக்கும் ஒரு சந்நியாசியைப்போல்.

''சீரை சுற்றித் திருமகள் பின்செல, மூசி விற்கை இளையவன் மூன் செல,'' காரை ஒத்த திருமேனியை உடைய ராமன் நகரத்து மாந்தரும் மகளிரும் ''ஆ! விதியே! ஓ!'' என்று புலம்ப ''வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள் தாழ்வினையது வர,'' மரவுரி தரித்துச் சடைமுடிதாங்கி, அயோத்தி நகரின் தெருவிலே போவதைக் கண்டும் கைகேசியின் மனம் இளகவில்லை ராமன் பிரிந்தமைக்கு ஆற்ருதவனுய் அவன் வனம் போனுன் என்ற சொல் கேட்டபோதே ஆவிபோன தசரதனைக் குறித்தும் அவள் துக்கிக்கவில்லை. தெய்வசங்கல்பம் அவள் மனசைக் கல்லினும் கடிதாக்கிவிட்டது.

மற்ருெரு காட்சி – சித்திரகூடமலை. ராமலக்ஷ்மண சீதை மூவரும் பர்ணசாலையிலிருக்கின்ருர்கள். பரதன் தன் சேனையோடும், நகரமக்களோடும், தன் தாய்மார் மூவரோடும் அங்கு வந்து சேருகிருன். 'தந்தை வலியனோ' என்று கேட்ட ராமனுக்கு உன் பிரிவாற்ருமல் அவன் உயிர்துறந்தான் என்று பதில் கிடைக்கிறது. ராமன் புலம்பி ஏங்குகிருன். தன் தாயரைக் கண்டதும் ''எந்தை யாண்டையான் இயம்புவீர்'' என்று கதறுகிருன். கவிஞர் சொல்லுகிருர் தாயார் மூவரும் (கைகேசியுள்பட) தம்முள் வேற்றுமையின்றி ராமனிடம் இரக்கம் கொண்டு அரற்றினுர்கள் என்று. அம்மூவரையும் 'ஒய்வில் அன்பினுர்' என்று அவர் குறிப்பிடுகின்ருர், கோசலை, சுமித்திரை இவர்களைப் பற்றியவரை இவ்வார்த்தைகள் சரி. கைகேசியைப் பற்றி எவ்விதம் அவர் இவ்வார்த்தைகள் கூறலாகும்? மேலே கைகேசியின் கொடுமை வெளியாகவில்லையா? அக்கொடுமை தேவர் மாயையால் விளைந்ததேனும் அம்மாயை அவளைவிட்டு எப்போது நீங்கிற்று என்பதாவது தெரியவேண்டுமல்லவா? (தொடரும்)

''அணியரங்கன் என்னமுதினை'' என்று திருப்பாணரும், ''மழைக்கன்று வரைமுனேந்தும் மைந்தனே அமுதவாறே'' என்று தொண்டரடிப்பொடியாழ் வாரும் அருளிச்செய்தனரன்றோ. *(83)*

*84.அரவிந்தி$_3$தமங்க்$_4$ரிபாணிவக்த்ரை: அபி தாபிஞ்சி$_2$தமஞ்சிதாங்க$_3$–*
*அத$_4$ரேண ச ப$_3$ந்து$_4$ஜீவிதம் ஸ்ரீ: நியதம் நந்தநயேத ரங்க$_3$சந்த்$_3$ரம்॥[ காந்த்யா*

**விளக்கவுரை:** பெரியபெருமாளை அழகிய நந்தவனமாக வருணிக்கிறார். நந்தவனத்தில் நல்ல தாமரைமலர்களும், பச்சிலைமரங்களும், பந்துஜீவ (உச்சித் திலக) புஷ்பங்களும் நிறைந்திருக்கும். பெருமாளிடத்தில் திருவடிகள், திருக்கைகள், திருக்கண்களாகிய தாமரைகள் பூத்திருக்கின்றன. திருமேனியா கிய பச்சிலைகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. பழுப்பேறின உதடு உச்சிச்திலக மலராய் செக்கச்செவேல் என்றுளது. இத்தகைய பெரியபெருமாளாகிய நந்தவனத்தில் பெரியபிராட்டியார் திருவிளையாடல் புரிவார்போலும்.

*85. அந்யோந்யரஞ்ஜகருசோநுபமாநஶோப$_4$ா:*
*தி$_3$வ்யஸ்ரக$_3$ம்ப$_3$ரபரிஷ்கரணுங்க$_3$ராக$_3$ா:।*
*ஸம்ஸ்பர்ஶத: புலகிதா இவ சிந்மயத்வாத்*
*ரங்கே$_3$ந்துகாந்திமதி$_4$காமுபப்$_3$ரும்ஹயந்தி॥*

விளக்கவுரை: பெரியபெருமாள் இயற்கையாகவே ஒப்பற்ற ஒளிவீசித் திகழ்பவராயுள்ளார். அவர் திருமேனியில் சார்த்திக்கொண்டிருக்கும் ஆபரணங்கள் சைதந்யமுடையவை. ஆதலால் ஒன்றுக் கொன்று போட்டி யிடுகின்றன. வைஜயந்தீ வனமாலை, அரையில் சாத்தியுள்ள திருப்பரியட்டம், திருவாபர ணங்கள், திருமேனியில் பூசிக்கொண்டிருக்கும் சந்தனம் இவைகள் சைதந்யமுடையவையாதலால் பகவானது திருமேனி ஸ்பர்ஶம்பட்டதனுல் மயிர்ச்கூர்ச்செறியப்பெற்றவைகளாய் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டுக் கொண்டு பேரொளிவீசித்திகழும் பெருமானது திருமேனி ஒளியை மேலும் அதிகப்படுத்துகின்றன.*(85)*

*86. த்$_3$ருத கநகஜகி$_3$ரிபரிமிலது$_3$த$_3$தி$_4$ப்ரசலிதலஹரிவத$_3$ஹமஹமிகயா।*
*ஸ்நபயதி ஜநமிமமபஹரதி தம: ப$_2$ணிஶயமரதக மணிகிரணக$_3$ண:॥*

**விளக்கவுரை:** பாம்பணைமேல் பள்ளிகொண்டிருக்கும் பெரியபெருமா ளாகிற மரகதப்பச்சையின் ஒளிக்கூட்டமானது பொன்மயமான மலை உருகி

ஸமுத்திரத்தில் சேர்ந்து அந்த ஸமுத்ரத்தில் வீசுகின்ற அலையானது பெருகி வந்து அடியேனை ஸ்நானம் செய்விக்கின்றது. எனதுஅகவிருளையும் போக்கு கின்றது. அரங்கன் மரகதப் பச்சைநிறத்தில் கடல் போலுள்ளான். தங்கநிற முள்ள பீதாம்பரத்துடனும் பெரியபிராட்டியாருடனும் இருப்பதால் தங்கமலை உருகிவந்தாற் போன்றுளது. உருகிய தங்கமலை பச்சைநிறத்தினை உடைய கடலோடு சேர்ந்து அலைவீசினுற் போல் பெரியபெருமாள் ஒளிவீசித் திகழ்கின்ருர்.

அந்த அழகு அலையில் அவர் என்னைஸ்நாநம் செய்து வைப்பாராக. எனது அஜ்ஞாநமாகிற இருளைப் போக்குவாராக. ''நீலமேனி ஐயோ! நிறைகொண்ட தென் நெஞ்சினையே'' என்ருர் திருப்பாணுழ்வாரும். *(86)*

*87.* பே$_4$ாகீ$_3$ந்த்$_3$ரநி:ய்ஶ்வஸிதஸௌரப$_4$வர்தி$_4$தம்
ஸ்ரீநித்யாநுஷக்தபரமேஶ்வரப$_4$ாவக$_3$ந்தி$_4$।
ஸௌரப்$_4$யமாப்லுததி$_3$ஶாவதி$_4$ ரங்க$_3$நேது:
ஆநந்த$_3$ஸம்பதி$_3$ நிமஜ்ஜயதே மநாம்ஸி॥

**விளக்கவுரை:** கீழே தன்னை நீராட்டுவிக்க வேண்டினுர். மணம்மிக்கவனுக ஆக்கியருளுமாறு வேண்டுகிருர் இதில். கீழே ஒளியாகிய ஸமுத்ரத்தில் மூழ்கியதாகச் சொன்னுர். இதில் ஆநந்தஸாகரத்தில் மூழ்குவித்தமையைச் சொல்லுகிருர்.

''ஸர்வக$_3$ந்த$_4$: ஸர்வரஸ:'' என்கிற எம்பெருமான் எப்போதும் பரிமளம் மிக்க திருமேனியை உடையவன். அவன் மேன்மேலும் வாசனைஊட்டப் பெறுகிருன். எவ்வெவற்ருலெனின் படுக்கையாகிய ஆதிஶேஷனது மூச்சுக் காற்றினுல் வளர்க்கப்பெற்றதாயும், பிராட்டியோடு நித்யஸம்யோகத்தாலுண் டான ஸர்வேஶ்வரனும் தன்மையினுலும், மணம்மிக்கதாய் நாற்றிசையிலும் வியாபித்திருக்கக்கூடிய பெரியபெருமாளின் பரிமளம், தரிசிக்கபடுமவர்களது உள்ளத்தை ஆநந்தச்செல்வத்தில் மூழ்குவிக்கின்றது. ''க$_3$ந்த$_4$த்$_3$வாராம்''என்று ஸ்ரீஸூக்தத்தில் சொன்னபடி பிராட்டியின் மனமும், ஆதிஶேஷனது மூச்சுக் காற்றின் மணமும் பெருமாளை மேலும் மேலும் மணக்கச்செய்கிறது.

*88.* ரங்க$_3$ப$_4$ர்த்துரபி லோசநசர்ச்சாம் ஸாஹஸாவலிஷு லேக$_2$யமாநம்।
புஷ்பஹாஸ இதி நாம து$_3$ஹாநாம் ஸௌகுமார்யமதிவாங்மநஸம் ந:॥

விளக்கவுரை: கீழே திருமேனியின் பரிமளத்தைப் பேசினுர்.

## மஹநீயர்களைப்போற்றுவோம்–5
## காரப்பங்காடு ந்யாயவேதாந்தவித்வான் ஸ்ரீ.உ.வே.வேங்கடாசார்யஸ்வாமி

(சென்றவிதழ் தொடர்ச்சி)

**7. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம்:** ஸ்ரீபராஶரபட்டர் அருளிச்செய்த பாஷ்யத்துடன் விரிவாக காகுமானி சாரிடி, திருவல்லிக்கேணி வானமாமலை மடம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

**8. மஹாபாரதம்**: ஸ்ரீபார்த்தஸாரதி பக்த ஸமாஜம் ஆதரவில் திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் ஒரு ஶ்லோகம் விடாமல் நடந்தது.

**9.ஸ்ரீவசநபூஷணம்**: மயிலை மாதவன் ஸந்நிதி, டவுனில் ஒருமுறை, திருவல்லிக்கேணியில் மூன்றுமுறைகள் காலக்ஷேபக்ரமத்தில் விரிவாக நடைபெற்றது.

10**. முமுக்ஷுப்படி:** சென்னையில் சுமார் பத்து தடவைகளுக்கு மேல் பலவிடங்களிலும் விரிவாக நடைபெற்று பல ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்வரூபஜ்ஞாநம் பெற்றனர்.

11**.ஆசார்யஹ்ருதயம்:** டவுனிலும், திருவல்லிக்கேணியிலும், மயிலையிலுமாக மூன்று முறைகள் காலக்ஷேப க்ரமத்தில் பூர்த்திபெற்றது. ஸ்வாமி திருமாளிகையிலும் ஒருமுறை விரிவாக நடந்து பூர்த்தியடைந்தது.

**12. தத்வத்ரயம்:** திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் ஒருமுறை விரிவாக நடந்து பலர் தத்த்வத்ரயத்தை பற்றிய தெளிவைப்பெற்றனர்.

**13. திவ்யப்ரபந்தங்கள்:** சென்னை கீதா சங்கத்தின் ஆதரவில் நாச்சியார்திருமொழியும், காகுமானி சாரிடியின் ஆதரவில் திருவிருத்தமும், திருமழிசை டி.ஏ.ரங்காசார்யர் அகத்தில் திருநெடுந்தாண்டகமும் விரிவாக நடைபெற்றன. திருப்பாவை காலக்ஷேபம் ஐம்பது தடவைகளுக்கு மேல் ஸாதித்திருக்கிறார் ஸ்வாமி. திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதியில் அஷ்டஶ்லோகியும், வானமாமலை மடத்தில் சது:ஶ்லோகியும் வ்யாக்யாநங்களுடன் விரிவாக நடைபெற்றன.

மாம்பலம் காலக்ஷேபங்களுக்காக ‘அமுதம்’ என்னும் மண்டபம் அமைத்து இடவசதி செய்து பேருபகாரம் புரிந்தார் டி.ஏ.ரங்காசார்யஸ்வாமி. க்ரந்தகாலக்ஷேபங்கள், உபந்யாஸங்கள் தவிர, திருப்பாவை ஸதஸ்ஸுக்கள், வித்வத் ஸதஸ்ஸுக்கள், ஆரம்ப விழாக்கள், நூல்வெளியீட்டு விழாக்கள் பலவற்றுக்கும் ஸ்வாமி சென்று பங்கேற்றதுண்டு. எந்த இடத்திலும் எந்த ஸந்தர்ப்பத்திலும் ஸ்வாமியுடைய திருவாக்கு ஒருபோதும் பழுதுபோனதில்லை. ரஸிகர் உள்ளத்தைக் கவர ஸ்வாமி ஒருபோதும் தவறியதில்லை.

**பொருள்வழித்தூய்மை:** எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்வாமியுடைய பண்பு மிளிர்வது அவர் பொருள்வழியில் கடைபிடித்த தூய்மைதான். ஸ்வாமியுடைய குடும்பம் பெரியதாய் இருந்தாலும் அவர் தேஹயாத்ரை பற்றிக்கவலைப்பட்டதே கிடையாது. எதுவாயிருந்தாலும் கர்மாநுகுணமாக நடப்பது நடக்கட்டும் என்றே ஆறியிருந்தவர் ஸ்வாமி. ‘வேதாந்தத்துக்குப் பயன் பொன்னும் பொருளுமன்று; புகழும் பூஜையுமன்று; மன ஸந்துஷ்டியே – வாழ்க்கை அமைதியே’ என்ற நிஷ்டையுடன் இருந்தவர் ஸ்வாமி. ‘பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகம் இல்லை’ என்று எவ்வழியிலும் பொருள் தேடும் இயல்புடைய இன்றைய உலகில் ஸ்வாமி ஒருவிதிவிலக்கு. வேதாந்தத்தை விலை பேசி

விற்காத தனிச்சிறப்பு இவருக்கு உண்டு.

**ஶிஷ்ய ஸம்பத்து:** சென்னை கேஶவப்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்ய கோஷ்டியில் அந்வயித்த ஶிரோமணிகள் – ஸ்ரீ.உவே.வேளுக்குடி வரதாசார்யஸ்வாமி, ஸ்ரீ.உ.வே.ஶதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்யஸ்வாமி, ஸ்ரீ.உ.வே.பிள்ளைலோகம் பாஷ்யகாரஸ்வாமி, ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு ரங்கராமாநுஜாசார்யஸ்வாமி போன்றோர். பிறகு ஸ்வாமி திருமாளிகையில் நடைபெற்றுவந்த ஸ்ரீபாஷ்யபகவத்விஷய காலக்ஷேப கோஷ்டியில் ஸ்ரீ.உ.வே.ப்ருந்தாவனம் கோவர்த்தனம் ரங்காசார்யஸ்வாமி, திருமணி ஸ்வாமி திருக்குமாரர்கள், ஸ்ரீ.உ.வே.பிள்ளைலோகம் ஸ்தலஶயநத்துறைவார், ஸ்ரீ.உ.வே. மேல்கோட்டை லக்ஷ்மீ தாதாசார்யஸ்வாமி, ஸ்ரீ.உ.வே. மேல்கோட்டை அரையர் ஸ்ரீராம ஶர்மாஸ்வாமி ஆகியோருடன் அடியேனும் (வர்த்தமான எம்பார்ஜீயர்ஸ்வாமி) அந்வயித்து வந்தவன். ஸ்ரீவில்லிப்புத்தூர் வித்வான் வி.கே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி போன்ற சிலரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதுவரை வர்த்தமான எம்பார்ஜீயர்ஸ்வாமி பூர்வாஶ்ரமத்தில் எழுதியதைக் கண்டோம். அடுத்து, காரப்பங்காடுஸ்வாமியைப்பற்றி **ஸ்ரீ.உ.வே.திருநாராயணபுரம் அரையர் ஸ்ரீராமஶர்மாஸ்வாமி** பல்வேறு காலகட்டங்க ளில் ஸாதித்த விஷயங்களின் தொகுப்பைக் காண்போமாக.

ஸ்ரீ.உ.வே.காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமி ஆஶ்ரயித்த குருபரம்பரைக் குண்டான வைபவங்களையும், இந்த குருபரம்பரையில் தோன்றிய மஹான்களுடைய (குறிப்பாக மைசூர் அநந்தாழ்வான்ஸ்வாமியுடைய) வழிகளை ஸ்வாமி எப்படிப் பின்பற்றி வந்தார் என்பதைப்பற்றியும் ஒருசிலவிஷயங்களை விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

அடியேன் திருநாராயணபுரத்தைச் சேர்ந்தவன். இந்த திவ்யதேஶம் நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் ஜ்ஞாநமண்டபமாகப் போற்றப்படுகிறது. ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் எல்லாவற்றையும் வரியடைவே கற்பிக்க பல மஹான்கள் இங்கே எழுந்தருளி இருந்தபடியால் இந்த திவ்யதேஶத்தைச் சேர்ந்தவர்களுக்கு வித்யைகளை அதிகரிப்பதற்காக வேறு எந்த இடத்திற்கும் செல்ல அவஶ்யம் ஏற்படவில்லை. அடியேன் பிறந்தது, வித்யாப்யாஸம் செய்தது, இன்று வரை வாழ்ந்து கொண்டு வருவது எல்லாம் அநேகமாக திருநாராயணபுரத்திலேயே. இருப்பினும் திருநாராயண புரத்தை விட்டு வெளியேறி நம் காரப்பங்காடு ஸ்வாமியை ஆஶ்ரயித்து அவர் திருவடிவாரத்தில் பல க்ரந்தங்களை அதிகரிக்கும் வாய்ப்பைப் பெற்றதை அடியேன் பெரும்பேருகக் கருதுகிறேன். அடியேனுக்கு இந்தப்பேறு எப்படி வாய்த்தது என்பது பற்றி முதல்முன்னம் சிலவிஷயங்களைச் சொல்கிறேன்.

1950ம் ஆண்டு என்று நினைவு. மைசூர் மஹாராஜாவுக்குண்டான ராஜ்ய பரிபாலந அதிகாரத்தை அரசாங்கம் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டுவிட்டது. அடியேனுடைய மாதாமஹர் ஸ்ரீ.உ.வே.ஜக்குவேங்கடாசார்யஸ்வாமி ராஜாவுடைய ஆஸ்தாந வித்வானுக எழுந்தருளியிருந்தார். ராஜ்யபரிபாலந பாரம் நீங்கிவிட்டபடியால்

இனியாவது அத்யாத்ம ஶாஸ்த்ரத்தில் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று ராஜாவுக்கு அறிவுரை கூறினார். ராஜாவுடைய முன்னோர்களில் ஒருவரான சிக்கதேவராஜர் என்பவர் திருநாராயணபுரத்தில் யதிராஜஸம்பத்குமாரன் திருமுன்பே ஸமர்ப்பித்த முப்பது விண்ணப்பங்கள் கொண்டதான 'சிக்கதேவராஜவிண்ணப்பம்' என்னும் நூலை ப்ரகாஶமடையச்செய்யவேண்டும் என்றும் அறிவுரை கூறினார். அதன்படி 1951வது வருஷம் அரண்மனையில் உள்ள கண்ணன் ஸந்நிதியில் ஸ்ரீ.உ.வே.ஜக்கு வேங்கடாசார்ய ஸ்வாமியே 'சிக்கதேவராஜவிண்ணப்பம்' என்னும் க்ரந்தத்திலுள்ள விஷயங்களைப்பற்றி உபந்யஸித்தார். அடுத்தவருஷம் யாருடைய உபந்யாஸத்தை வைத்துக்கொள்வது என்னும் கேள்வியெழுந்தது. 'சிக்கதேவராஜ விண்ணப்பம்' என்னும் இந்த க்ரந்தம் பழைய கன்னடமொழியில் அமைந்ததாகும். பழையகன்னட மொழி என்பது அநேகமாகத் தமிழ்மொழியைப் போலத்தான் இருக்கும். ஆங்காங்கே சிறிது மாற்றம் செய்தால் அப்படியே தமிழ்மொழியாக மாறிவிடும்.

ஸ்ரீராமாநுஜபுரம் என்று ஒரு அக்ரஹாரம் மண்டயம் பக்கத்திலே உண்டு. அங்கே (அநந்தாண்பிள்ளை) திருநாராயணய்யங்கார் என்று ஒருஸ்வாமி எழுந்தருளி இருந்தார். இவர் குன்னத்தூர் ஐயன் – அப்பன் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி வம்ஶத்தைச் சேர்ந்தவர். இவர் அந்தக் காலத்தில் Assistant Commissioner ஆகவும் இருந்தவர். இவர் மைசூர் மஹாராஜாவுக்கு மிகவும் நெருங்கியவர். இவர் 'சிக்கதேவராஜ விண்ணப்பம்' என்னும் இந்த நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்த நூலை விஷயமாகக் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ.உ.வே.காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமியுடைய உபந்யாஸத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அடியேனுடைய தாத்தா இவர் மூலம் மஹாராஜாவுக்கு அறிவுரை கூறினார். இதன்படி 1952ம் ஆண்டு ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு ஸ்வாமி திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளி யதுகிரி நாச்சியார் ஸந்நிதியில் திருப்பாவை மண்டபத்தில் இந்த நூலை விஷயமாகக் கொண்டு ஏழுநாள்கள் உபந்யஸித்தார். இந்த ஏழுநாள்களும் காலையில் வானமாமலை மடத்தில் ஸ்வாமியுடைய இராமாநுசநூற்றந்தாதி உபந்யாஸங்களும் நடைபெற்றன. அந்தக் காலத்தில் திருநாராயணபுரத்தில் காரப்பங்காடு ஸ்வாமி என்று ஸ்ரீ.உ.வே.காரப்பங்காடு தேஶிக வரதாசார்ய ஸ்வாமியைத்தான் அனைவரும் குறிப்பிடுவர். இந்த ஸ்வாமி ஆஶ்ரம ஸ்வீகாரம் கொண்டது திருநாராயணபுரத்திலே. அங்கு சுமார் முப்பது ஸ்வாமிகள் இவருடைய காலக்ஷேபகோஷ்டியில் அந்வயித்து ஸத்தை பெற்றனர். 'சிக்க தேவராஜ விண்ணப்பம்' உபந்யாஸம் முதற்கொண்டு இவருடைய ப்ரதாந ஶிஷ்யரான ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியுடைய வைபவமும் திருநாராயணபுரத்தில் ப்ரகாஶிக்க ஆரம்பித்தது. 'சிக்கதேவராஜ விண்ணப்பம்' தமிழ் மொழிபெயர்ப்பு நூலை ஸேவித்த காரப்பங்காடு ஸ்வாமி விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தினுடைய ப்ரமேயார்த்தங்கள் ஒன்றையும் விடாமல் சுருக்கமாக ஆனால் மிகவும் அழகான முறையில் எடுத்துச்சொல்லும் இந்த க்ரந்தத்தைப் போன்று எந்த பாஷையிலும் வேறு எந்த க்ரந்தமும் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை' என்று கொண்டாடிப்பேசினார்.

காரப்பங்காடு ஸ்வாமியுடைய உபந்யாஸங்கள் ஏழு நாள்களும் மிகச்சிறப்பாக நடைபெற்றன. சுமார் 350 வருடங்களுக்கு முன் தோன்றிய சிக்கதேவராஜ விண்ணப் பத்துக்கு நம் ஸ்வாமி ஸாதித்த உபந்யாஸங்கள் தான் வ்யாக்யாநமாக அமைந்துள்ளன. அடியேனுடைய தகப்பனர் ஸ்ரீ.உ.வே.அரையர் ஸ்ரீநிவாஸஐயங்கார்ஸ்வாமி தாம் கேட்கும் எந்த உபந்யாஸத்தையும் உடனே ஏடுபடுத்திக் கொண்டுவிடும் பழக்க முடையவர். அவர் ஏழு நாள்களும் தாம் ஏடுபடுத்திய காரப்பங்காடு ஸ்வாமியுடைய உபந்யாஸத்தை வானமாமலை மடத்தில் தங்கியிருந்த ஸ்வாமிக்கு தினமும் இரவில் படித்துக்காட்டி அவருடைய அங்கீகாரத்தையும் பெற்றார். கன்னட மொழியில் அமைந்திருந்த இந்த உபந்யாஸத்தொகுப்பு உடனே ஒருநூலாகவும் வெளியிடப் பட்டது. மஹாராஜாவுக்கு உபாத்யாயராக எழுந்தருளியிருந்த கோமடம் ஜோஸ்யர் ராமாநுஜாசார்யஸ்வாமி (நூறு திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்த வானமாமலை ஜீயர்ஸ்வாமி தம் பூர்வாஶ்ரமத்தில் மைசூரில் இவருடைய திருமாளிகையில்தான் இருந்துகொண்டு தர்க்கம் பயின்றார்) இந்த நூலை வெளியிட்டார். 'விஶிஷ்டாத்வைத ஸாரம்' என்று இந்த நூலுக்கு தலைப்பு கொடுக்கப்பட்டது. காரப்பங்காடுஸ்வாமி ஶதாப்தி நினைவாக இப்போது இதனுடைய இரண்டாவது பதிப்பும் வெளியிடப் பட்டுள்ளது. இது இன்றைக்கும் கன்னடமொழியில் ஒரு ப்ரமாணகாரக க்ரந்தமாய் விளங்கிவருகிறது. 'சிக்கதேவராஜவிண்ணப்பம்' உபந்யாஸங்களுக்குப் பிறகு காரப்பங்காடு ஸ்வாமியுடைய காலக்ஷேபங்களில் அந்வயிக்கவேண்டும் என்று திருநாராயணபுரத்தில் அடியேனுடைய தகப்பனர் உள்பட பலருக்கு ஆசை ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அடியேனுடைய தகப்பனர் அதைவிட்டு விலகி விநோபா பாவேயுடைய பாத யாத்ரையில் கலந்துகொண்டு பாரததேஶம் முழுவதும் சுற்றப்பயணம் மேற்கொண்டார். இக்காரணத்தினால் அவரால் காரப்பங்காடு ஸ்வாமியுடைய காலக்ஷேப கோஷ்டியில் அந்வயிக்க முடியவில்லை. தம்முடைய இந்தக் குறையை ஓரளவு நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு அவர் அடியேனை காரப்பங்காடு ஸ்வாமியிடம் அனுப்பிவைத்தார். இத்தால் அடியேன் சென்னையில் 1965 முதல் 1968 வரை காரப்பங்காடு ஸ்வாமியுடைய திருவடிவாரத்தில் பலக்ரந்தங்களை காலக்ஷேபம் கேட்கும் பாக்யம் பெற்றவனானேன். காலையில் ஸ்ரீபாஷ்யத்தை ஶ்ருதப்ரகா ஶிகை, பாவப்ரகாஶிகையுடன் காலக்ஷேபம் ஸாதிப்பர் ஸ்வாமி. ஸாயங்காலம் அடையவளைந்தான் அரும்பதவுரையுடன் பகவத்விஷய காலக்ஷேபம் நடைபெறும். அநந்யயந காலத்தில் ஆசார்யஹ்ருதயம் மணவாள மாமுநிகள் வ்யாக்யாநம், ஆயி வ்யாக்யாநம் இரண்டையும் வைத்துக்கொண்டு காலக்ஷேபம் ஸாதிப்பர்ஸ்வாமி. சில காலங்களில் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் சில பாகங்களையும் காலக்ஷேபம் ஸாதித்திருக்கிறார் ஸ்வாமி. ஸ்வாமியிடத்தில் இந்த நான்கு க்ரந்தங்களை மட்டுமே அதிகரிக்க அடியேனுக்கு ப்ராப்தமாயிற்று. ஸ்வாமியை ஆஶ்ரயிப்பதற்கு முன் அடியேன் ஏற்கனவே ஸ்ரீபாஷ்யம் ஶ்ருதப்ரகாஶிகையுடன் யதுகிரி யதிராஜஜீயர் ஸ்வாமியிடத்தில் அதிகரித்தேன். ஸ்வாமியை ஆஶ்ரயிப்பதற்கு முன்

ஆசார்யஹ்ருதயமும் மணவாளமாமுநிகள் வ்யாக்யாநத்துடன் திருநாராயணபுரத்தில் ஒருமுறை அடியேனுக்கு பாடம் ஆயிற்று. ஆயி வ்யாக்யாநத்துடன் ஆசார்யஹ்ருதயம் அடியேனுக்கு ஸ்வாமி ஒருவரிடமே காலக்ஷேபம் ஆயிற்று. ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரத்தில் மேல் பாகங்களை அடியேன் ஸ்ரீ.உ.வே.மேல்மா ந்ருஸிம்ஹாசார்ய ஸ்வாமியிடத்தில் அதிகரித்தேன்.

க்ரந்த காலக்ஷேபத்துக்கென்று ஏற்பட்டுள்ள வழிகளை க்ரமம் தப்பாமல் அநுஸரித்துத் தெளிவாக அர்த்தவிஶேஷங்களை எடுத்துச்சொல்லும் ஆற்றல் ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு தேஶிக வரதாசார்ய ஸ்வாமிக்கு இருந்ததுபோலவே அவர்தம் ப்ரதாந ஶிஷ்யரான ஸ்ரீ.உ.வே..காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமிக்கும் அமைந்தது. இது அவர்தம் குருபரம்பரைக்குண்டான ஒரு விஶேஷமாகும். காரப்பங்காடு ஸ்வாமி தாம் எந்த விஷயங்களை காலக்ஷேபத்தில் ஸாதிப்பதாகத் தீர்மானம் செய்துகொண்டு வருவாரோ, அந்த விஷயங்களை மட்டும்தான் ஸாதிப்பர். அதற்குமேல் ஒரு வார்த்தையும் ஸாதிக்கமாட்டார். அதே ஸமயத்தில் சொல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டு வந்த விஷயம் ஒன்றையும் சொல்லத் தவறமாட்டார். ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிக்கும்போது அவர் ஸாதிக்கும் விஷயங்கள் எல்லாவற்றையும் உடனுக்குடனே குறிப்புகளாக எழுதிக்கொண்டு விடுவேன் அடியேன். காலக்ஷேபம் முடிந்ததும் ஸ்வாமியிடம் பல கேள்விகளைக் கேட்பேன். கேள்விகளைக் கேட்கும்போது முதலில் அப்படியா! என்று சொல்லிவிட்டு பிறகு அவர் ஸாதிக்கும் பதில் அத்யாஶ்சர்ய மாகவிருக்கும். ஆராய்ச்சி பரமான அர்த்தங்கள், பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் மேலோட்டமாக நாம் நேரே காணக்கிடைக்காத அர்த்தங்கள், மிகவும் மர்மமான (ஸூக்ஷ்மமான) அர்த்தங்கள் எல்லாம் ஸ்வாமி திருவாக்கில் அத்புதமாக வெளிவரும். அதுவரையில் அடியோங்கள் கேட்டறியாத புது விஷயங்களை ஸ்வாமி சொல்வார். இது ஸ்வாமி ஒருவரிடத்திலேயே அடியேன் அநுபவித்த ஒரு சிறப்பாகும். அடியேன் மொத்தம் 37 ஆசிரியர்களிடத்தில் பல வித்யைகளைப் பயின்றவன். வேதபாஷ்யம், ஸாஹித்யம், ந்யாயஶாஸ்த்ரம், வ்யாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம், ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்கள், அருளிச்செயல் வ்யாக்யாநங்கள், ரஹஸ்யக்ரந்தங்கள் முதலானவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஆசிரியரிடம் கற்றேன். அடியேன் தமிழ்நாடு, ஆந்த்ர ப்ரதேஶம், கன்னடதேஶம், உத்தர பாரதம் எல்லா இடங்களிலும் பல வித்வான்களுடைய உபந்யாஸங்களைக் கேட்டிருக்கிறேன். இருப்பினும் ஸ்வாமியைப் போன்று பாடம் சொல்பவர்களை அடியேன் கண்டதில்லை.

க்ரந்த காலக்ஷேபம் ஸாதிக்கும் க்ரமங்களை அநுஸரித்து விஷயங்களை ஸாதிக்கும் திறமை ஸ்வாமியுடைய குருபரம்பரைக்குண்டான ஒருபெருமை என்று அடியேன் கீழே விண்ணப்பித்திருந்தேன். இந்த க்ரமங்கள் ஸ்வாமிக்கு அவர்தம் ஆசார்யரான ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு தேஶிகவரதாசார்யஸ்வாமி அநுக்ரஹத்தாலே அமைந்தன. இந்த க்ரமங்கள் ஸ்ரீ.உ.வே.தேஶிக வரதாசார்ய ஸ்வாமிக்கு அவர்தம் ஆசார்யரான சிங்கப்பெருமாள் ஸ்வாமியுடைய அநுக்ரஹத்தாலே அமைந்தன. அவருக்கு இந்த

க்ரமங்கள் அவர்தம் ஆசார்யரான ஸ்ரீபுளியக்(ங்)குடி ஜீயருடைய அநுக்ரஹத்தாலே அமைந்தன. அவருக்கு அவர்தம் ஆசார்யரான மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமி மூலமாகவும், மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமிக்கு அவர்தம் ஆசார்யரான கொமாண்டூர் இளையவில்லி ராகவாசார்ய ஸ்வாமி மூலமாகவும், அவருக்கு அவருடைய ஆசார்ய பரம்பரையைச் சேர்ந்த திக்விஜயம் எம்பாவய்யங்கார்ஸ்வாமி மூலமாகவும், அவருக்கும் மேலே இந்த க்ரமங்கள் சண்டமாருதம் தொட்டாசார்யஸ்வாமி, அவர்தம் பிதாமஹரும் ஶ்ருதப்ரகாஶிகா தூலிகா க்ரந்த கர்த்தாவும் முதல் மஹாசார்யருமான வாதூல ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி மூலமாகவும் முறையே அமைந்தன. இந்த ஸ்வாமி தான் வானமாமலை மடத்தில் மூன்ருவது தீர்த்தகாரராக எழுந்தருளியிருந்தார். இவருக்கு இந்த க்ரமங்கள் கந்தாடைபோரேற்று நாயனூர் என்பவராலேயும், அவருக்கு ப்ரதிவாதி பயங்கரம் அண்ணனாலேயும் அமைந்தன. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணனுக்கு குமார வரதாசார்யர் மூலமாகவும், அவருக்கு வேதாந்தாசார்யர் மூலமாகவும், வேதாந்தாசார்ய ருக்கு நம் ஸ்வாமி எம்பெருமானார் வழிவந்த ஆசார்யர்களிடம் இருந்தும் வந்தன. இந்த க்ரமங்கள் அனைத்தும் பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் மூலம் பரம்பரையாக வந்துள்ளன என்பது தெரிகிறது. ஆளவந்தாருடைய ஶிஷ்யர்கள் (குறிப்பாக பெரியதிருமலை நம்பிகள்) மூலமாக ஸ்வாமி எம்பெருமானார் இந்த வழிமுறைகளை நன்கு அமைத்துக் கொண்டார். எம்பெருமானார் மிகவும் ஆதரித்தும் அநுஷ்டானத்தில் கொண்டும் காட்டியருளிய இந்த க்ரந்தகாலக்ஷேப வழிமுறைகள் அவர் வழிவந்த நம் பூர்வாசார்யர் களாலும் மற்றுமுண்டான பல பெரியோர்களாலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இப்படி பரம்பரையாக அநுஸரிக்கப்பட்டு வந்துள்ள க்ரமங்களை நாம் காரப்பங்காடு ஸ்வாமியுடைய காலக்ஷேபங்களில் நன்கு அநுபவிக்கலாம். க்ரந்த காலக்ஷேபத்தில் விஷயங்களை மிகவும் தெளிவாகவும், ரஸமாகவும், அழகாகவும் எடுத்துச்சொல்ல வேண்டும். நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்ய உபந்யாஸம் ஸாதிக்கும்போது 'ஏதது$_3$க்தம் ப$_4$வதி' (இப்படிச் சொல்லப்பட்டதாக ஆகும்) என்று முதலில் சொல்வர். பிறகு தாம் சொல்ல வேண்டிய விஷயங்களை எடுத்துச் சொல்வர். இதற்குப் பிறகு முடிவில் இதி என்று சொல்லிமுடிக்க வேண்டும். ஆனல் அதை ஸ்பஷ்டமாகச் சொல்லமாட்டார். அந்தந்த இடங்களிலே ஒரு க்ஷணம் தம்முடைய உபந்யாஸத்தை நிறுத்திவிடுவர். அந்த ஸமங்களில் இதி என்று சொல்லி முடிக்காவிட்டாலும் முடிவு என்பதை நாமே அறிந்துகொள்ளலாம். நம் காரப்பங்காடு ஸ்வாமியும் காலக்ஷேபம் ஸாதிக்கும்போது சில விஷயங்களைத் தம் வார்த்தைகளால் காட்டாமல், ஆங்காங்கே நிறுத்தி, சிறிது காலம் தாழ்த்தி ஸூசகமாகவே தெரிவித்துவிடுவர். ஆங்காங்கே வார்த்தைகளுக்கும், வாக்யங்களுக்கும் நடுவில் கால இடைவெளிவிட்டு நிறுத்தி நிதானமாக விஷயங்களை எடுத்துச்சொல்லும் காலத்தில் நாமே இந்த இடத்தில் Comma, இந்த இடத்தில் fullstop, இந்த இடத்தில் ஆஶ்சர்ய குறி, இந்த இடத்தில் சின்ன பாரா முடிவடைகிறது, இந்த இடத்தில் பெரியபாரா முடிவடைகிறது, இது அத்யாயமுடிவு என்றெல்லாம் தெரிந்துகொள்ளலாம். அவருடைய ப்ரவசநங்கள் எல்லாம் க்ரந்தம்

போலவே இருக்கும். அவர் விஷயங்களை ஸாதித்துக்கொண்டு வரும் காலத்தில் அவற்றை அப்படியே எழுதிக்கொண்டு வந்தால் அது ஒரு ப்ரபந்தமாகவே ஆகிவிடும். இது நாம் காரப்பங்காடு ஸ்வாமி திறத்தில் காணும் ஸ்வாமிஎம்பெருமானார் அநுஸரித்த ஒரு வழியாகும்.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கென்றே மிகவும் சிறப்பாக அமைந்த காலக்ஷேப க்ரமம் மற்றொன்று உண்டு. அதாவது காலக்ஷேபம் ஸாதிக்கும்போது விஷயங்களை மிகவும் அழகாக, ரஸமாக, தெளிவாக எடுத்துச்சொல்லவேண்டும். யாரும் ஶாஸ்த்ர ரீதியாக, அதாவது, ஒரு தர்க்கத்தைக் கொண்டோ, அல்லது வ்யாகரண ஶாஸ்த்ரத்தைக் அநுஸரித்தோ, அல்லது மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தைக் கொண்டோ, அல்லது வேதாந்தத்தைக் கொண்டோ எந்த விதமான ஆக்ஷேபத்தையும் கிளப்பமுடியாதபடி விஷயங்களை எடுத்துச்சொல்லவேண்டும். இந்த முறையில் தெளிவாக விஷயங்களை எடுத்துச்சொல்லும் ஒரு க்ரமம் காஷ்மீரம் உள்பட பாரததேஶம் எங்கும் உள்ள வைஷ்ணவர்களால் பரவலாக ஒரு காலகட்டத்தில் அநுஸரிக்கப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக இந்த க்ரமத்தை காஷ்மீர தேஶத்தில் ஆநந்தவர்த்தனாசார்யர் என்பவரும் அவர்தம் வழிவந்தவர்களும் நன்கு பாதுகாத்து வந்தனர். இவர்கள் அநுஸரித்த மார்க்கம் எப்படி ஆளவந்தாரிடம் வந்தது என்பது தெரியவில்லை. தாம் இந்த வழியை அநுஸரித்திருப்பதை ஆளவந்தார் ‘இந்த ஆகமத்தில் (தாம் அருளிச்செய்துள்ள ஆகமப்ராமாண்யத்தில்) நான் சொல்லியிருக்கும் இந்த ஸித்தாந்த விஷயம் காஷ்மீர் ஆகமப்ராமாண்யத்திலும் உண்டு’ என்று ஓரிடத்தில் காட்டியருளியிருக்கிறார். ஸ்வாமி எம்பெருமானாரும் காஷ்மீர தேஶம் சென்று அங்கு இருந்த போதாயந வ்ருத்தி க்ரந்தத்தை ஸேவித்துக்கொண்டார். காஷ்மீரத்தில் நிலவி வந்த இந்த பழைய நடைமுறைக்கு ஒரு விஶேஷம் உண்டு. தென்னாட்டில் நிலவி வந்த பல வார்த்தைகள் அங்கு நடையாடிவந்த ஸம்ஸ்க்ருத பாஷையில் இருந்தன.

ஸ்வாமி எம்பெருமானார் காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் நிலவி வந்த காலக்ஷேப க்ரமத்தை நன்கு அநுஸரித்து அதை நாமும் அறியுமாறு காட்டிக்கொடுத்த பெருமை நம் காரப்பங்காடு ஸ்வாமிக்கு அஸாதாரணமாக அமைந்திருந்தது. இந்த க்ரமத்தை மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமியுடைய உபதேஶ பரம்பரையில் வந்தவரானபடியாலே இவர் பெற்றார் என்பதை நாம் அறியலாம். அடியேனுடைய தகப்பனாரும் ஸ்ரீ.உவே.லக்ஷ்மீதாதாசார்யஸ்வாமியுடைய திருத்தகப்பனாரும், காரப்பங்காடு ஸ்வாமி மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமியுடைய உபதேஶபரம்பரையில் வந்தவர் என்னும் காரணத்தை ப்ரதாநமாகக் கொண்டே அடியோங்களை அவரிடம் அனுப்பி வைத்தனர். காரப்பங்காடு ஸ்வாமியுடைய வைபவத்தை நாம் மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமியுடைய வைபவத்தைக் கொண்டும் நன்கு அறிந்துணரலாம். மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமியுடைய தர்க்க பரம்பரை ஒன்று உண்டு. அவருடைய வேதாந்த பரம்பரை என்றும் ஒன்று உண்டு. இந்த இரண்டையும் நம் காரப்பங்காடு ஸ்வாமி பெற்றார். மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமி திருநாராயணபுரம் கொமாண்டூர்

இளையவில்லி திருவம்ஶத்திலிருந்து திருநாராயணபுரம் அநந்தாண்பிள்ளை திருவம்ஶத்துக்கு ஸ்வீகாரமாய் வந்தவர். இவருடைய திருத்தகப்பனாருக்கு மஹாபாஷ்யம் சிங்கலாசார்ய ஸ்வாமி என்று திருநாமம். வ்யாகரண மஹாபாஷ்யம் எப்போதும் இவருக்கு அநுஸந்தானத்திலே இருக்கும். அக்காரக்கனி அண்ணங்கராசார்யஸ்வாமி என்று ஒருவர் எழுந்தருளியிருந்தார். இவருக்கும் மஹாபாஷ்யம் என்னும் அடைமொழியுண்டு. எங்கு சென்றாலும் நித்யகர்மாநுஷ்டாந காலம் தவிர இந்த இரண்டு மஹான்களும் மஹாபாஷ்யத்தை அநுஸந்தாநம் செய்து கொண்டே செல்வார்கள். திவ்யப்ரபந்தம் போலே மஹாபாஷ்யத்தை இவர் ஒரு வரியை அநுஸந்திப்பதும் அவர் அடுத்த வரியை அநுஸந்திப்பதுமாக பாராயணம் செய்துகொண்டே செல்வார்கள். மைசூர் மஹாராஜா இந்த இரண்டு ஸ்வாமிகளுக்கும் மஹாபாஷ்யம் என்ற பட்டத்தைக் கொடுத்திருந்தார்.

காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்த கொமாண்டூர் இளையவில்லி ராகவசார்யரிடத்தில் மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமி வேதாந்தம் பயின்றார். இவர் மூலம் தான் ஸ்வாமி எம்பெருமானார் காலத்திலிருந்து அவிச்சிந்நமாக வந்து கொண்டு இருந்த விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தக பரம்பரை மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமியிடம் வந்தது. மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமி தம்முடைய ஆசார்யரான இந்த கொமாண்டூர் இளையவில்லி ராகவாசார்ய ஸ்வாமியுடைய அநுக்ரஹத்தினால் தான் தாம் எல்லா வித்யைகளையும் பெருமைகளையும் பெற்றதாக தாம் அருளிச்செய்துள்ள பல க்ரந்தங்களில் குறிப்பிடுகிறார். திருநாராயணபுரத்தில் சுமார் 200 வருடங்களுக்கு முன் திருநாராயணபுரம் தொட்டாசார்யஸ்வாமி பரம்பரை என்றும் சிங்கலாசார்ய ஸ்வாமி பரம்பரை என்றும் இரண்டு ஸ்ரீபாஷ்ய பரம்பரைகள் இருந்தன. இந்த இரண்டு பரம்பரைகளுக்குமே பொதுவாக பல சிறப்புகள் இருந்துவந்தன.

1. ஸம்ஸ்க்ருத பாஷையில் ஸரளமான – எளிய க்ரமத்தைப் பற்றி இருப்பது.
2. ந்யாய ஶாஸ்த்ரத்தில் அநுக$_3$மம் என்னும் க்ரமத்தை அநுஸரித்திருப்பது.
3. வ்யாகரண ஶாஸ்த்ரத்தை முக்யமாகக் கொண்டு பதங்களைப் பிரித்து அர்த்தம் சொல்வது.
4. கடினமாக இல்லாமல் மிகவும் ரஸமான வ்யாக்யாந பத்ததியைக் கொண்டு இருப்பது.
5. ஒன்றுகொன்று கலப்படம் இல்லாமல் பக்ஷங்களையும் ஸமந்வயம் பண்ணவேண்டும் என்னும் அணுகுமுறையைக் கொண்டிருப்பது.

என்னும் சிறப்பு அம்ஶங்கள் இந்த இரண்டு பரம்பரைகளுக்குமே உண்டு. திருநாராயணபுரம் தொட்டாசார்யஸ்வாமியுடைய பரம்பரை - விஷயத்தினுடைய ஜ்ஞாநம் நிஶ்சயமாக ஏற்படும்படி அமைந்திருக்கும். சிங்கலாசார்யஸ்வாமி பரம்பரையில் இயல்–ஸாஹித்யம் மிகவும் ஸரஸமாக இருக்கும். இரண்டு பரம்பரைகளுக்குமே ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் தான் முன்னோடியாக இருப்பர். சண்டமாருதம் தொட்டாசார்யருடைய உபதேஶ பரம்பரையில் வந்த அர்த்தவிஶேஷங்கள் அனைத்தும் இந்த இரண்டு பரம்பரைகளுக்குமே வந்தன. (தொடரும்)

सुपर्वकान्तोदरलब्धजन्मा यथैव मैत्रावरुणिस्स बाल:।
ज्ञानोदयप्राप्तसमस्तकाम: भस्मावृतो वह्निरिवास्त तत्र।।४३।।
ततो महीसारपुराधिवासो प्राज्ञो महान् कश्चन शूद्रवृद्ध:।
श्रुत्वाऽद्भुतं तस्य शिशोरुदन्तं द्रष्टुं तमायात्तनयेन रिक्त:।।४४।।
प्राप्यालयं शूर्पकृतस्स बालसनाथितं क्षीरमयोपहार:।
दृष्ट्वा शिशुं तत्र चतुर्थवंश्यो विसिस्मये दिव्यमहोनिधानम्।।४५।।
पय: पिबेत्यात्मसमर्पितं तमयाचताङ्घ्रयो:प्रणमन् स भक्त्या।
स पूरयिष्यन्नभिलाषमस्य पीत्वा पयस्तं विससर्ज भूय:।।४६।।
एवं स वृद्ध: कतिचिद्दिनानि पय: प्रदानात् परितोष्य सम्यक्।
अभ्येत्य तं वृद्धवधूसमेत: कदाचिदस्मै प्रददौ पयस्तत्।।४७।।
पुत्रार्थिनौ तौ मनसा विदित्वा ताभ्यां ददौ पीतपयोऽवशेषम्।
पीत्वा पयस्तत्तरुणावभूतां तौ दम्पती गर्भमधाच्च शूद्री।।४८।।

---

43. ஊர்வஶியின் கர்ப்பத்திலுண்டான வஸிஷ்டரைப்போலே அக்குழந்தையும் ஜ்ஞாநமுண்டானதால் அனைத்து விருப்பங்களையும் பெற்றவராய், நீறுபூத்த நெருப்பு போலே தன்னுடைய பெருமையைப் பிறரறியாதபடி அங்கே இருந்துவந்தது.
44. பின்பு திருமழிசைக்ஷேத்ரத்திலே வஸிப்பவனும், அறிவாளியும், மஹாத்மாவும் பிள்ளைப்பேறற்றவனும் நான்காம் வருணத்தைச் சேர்ந்தவனுமான ஒரு முதியவன் அக்குழந்தையின் அத்புதமான சரித்ரத்தைக் கேட்டு, அதனைக் காணவந்தான்.
45. அந்நான்காம் வருணத்தவன் பாலை உபஹாரமாகக் கொண்டு, குழந்தையால் விளங்காநின்ற சுளகு (முறம்) செய்வோனின் வீட்டை அடைந்து, திவ்யதேஜஸ்ஸின் இருப்பிடமானவக்குழந்தையைக் கண்டு ஆச்சரியமடைந்தனன்.
46. பக்தியுடன்கூடியவனான அம்முதியவன், பாதங்களில் விழுந்துவணங்கி 'அடியேன் கொணர்ந்த பாலை அமுது செய்தருளவேண்டும்' என்று குழந்தையிடம் வேண்டிக்கொண்டான். அக்குழந்தையும் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்று வதற்காக பாலைப்பருகி அவனை மீண்டும் அனுப்பியது.
47. இவ்வாறு அம்முதியவன் சிலநாள்கள் பாலைக் கொடுத்து அக்குழந்தையை நன்ருக உகப்பித்து, ஒருநாள் தனது முதியமனைவியுடன் வந்து பாலை ஸமர்ப்பித்தான்.
48. அவ்விருவரும் பிள்ளையை வேண்டுபவர்கள் என்று தம் மனத்தால் அறிந்து கொண்டு, அக்குழந்தை தாம் உண்டுமிகுந்த பாலை அவர்களுக்குக் கொடுத்தது. பாலைப் பருகிய அவ்விருவரும் உடனே இளமைப்பருவத்தையடைந்தனர். அந்த ஶூத்ர

काले गते सा हरिभक्तिभाजं प्रासूत शूद्री सुधियं कुमारम् ।
तेजस्विना तेन रराज शूद्रा यथा हि माता विदुरेण पूर्वम् ।।४९।।
चकार नाम्ना कणिकृष्णमेनं अशिक्षयस्सर्वकलाश्च तातः ।
सोऽप्याचरन् भार्गवपादसेवां मुकुन्दभक्तिप्रवणो बभूव ।।५०।।
स भार्गवीयो भगवत्कटाक्षदयासुधास्वादनतृप्तचेताः ।
समुज्झिताहारपयोऽभिलाषः कुले मुदावर्धत वैत्रिकाणाम् ।।५१।।
विचक्षणो विश्वविमोहहेतोः कुलोचिताचारकलानुषक्तः ।
पुष्ये महीसारपुरे विधाय विक्रीय शूर्पं विचचार योगी ।।५२।।
मलीमसे वेश्मनि वैत्रिकाणां कृताधिवासोऽपि स भार्गवीयः ।
स्वतेजसा विश्वविबोधकेन दिवीव देवो दिनकृद्विदीपे ।।५३।।
क्वचिद्वने क्लृप्तगुहाधिवासः साष्टाङ्गयोगोषितचित्तवृत्तिः ।
स निर्भरज्ञानरविप्रकाशैः अपाचकारान्तरमन्धकारम् ।।५४।।

---

ஸ்த்ரீயும் கர்ப்பவதியாளுள்.

49. காலஞ்சென்றவாறே அவள் ஹரிபக்தியிற் சிறந்தவனுய் நல்ஞானமுடையவனை ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தாள். முன்பு விதுராழ்வானுல் அவரது தாயார் ப்ரகாஶித்தாற்போன்று தேஜஸ்வியான அப்புத்ரனுல் ஶூத்ர ஸ்த்ரீயானவள் மிகவும் விளங்கினுள்.

50. அப்புத்ரனுக்கு கணிகண்ணன் என்று பெயரிட்டு எல்லாக் கலைகளையும் கற்பித்தார் அவனுடைய தகப்பனுர். கணிகண்ணனும் பார்க்கவபுத்ரரான திருமழிசையாழ்வாருக்கு பாதஸேவை செய்துகொண்டு, முகுந்தனுை எம்பெருமானிடம் மிகுந்த பக்தியை அடைந்தனன்.

61. அந்த பார்க்கவபுத்ரர் எம்பெருமானுடைய க்ருபாகடாக்ஷமாகிற அம்ருதத்தைச் சுவைத்து த்ருப்தியடைந்த மனத்தையுடையவராய், உணவுபால் ஆகியவற்றில் ஆசையைவிடுத்து பிரம்பறுப்பாளனின் வீட்டில் மகிழ்ச்சியோடு வளர்ந்தார்.

52. மஹாஸமர்த்தரான அந்த யோகீஶ்வரர் உலகத்தவரை மயக்குவதற்காக பிரம்பறுப்பாளர்களின் குலத்துக்குத் தகுந்த கலையில் ஈடுபட்டவராய், புண்யபுரியாகிற மஹீஸாரக்ஷேத்ரத்தில் சுளகு செய்துவிற்றுக்கொண்டு ஸஞ்சரித்தார்.

53. பிரம்பறுப்பாளர்களின் அழுக்கடைந்த குடிலில் வஸித்துவந்தபோதிலும், அந்த பார்க்கவகுமாரர் ஆகாயத்தில் பகலவன் ப்ரகாஶிப்பது போல் உலகிற்கே நல்ஞானத்தைப் புகட்டக்கூடிய தமது தேஜஸ்ஸாலே விளங்காநின்ருர்.

निरुध्य मार्गान्मरुतां निसर्गात् विरर्गलं प्राप्तसमाधियोगः।
निजां परब्रह्मणि चित्तवृत्तिं निवेशयामास निरन्तरायम्।।५५।।
इत्थं समास्थाय तपोऽभिवृद्ध्यै स्थानानि सप्त क्रमशस्स योगी।
पृथक् पृथक् तत्र गुहानिविष्टो मुदा शरत्सप्तशतीमनैषीत्।।५६।।
ततस्य शैवार्हतबौद्धमुख्यान् बाह्यान् तपस्वी समवान् विगाह्य।
तदीयभावानुगतश्चिरेण विवेद तत्तन्मततत्वसारम्।।५७।।
वैयासिकं कापिलमाक्षपादं काणादपातञ्जलजैमिनीयम्।
विज्ञाय शास्त्रं तदनुप्रविष्टः कुदृष्टिसिद्धान्तमपि व्यबोधि।।५८।।
एकैकसिद्धान्तरहस्यमुद्रानिरूपणक्रीडनलम्पटेन।
महौजसा भार्गवनन्दनेन शतं समग्रं शरदामनायि।।५९।।

---

54. ஒருஸமயம் அவர் வனத்திலுள்ளதொரு குஹையில் வஸிப்பவராய் அஷ்டாங்க யோகத்திலே செலுத்திய சித்தவ்ருத்தியையுடையவராய், பூர்ணஜ்ஞாநமாகிற ஸூர்ய ப்ரகாஶத்தினுல் அகத்திருளை அகற்றினுர்.
55. இயற்கையாகவே ப்ராணன்களின் மார்க்கத்தைத் தடுத்து, தடையின்றிப் பெற்ற ஸமாதியோகத்தை உடையவரான அவர், எவ்விதத் தடையுமின்றித் தமது சிந்தனையை பரப்ரஹ்மத்தினிடம் செலுத்துபவராயினர்.
56. இவ்வாறு பார்க்கவபுத்ரரான அந்த யோகியானவர் தவத்தை வளர்ப்பதற்காக வெற்வேறுபட்ட ஏழுஇடங்களை ஏற்படுத்திக்கொண்டு, தனித்தனி குகைகளில் எழுநூறு வருடங்களை ஆனந்தமாகக் கழித்தார்.
57. பின்பு அம்முனிவர் ஶைவம், ஜைநம், பௌத்தம் முதலான பாஹ்யமதங்களில் (புறச்சமயங்களில்) புகுந்து அந்தந்த மதக்கொள்கைகளைப் பின்பற்றுபவராய் நெடுநாள் இருந்துகொண்டு, அந்தந்த மதங்களின் ஸாரத்தை அறிந்தார்.
58. வ்யாஸருடைய உத்தரமீமாம்ஸை, கபிலருடைய ஸாங்க்யம், அக்ஷபாதர் எனப்படும் கௌதமரின் ந்யாயம், கணாதரின் வைஶேஷிகம், பதஞ்ஜலியின் யோகம், ஜைமிநியின் பூர்வமீமாம்ஸை ஆகிய ஶாஸ்த்ரங்களையும் அறிந்து அவற்றுள் புகுந்தவ ராய் குத்ருஷ்டி ஸித்தாந்தத்தையும் அறிந்தவராயினர்.
59. பரமபதஸித்தாந்த ரஹஸ்யார்த்தங்களை ஆராயும் விளையாட்டில் ஈடுபட்டவரும், மஹாதேஜஸ்வியுமான பார்க்கவபுத்ரரால் ஒவ்வொரு மதத்திலும் நூறு நூறு வருடங்கள் முழுமையாகக் கழிக்கப்பட்டன.
60. ஶைவம் முதலான ஸித்தாந்தங்களால் தெரிவிக்கப்பட்ட எல்லாத்தெய்வங்களும்

शैवादिसिद्धान्तसमर्थितानि समीक्ष्य सर्वाण्यपि दैवतानि।
विनश्वराणीति विहाय तानि सद्वैष्णवं दर्शनमाससाद।।६०।।
स वैष्णवं वेदशिरोरहस्यनिदर्शनं दर्शनमीक्ष्य साक्षात्।
तन्मन्यमानः परतत्वमुद्राप्रकाशकं तत्प्रवणो बभूव।।६१।।
तपोनिधिस्तत्र समस्तलोकनिदानमालोक्य पतिं रमायाः।
निवेशयामास विशेषभक्तिं परस्य तस्याङ्घ्रिसरोजयुग्मे।।६२।।
साष्टाङ्गयोगं सहसा प्रपद्य सनातनं योगवतां वतंसः।
तमेव हेतुं जगतां त्रयाणां विभावयामास स भार्गवीयः।।६३।।
नारायणो भार्गवनन्दनस्य तदीयचेतोनलिनद्विरेफः।
तदा दयालुस्सविभूतिकं स्वं सन्दर्शयामास स विश्वरूपम्।।६४।।
अवेक्ष्य भक्तिं परमां तदीयां यदा दयालुर्भगवानमुष्मै।
अदर्शयत् श्रीपतिरात्मरूपं तदा स नाम्नाऽजनि भक्तिसारः।।६५।।

---

அழியக்கூடியவை என்றறிந்து அவைகளைக் கைவிட்டு ஸ்ரீவைஷ்ணவ மதத்திற்கு வந்து சேர்ந்தார்.

61. வைஷ்ணவமதமே வேதாந்த ரஹஸ்யங்களை நேரடியாகக் காட்டுவது என்று கண்டு, அதுவே மேலான தத்த்வத்தை ப்ரகாஶப்படுத்துவது என்று திருவுள்ளம்பற்றி, அதிலே ஈடுபட்டவரானார்.

62. தவத்தையேசெல்வமாகக் கொண்டிருந்த அந்த பார்க்கவகுமாரர், ரமாபதியான எம்பெருமானே எல்லா லோகங்கட்கும் ஆதிகாரணம் என்று அறிந்து பரனை அவ்வெம்பெருமானுடைய திருவடித்தாமரையிணையில் விஶேஷமான பக்தியுடையவரானார்.

63. யோகியர்களுள் சிறந்தவரான அப்பார்க்கவநந்தநர், பழமையான அஷ்டாங்க யோகத்தை விரைவாக அடைந்து, மூவுலகிற்கும் காரணனை எம்பெருமானை த்யாநிக்கலானார்.

64. அவ்வமயம் பார்க்கவகுமாரரின் இதயகமலத்தில் பொருந்திய வண்டு போன்ற கருணாமூர்த்தியான எம்பெருமான், உபயவிபூதியுடன் கூடிய தனது விஶ்வரூபத்தை அவருக்குக் காட்டியருளினான்.

65. எப்பொழுது பார்க்கவகுமாரரின் மேலான பக்தியைக் கண்டு, திருவின் மணாளனை எம்பெருமான் தனது விஶ்வரூத்தைக் காட்டியருளினானோ, அப்பொழுதிலிருந்து அவருக்கு பக்திஸாரர் என்ற பெயர் ஏற்பட்டது.

பதவுரை: அயே ப$_3$ாலே — பெண்ணே! மௌலி: — (இவனுடைய) ஶிரஸ்ஸானது, (சந்த்$_3$ரகபூ$_4$ஷணு) சந்த்$_3$ரக — மயில்தோகையை, பூ$_4$ஷணு — அலங்காரமாக உடைத்தாயிருக்கிறது, வபு: — ஶரீரமானது, (மரகத ஸ்தம்ப$_4$ாபி$_4$ராமம்) மரகத—மரகதமணியினுல் செய்யப்பட்ட, ஸ்தம்ப$_4$ — கம்பம் போல், அபி$_4$ராமம் — அழகியதாயிருக்கிறது, வக்த்ரம் — முகமானது, (சித்ரவிமுக்$_3$த$_4$ஹாஸமது$_4$ரம்) சித்ர — ஆஶ்சர்யகரமாயும், விமுக்$_3$த$_4$ — ஆநந்த கரமாயுமிருக்கிற, ஹாஸ — சிரிப்பினுல், மது$_4$ரம் — இனிதாயிருக்கிறது, த்$_3$ருஶௌ — கண்கள், விலோலே — சுழலமிடாநின்றன, வாச: — சொற்கள், (ஶைஶவஶீதலா:) ஶைஶவ—பால்யத்தினுல், ஶீதலா: — மனத்தைக் குளிரப்பண்ணுமதாயிருக்கின்றன, (விலாஸஸ்தி$_2$தி:) விலாஸ—கமநத்தினுடைய, ஸ்தி$_2$தி:—இருப்பானது, (மத$_3$க$_3$ஜஶ்லாக்$_4$யா) மத$_3$—மதித்த, க$_3$ஜ—யானை(யின் கமநம்) போல், ஶ்லாக்$_4$யா—கொண்டாடத்தகுந்ததாயிருக்கிறது, மந்த$_3$ம் மந்த$_3$ம் —(இவ்வழகுடன்) மெள்ள மெள்ள, இத: — இங்கிருந்து, மது$_4$ராவீதி$_2$ம் — மதுரைப் பட்டணத்தின் தெருவில், க$_3$ாஹதே — நுழைகிருன்(போகிருன்) ஏஷ: — இவ்விதமாக இந்தப்புருஷன், க: — ஆர்! (சொல்லு)

தாத்பர்யம்: இதில், தன்னிலன்பில்லாதாரை ஆட்கொண்ட இவன்படிகளைப் பேசுகிருர்.

தலையில் மயிர்முடியானது வாரிச்சேர்த்துக் கொண்டையாகக் கட்டப்பட்டதாய், நாநாவர்ணமான ரத்நங்களாலிழைத்த ஆபரணம்போல் விளங்காநின்ற மயிலிறகினுல் அலங்கரிக்கப்பட்டிருந்தது; விக்ரஹமானது, மரகதமணியைக் கடைந்திட்ட தூண்போல் அதிஸ்வச்சமாய் திரண்டு உள்ளே நிழலாடா நின்றது; முகமானது, அந்தந்த தேஶகாலங்களுக்கநுகுணமாகவும் அவ்வவபுருஷர்களுக்கு அநுகுணமாக வும் க்ஷணந்தோறும் நாநாப்ரகாரமாய்க் கொண்டு அத்யாஶ்சர்யகரமாய், கல்நெஞ்சராயினும் கண்டார்களாகில் அவர்களை வேறிடத்தில் கால்தாழவொட்டாத படி தன்னில் மயக்கிக்கொள்ளவல்ல முறுவலையுடைத்தாயிருந்தது; கண்களானவை, கண்டார்மனம் கவரும்படி இளமைக்குத்தக்க சாஞ்சல்யத்தையுடைத்தாயிருந்தன; சொற்கள் மழலைச்சொற்களாயிருந்தன; நடையழகானது மத்தகஜத்தின் கமநத்தோடொத்திருந்தது; என்றிப்படி அவன் வடிவழகைச்சொல்லி அதிலே தாமுமீடுபட்டு மதிமயங்கி அவனை இன்னுரென்று விஶேஷித்தறியமாட்டாதே, இவ்வழகுடன் மதுராபுரியில் நெடுந்தெருவே போகாநின்ற இவன் யாரோவென்று ஸந்தேஹிக்கிருர். (57)

58. पादौ पादविनिर्जिताम्बुजवनौ पद्मालयालङ्कृतौ
पाणी वेणुविनोदनप्रणयिनौ पर्याप्तशिल्पश्रियौ।
बाहू दोहदभाजनं मृगदृशां माधुर्यधारा गिरः
वक्त्रं वाग्विभवातिलंघितमहो बालं किमेतन्महः।।

பாதௌ$_3$ பாத$_3$விநிர்ஜிதாம்பு$_3$ஜவநௌ பத்$_3$மாலயாலங்க்ருதௌ
பாணீவேணுவிநோத$_3$ந ப்ரணயிநௌ பர்யாப்த ஶில்பஶ்ரியௌ।
ப$_3$ாஹூ தே$_3$ாஹத$_3$ ப$_4$ாஜநம் ம்ருக$_3$த்$_3$ருஶாம் மாது$_4$ர்யத$_4$ாரா கி$_3$ர:
வக்த்ரம் வாக்$_3$விப$_4$வாதிலங்கி$_4$தமஹோ ப$_3$ாலம் கிமேதந்மஹ:॥

பதவுரை: (பாத$_3$விநிர்ஜிதாம்பு$_3$ஜவநௌ) பாத$_3$— ஓரம்ஶத்திலுல், விநிர்ஜித — ஜயிக்கப்பட்ட, அம்பு$_3$ஜ வநௌ— தாமரைக் காட்டையுடைய, பாதௌ$_3$ — திருவடிகள், (பத்$_3$மாலயாலங்க்ருதௌ) பத்$_3$மாலயா — தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய லக்ஷ்மீதேவியிலுல், அலங்க்ருதௌ — அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன, (வேணுவிநோத$_3$ப்ரணியிநௌ)வேணு—வேணுகாநத்தினுடைய, விநோத$_3$— நாநாவிதமான ஸ்வரோத்பாதந வ்யாபாரத்தில், ப்ரணயிநௌ — ப்ரீதியையுடைத்தான, பாணீ — திருக்கைத்தலங்கள், (பர்யாப்த ஶில்பஶ்ரியௌ) பர்யாப்த — பூர்ணமான, ஶில்பஶ்ரியௌ — சித்ரஶோபையையுடைத்தாயிருக் கின்றன, ப$_3$ாஹூ — புஜதண்டங்கள், ம்ருக$_3$த்$_3$ருஶாம் — பெண்களுக்கு, (தே$_3$ாஹத$_3$ப$_4$ாஜநம்)தோஹத$_3$— ஸம்போகயோக்யமான பருவத்தைக் கொடுப் பதற்கு, ப$_4$ாஜநம் — ஆதாரமாயிருக்கின்றன; ஶிர:—வாக்குக்கள், (மாது$_4$ர்யத$_4$ாரா) மாது$_4$ர்ய — போக்யதையினுடைய, த$_4$ாரா — ப்ரவாஹங்களாயிருக்கின்றன, வக்த்ரம் — முகமானது, (வாக்$_3$விப$_4$வாதிலங்கி$_4$ தம்) வாக் — சொற்களுடைய, விப$_4$வ— ஸ்துதிசெய்யும் திறமையை, அதிலங்கி$_4$தம் — மீறியிருக்கிறது. அஹோ — ஆஶ்சர்யம்; ஏதத் — இப்படிப்பட்ட, மஹ: — தேஜஸ்ஸானது, ப$_3$ாலம்கிம் — ஸ்ரீக்ருஷ்ணனுயிருக்குமா?(58)

தாத்பர்யம்: கீழ் அப்படி ஸந்தேஹித்த இவர், அவனுடைய ஸாமுத்ரிகலக்ஷணங் களையும் அவதாராநுகுணமான அடையாளங்களையும் பார்த்து இவன் க்ருஷ்ணனுயிருக்கிலிருக்கலாமென்கிருர்.

இவனுடைய திருவடிகள், உலகத்திலுள்ள தாமரைக்காடுகளெல்லாம் சேர்ந்து வந்தாலும் இவ்வழகினுடைய ஒருதிவலைக்குத்தோற்ருேடும்படியான நிரதிஶய ஸௌந்தர்யத்தையுடைத்தாய், லக்ஷ்மியினுடைய நித்யநிவாஸஸ்த்தாநமாயிருந்தன;

திருக்கைத்தலங்கள், ஶங்கம் பத்மம் மத்ஸ்யம் அம்ருதகலஶம் முதலிய மஹாபுருஷ லக்ஷணமான ரேகைகளினால் அலங்கரிக்கப்பட்டுக் குழலூதுகையில் பொருந்தியிருந்தன; கைகளானவை, இளம்பெண்களையும் தன்னுடைய ஸ்பர்ஶத்தினால் அநுபவயோக்யராம்படி பண்ணவற்றாயிருந்தன; சொற்கள் மதுவைப்பெருக்கா நின்றன; முகத்தினழகு, ஆயிரமுகங்களையுடைத்தாய் ஸர்வஜ்ஞனாயிருக்கிற ஆதிஶேஷனாலும் வர்ணிக்கமுடியாததாயிருந்தது; இவ்விதமாய்த் திரண்ட தேஜோமயமாய்க்காண்கிற இவன், க்ருஷ்ணனாயிருக்கலாமோவென்று ஊஹிக்கிறார். (58)

59. बर्हं नाम विभूषणं बहुमतं वेषाय शेषैरलं
वक्त्रं द्वित्रविशेषकान्तिलहरीविन्यासधन्याधरम्।
शीलैरल्पधियां अगम्यविभवैः शृङ्गारभङ्गीमयं
चित्रं चित्रमहो विचित्रितमहो चित्रं विचित्रं महः।।

ப$_3$ர்ஹம் நாமவிபூ$_4$ஷணம் ப$_3$ஹுமதம் வேஷாய ஶேஷைரலம்
வக்த்ரம் த்$_3$வித்ரவிஶேஷகாந்தி லஹரீ விந்யாஸத$_4$ந்யாத$_4$ரம்।
ஶீலைரல்பதி$_4$யாமக$_3$ம்ய விப$_4$வை: ஶ்ருங்க$_3$ார பங்கீ$_3$மயம்
சித்ரம் சித்ரமஹோ விசித்ரிமஹோ சித்ரம் விசித்ரம் மஹ:॥

பதவுரை: ப$_3$ர்ஹம் நாம — மயில்தோகையென்கிற, விபூ$_4$ஷணம் — ஆபரணமே, ப$_3$ஹுமதம் — மிகவுமுகப்பாயிருக்கிறது, சித்ரம் — இதோராஶ்சர்யம், வேஷாய — அலங்காரத்தின் பொருட்டு, ஶேஷை: — மற்ற ஆபரணங்களினால், அலம் — போரும், சித்ரம் — இதுவுமோராஶ்சர்யம், வக்த்ரம் — முகமானது, (த்$_3$வித்ர விஶேஷகாந்திலஹரீ விந்யாஸ த$_4$ந்யாத$_4$ரம்) த்$_3$வித்ர — இரண்டு மூன்று விதமான, விஶேஷ — திலகத்தினாலுண்டான, காந்தி — அழகினுடைய, லஹரீ — வெள்ளத்துக்கு, விந்யாஸ — இருப்பிடமுமாய், த$_4$ந்ய — புகழத்தக்கதான , அத$_4$ரம் — வாயையுடையதுமாயிருக்கிறது, அஹோ விசித்ரிதம் — இது மிகவுமாஶ்சர்யகரமாயிருக்கிறது, அல்பதி$_4$யாம் — மந்தபுத்திகளுக்கு, (அக$_3$ம்ய விப$_4$வை:) அக$_3$ம்ய—அடையத்தக்கதான, விப$_4$வை: — மஹிமையையுடைய , ஶீலை: — ஸ்வபாவங்களினால், (ஶ்ருங்க$_3$ாரபங்கீ$_3$மயம்) ஶ்ருங்க$_3$ார — ஶ்ருங்கார ரஸத்தினுடைய, பங்கீ$_3$மயம் — ரீதிஸ்வரூபமாய், சித்ரம் — இப்படி நாநாவிதமாகக் காணவருகிற, மஹ: — (இந்த) தேஜஸ்ஸானது,விசித்ரம் — அத்யத்புதமாயிருக்கிறது. (59)

தாத்பர்யம்: இதில், அவனுடைய ஸர்வப்ரகாரமான ஆஶ்சர்யத்தை வர்ணிக்கிறார்.

இந்த கோபாலபாலனுக்கு மயிலிறகொன்றே த்ருப்திகரமான ஆபரணமா

யிருந்தது; மற்றவைகள் இவனைச்சேர்ந்து தாங்களழகுபெறுமதொழிய இவனை யலங்கரிக்கமாட்டா; இவனுடைய முகமானது நாநாவிதமானதிலகங்களினாலும், ஸ்வாபாவிகமான அதரஶோபையினாலும் விளங்காநின்றது; ஶ்ருங்கார வ்யாபாரங்கள் அவ்வவ ஸமயங்களுக்குத் தக்கபடி அநேகப்ரகாரங்களாய் இவனிடத்தில் குடிகொண்டிருந்தன; இவனுடைய ஸ்வபாவங்களெல்லாம் அல்பஜ்ஞரான நம்மாலறியப்போகாது; இப்படி அதிவிசித்ரமான இவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளெல்லாம் அத்யாஶ்சர்யகரமாயேயிருந்ததென்கிறார். (59)

௬0. अग्रे समग्रयति कामपि केलिलक्ष्मीम् अन्यासु दिक्ष्वपि विलोचनमेव साक्षी।
हा हन्त हस्तपथदूरमहो किमेतत् आसीत्किशोरमयमम्ब जगत्त्रयं मे।।

அக்$_3$ரே ஸமக்$_3$ரயதி காமபி கேலிலக்ஷ்மீம்
அந்யாஸு தி$_3$க்ஷ்வபி விலோசநமேவ ஸாக்ஷீ।
ஹா ஹந்த ஹஸ்தபத$_2$தூ$_3$ரமஹோ கிமேதத்
ஆஸீத்கிஶோரமயமம்ப$_3$ ஜக$_3$த் த்ரயம் மே॥

பதவுரை: (ஹஸ்தபத$_2$தூ$_3$ரம்) ஹஸ்தபத$_2$ — கைவழிக்கு, தூ$_3$ரம் — எட்டா மலிருக்கிற இவ்வஸ்துவானது, காம்அபி — சொல்லிமுடியாததான, கேலி லக்ஷ்மீம் — (தன்) க்ரீடையிலுண்டான ஶோபையை, அக்$_3$ரே — (என்) முன்னிலையிலும், அந்யாஸு—மற்றுமுள்ள, தி$_3$க்ஷு அபி — திக்குக்களிலும், ஸமக்$_3$ரயதி — பரிபூர்ணமாகத்தோற்றுவிக்கிறது; விலோசநமேவ — (என்) கண்ணே! ஸாக்ஷீ — (இதுக்கு) ப்ரமாணம். ஹா ஹந்த — ஐயோ! எனக்கு இது துன்பத்தை விளைவிக்கிறது. அம்ப — அம்மா! ஏதத் — இது, கிம்—என்ன?, மே—எனக்கு, ஜகத்த்ரயம் — மூன்றுலகமும், கிஶோரமயம்—க்ருஷ்ணன்ஸ்வரூபமாகவே, ஆஸீத் — ஆயிற்று; அஹோ—ஆஶ்சர்யம். (60)

தாத்பர்யம்: இப்படி ப்ரத்யக்ஷம்போலே அவனையநுபவித்த இவர் அவனைத் தழுவிக்கொள்வதற்காக கையை நீட்டினவாறே, அதுக்கவனகப்படாமையால் ஆஶ்சர்யப்படுகிறார்.

இந்த க்ருஷ்ணமூர்த்தியானவன், என்முன்னிலையிலும், சுற்றிலும்நின்று அதிவிநோதமாக விளையாடாநின்றான்; அவ்வளவேயன்று, லோகமெல்லாம் எனக்கு க்ருஷ்ணஸ்வரூபமாகவே தெரிகிறது; இது பொய்யென்னப்போகாதபடி என்கண்களால் நேரேகண்டுகொண்டிருக்கிறேன்; இப்படியிருக்க நான் கைநீட்டினால் அதுற்ககப்படாமலிருக்கையென்பது பெரியவாஶ்சர்யத்தை விளையாநின்றது; இதுக்கென்ன காரணமோ அறிகிலேன். ஆ! ஆ! என்ன ஆஶ்சர்யம்! என்ன கஷ்டம்; இதுயெனக்கு ஆஶ்சர்யத்தையும் துன்பத்தையும் விளையாநின்றது என்கிறார். (60)

''ஆளி லமர ரரங்கேசர்சேவைக்கணுகுந்தொறுங், கோளில் திரளை விலக்கும் பிரம்பின் கொளை படலால், தோளிலடித்தழும்புண்டச்சுரர்க்கு'' என்றபடி திரள்விலக்குதற் பொருட்டும், எம்பெருமானது ஆணையைத் தான்கொண்ட நடத்துதற்கு அறிகுறியாக வும் இவர் கையிலே பொற்செங்கோலேந்திநிற்பர். இவர் கையில் 'ஆழி' என்றது, எம்பெருமானிடம் இவர் பெற்றுள்ள அதிகாரத்துக்கு அறிகுறியான முத்திரைமோதிரத் தை. திருமாலின் பஞ்சாயுதங்களுள் சக்கரம் – சுதர்சநமென்றும், சங்கம் – பாஞ்சஜந்ய மென்றும், கதை – கௌமோதகி யென்றும், வாள் – நந்தகமென்றும், வில் – சார்ங்க மென்றும் பெயர்பெறும். இவை துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலநஞ் செய்யுங் கருவியாய்ச் சிறத்தலால், இவற்றைக் காப்பாகக்கொண்டார்.

சூரியனது தேர் சம்வற்சரரூபமான ஒற்றைச் சக்கரமுடையதென்று புராணம் கூறும். வெய்யவன் – உஷ்ணகிரணமுடையவன்; வெம்மையென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர். இங்கு 'உலகேழ்' என்றது, ஜம்பு பிலக்ஷம் குசம் கிரௌஞ்சம் சாகம் சால்மலி புஷ்கரம் என்ற ஏழுதீவுகளை. இங்கு 'உலகு' என்றது, உயிர்களின் மேல் நிற்கும். காராழிவண்ணம்– மேகமும், கடலும் போன்ற திருநிறமெனினுமாம். பெருமாள் = பெருமான், பெருமையையுடையவர்; இதில், பெருமை யென்ற பகுதி ஈற்றுஐகாரம் மாத்திரம் கெட்டு, பெரும் என நின்றது; 'ஆன்' என்ற ஆண்பால் விகுதி 'ஆள்' என ஈறு திரிந்தது; 'ஆள்' என்று பெண்பால்விகுதியே சிறுபான்மை ஆண்பாலுக்கு வந்ததென்றலும் ஒன்று; அன்றி, பெருமையை ஆள்பவனெனக்கொண்டால் ஆள் என்ற வினைப்பகுதி கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்துகெட்டதென வேண்டும். பெருமாளந்தாதி என்ற தொடரில் தொக்குநின்ற ஆரும்வேற்றுமையுருபின் பொருளா கிய சம்பந்தம் – விஷயமாகவுடைமை; விஷ்ணுபுராணம், விநாயகரகவல் என்பவற்றிற் போல. நாந்தகம் – நந்தகமென்பதன் விகாரம். ஆழி என்ற சொல் – தேர்ச்சக்கரம் மோதிரம் சக்ராயுதம் என்ற பொருள்களில் வட்டவடிவுடைய தென்றும், கடலென்ற பொருளில் ஆழ்ந்துள்ள தென்றும் காரணப்பொருள்படும்; இனி, கடலென்ற பொருளில் பிரளயகாலத்து உலகங்களை அழிப்பதென்றும், சக்ராயுதமென்ற பொருளில் பகைவர்களையழிப்ப தென்றும் கொள்ளலுமொன்று. 'ஓர்ஆழி' என்றது – ஒற்றைச் சக்கரமுடைய தேருக்கு, பண்புத்தொகையன்மொழி.

இச்செய்யுளில் ஆழி என்கிற ஒரு சொல் அடிதோறும் வேறுபொருளில் வந்தது, சொற்பின்வருநிலையணி. இப்பொருளணியோடு திரிபு என்னும் சொல்லணியும் அமைந்திருத்தல் காண்க. (திரிபாவது – ஒவ்வோரடியிலும் முதலெழுத்துமாத்திரம் வேறுபட்டிருக்க, இரண்டு முதலிய பலஎழுத்துக்கள் ஒன்றிநின்று பொருள் வேறுபடுகிறது. ) இவ்விரண்டணியும் பேதப்படாமற் கலந்துவந்தது, கலவையணி. (1)

[**பன்னிரண்டு ஆழ்வார்களின் அருளிச்செயல்**]

**வையம்புகழ்பொய்கைபேய்பூதன்மாறன்மதுரகவி**
**யையன்மழிசைமன்கோழியர்கோனருட்பாண்பெருமாண்**
**மெய்யன்பர்காற்பொடிவிண்டுசித்தன்வியன்கோதைவெற்றி**
**நெய்யங்கைவேற்கலியன்றமிழ்வேதநிலைநிற்கவே. (2)**

(பொருள்) **வையம் புகழ்** – உலகத்தவர்களாற்புகழப்படுகிற, **பொய்கை** – பொய்கை யாழ்வாரும், **பேய்**–பேயாழ்வாரும், **பூதன்**–பூதத்தாழ்வாரும், **மாறன்** – நம்மாழ்வாரும், **மதுரகவி ஐயன்** – மதுரகவியாழ்வாரும், **மழிசைமன்** – திருமழிசையாழ்வாரும், **கோழியர்கோன்**–குலசேகராழ்வாரும், **அருள் பாண் பெருமாள்** – (நம்பெருமாளின்) விசேஷகடாக்ஷம் பெற்ற திருப்பாணாழ்வாரும், **மெய் அன்பர் கால் பொடி** – தொண்டரடிப்பொடியாழ்வாரும், **விண்டுசித்தன்**–பெரியாழ்வாரும், **வியன்கோதை**– பெருமையையுடைய ஆண்டாளும், **வெற்றி நெய் வேல் அம்கை கலியன்** – சயம் பொருந்தியதும் நெய்பூசியதுமான வேலாயுதத்தை யேந்திய அழகிய கையையுடைய திருமங்கையாழ்வாரும் ஆகிய பன்னிரண்டு ஆழ்வார்களால் அருளிச்செய்யப்பட்ட, **தமிழ் வேதம்** – திராவிடவேதமாகிய (நாலாயிர) திவ்வியப்பிரபந்தங்கள், **நிலைநிற்க**– (எக்காலத்தும் அழிவின்றி உலகத்தில்) நிலைபெற்றிருக்கக்கடவன; (எ–று)

ஆசீர்வாதம் (வாழ்த்து), நமஸ்காரம் (வணக்கம்) வஸ்துநிர்தேசம் (தலைமைப் பொருளுரைத்தல்) என்ற மூவகை மங்களங்களுள், இது வாழ்த்தாம். ஆழ்வார்களால் வெளியிடப்பட்ட திவ்வியப்பிரபந்தங்களின் சொற்பொருட்கருத்துக்கள் அமைய அப்பிரபந்தங்கள் போலச்செய்யப்படுவது இத்திருவரங்கத்தந்தாதி யாதலால், இந்நூலின் இக்காப்புச்செய்யுளை ஏற்புடைக்கடவுள் வாழ்த்தென்றும் கொள்ளலாம்.

வையம் – இடவாகுபெயர், 'வையம்புகழ்' என்று அடைமொழியை எல்லா ஆழ்வார்கட்கும் கூட்டலாம். இனி, வையம் புகழ் பொய்கை – ''வையந்தகளியா'' என்று தொடங்கிப் பிரபந்தம்பாடி (எம்பெருமானை)த் துதித்த பொய்கையாழ்வா ரெனினுமாம்; அவ்வுரைக்கு, வையம் என்பது – அவர்பாடிய முதல்திருவந்தாதிக்கு முதற்குறிப்பு, ''பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை, யையனருள்மாறன்சேரலர்கோன் – துய்யபட்ட நாதனன்பர் தாட்டூளி நற்பாணனன்கலியன், ஈதிவர் தோற்றத்தடைவா மிங்கு'' என்றபடி திருவவதாரக்கிரமத்தால் பொய்கையார் பூதத்தார் பேயார் மழிசைப் பிரான் மாறன் குலசேகரர் பெரியாழ்வார் தொண்டரடிப்பொடி திருப்பாணர் திருமங்கை யாழ்வார் என முறைப்படுத்தி, பெரியாழ்வாரது திருமகளான ஆண்டாளையும் நம்மாழ்வாரது சிஷ்யரான மதுரகவியையும் ஈற்றில் வைத்தாயினும், ஆண்டாளைப் பெரியாழ்வாரையடுத்தும், மதுரகவியை நம்மாழ்வாரையடுத்தும் வைத்தாயினும் கூறுவதே முறையாயினும் இங்குச் செய்யுள் நோக்கி முறைபிறழ வைத்தார்.

பொய்கை – குளம், பொற்றாமரைப் பொய்கையில் திருவவதரித்த ஆழ்வாரை

'பொய்கை' என்றது, இடவாகுபெயர். இனி, உவமையாகுபெயராய் ஊர்நடுவேயுள்ள குளம்போலே எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுப்பவ ரென்றுமாம். பேய்– உவமையாகுபெயர்; உலகத்தவராற் பேய்போல எண்ணப்படுபவர்; அல்லது, அவர்களைத் தாம் பேய்போல எண்ணுபவர்; ''பேயரேயெனக்கியாவரும் யானுமோர், பேயனேயெவர்க்கும் இதுபேசியென், ஆயனேயரங்கா வென்றழைக்கின்றேன், பேயனாயொழிந்தே னெம்பிரானுக்கே'' என்ற கொள்கைப்படி, இவர் பகவத்பக்தியாற் பரவசப்பட்டு, நெஞ்சழிதல் கண்சுழலுதல் அழுதல் சிரித்தல் தொழுதல் மகிழ்தல் ஆடுதல் பாடுதல் அலற்றுதல் முதலிய செய்கைகளையே எப்பொழுதும் கொண்டு, காண்பவர் பேய்பிடித்தவரென்னும்படி யிருந்ததனால், பேயாழ்வாரென்று பெயர் பெற்றனர். பூதன் – எம்பெருமானை அறிதலாலே தமது உளனாகையை யுடையவராத லால், இவர்க்கு, பூதனென்று திருநாமம். ''பூ$_4$ ஸத்தாயாம்'' என்றபடி ஸத்தையென்னும் பொருள்கொண்ட பூ$_4$ என்னும் வடமொழிவினையடியினின்று பிறந்த பெயராதலால், பூதன் என்பதற்கு – ஸத்தை (உள்ளவனாயிருக்கை) பெறுகின்றவனென்று பொருளா யிற்று. இனி, இத்திருநாமத்துக்கு – உலகத்தவரோடு சேராமையாற் பூதம்போன்றவ ரென்று பொருளுரைத்தல் சம்பிரதாயமன்று. நம்மாழ்வார்க்கு அநேகம் திருநாமங்கள் இருப்பினும் அவற்றில் 'மாறன்' என்பது, முதலில் தந்தையார் இட்ட குழந்தைப் பெயராதலால் அதில் ஈடுபட்டு அப்பெயரினாற் குறித்தார். பிறந்த பொழுதே தொடங்கி அழுதல் பாலுண்ணுதல் முதலியன செய்யாது உலகநடைக்கு மாறாயிருந்ததனால் சடகோபர்க்கு 'மாறன்' என்று திருநாமமாயிற்று. வலியவினைகட்கு மாறாக இருத்தலா லும், அந்நிய மதஸ்தர்களை அடக்கி அவர்கட்குச் சத்துருவாயிருத்தலாலும், பாண்டிய நாட்டில் தலைமையாகத் தோன்றியதனாலும் வந்த பெயரென்றலும் உண்டு. மதுரகவி – இனிமையான பாடல் பாடுபவர். மழிசைமன்–திருமழிசையென்று வழங்குகின்ற மஹீஸாரக்ஷேத்திரத்தில் திருவவதரித்த பெரியோன்; இது, தொண்டைநாட்டிலுள்ளது. கோழியர்கோன் – கோழியென்னும் ஒருபெயருடைய உறையூரிலுள்ளார்க்குத் தலைவர்; உறையூர், சோழநாட்டிராசதானி. சேரநாட்டரசரான குலசேகராழ்வார் திக்விஜயஞ்செய்த போது சோழவரசனை வென்றுகீழ்ப்படுத்தி அந்நாட்டுக்குத்தலைமைபூண்டதனால், 'கோழியர்கோன்' எனப்பட்டனர். ''கொல்லிகாவலன்கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்'' என்றதனால், இவர் தமிழ்நாடு மூன்றுக்குந் தலைமைபூண்டமை விளங்கும். முற்காலத்து ஒருகோழி நிலமுக்கியத்தால் அயல்நாட்டுயானையோடு பொருது அதனைப் போர்தொலைத்தமை கண்டு அந்நிலத்துச்செய்த நகரமாதலின், 'கோழி' என்று உறையூருக்குப் பெயராயிற்று. இனி, குலசேகராழ்வார் அரசாட்சிசெய்த இடமான கோழிக்கூடு என்ற சேரநாட்டு இராசதானி (நாமைகதேசேநாமக்கிரகணத்தால்) கோழியெனப்பட்ட தென்றலுமொன்று.

பாண்பெருமாள்– வீணையும் கையுமாய்ப் பெரியபெருமாள் திருவடிக்கீழே நிரந்தரசேவை பண்ணிக்கொண்டு பாட்டுப்பாடிப்புகழ்பவர்; பாண் – இசைப்பாட்டு;

அதற்குத் தலைவர், பாண்பெருமாள். இவர் நம் பெரியபெருமாளுடைய திருமேனி யழகில் ஈடுபட்டு அதனை அடிமுதல் முடிவரை அநுபவித்து அப்பெருமாளாற் கொண்டாடி யழைக்கப்பெற்று அப்பெருமாளின் திருவடிகளிலே ஐக்கியமடைந்த தனால், 'பெருமாள்' என்று சிறப்பித்துக் கூறப்படுவர்; ''சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த, பாரியலும் புகழ்ப் பாண்பெருமாள்'', ''காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றிக்கண்ணனையே கண்டுரைத்தகடியகாதற்,பாண்பெருமாள்'' என்பன காண்க. உறையூரில் அயோநிஜராய் நெற்பயிர்க்கதிரில் அவதரித்துப் பஞ்சமசாதியிற் பாணர்குலத்திற்பிறந்தானொருவன் வளர்க்கவளர்ந்து யாழ்ப் பாடலில் தேர்ச்சிபெற்று மஹாவிஷ்ணுபக்தரான இவர், ரங்கநாதனுக்குப் பாடல் திருத்தொண்டுசெய்யக் கருதி, தாம் தாழ்ந்தகுலத்தில் வளர்ந்தவராதலால் உபயகாவேரிமத்தியிலுள்ள ஸ்ரீரங்கதிவ்விய க்ஷேத்திரத்தில் அடியிடுவதற்குந்துணியாமல் தென்திருக்காவேரியின் தென்கரையில் திருமுகத்துறைக்கு எதிரிலே யாழுங்கையுமாக நின்றுகொண்டு நம்பெருமாளைத்திசை நோக்கித் தொழுது இசைபாடி வருகையில், ஒருநாள், நம்பெருமாள் தமக்குத்தீர்த்த கைங்கரியஞ்செய்பவரான லோகசாரங்கமகாமுனியின் கனவில் தோன்றி 'நமக்கு நல்லன்பரான பாண்பெருமாளை இழிவாக நினையாமல் நீர் சென்று தோள்களில் எழுந்தருளப்பண்ணிவாரும்' என்று நியமிக்க, அவரும் அங்ஙனமே சென்று பாணரை அரிதில் இசைவித்துத் தோளில் எடுத்துக்கொண்டுவந்துசேர்க்க, அம்முனிவாகனர் அணியரங்கனைச்சேவித்து அவனடியிலமர்ந்தனர்; இங்ஙனம் விசேஷகடாக்ஷம் பெற்றமைபற்றி, 'அருட்பாண்பெருமாள்' என்றார். ஐயன் – ஆர்யன், பூசிக்கத்தக்கவன், அந்தணன்; ஆசாரியன்.

மெய்யன்பர்காற்பொடி – உள்ளும்புறமும் ஒத்துத் தொண்டுசெய்யும் மெய்யடி யாரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவடித்தூளிபோல அவர்கட்குக் கீழ்ப்படிந்து அடிமைபூண்டு ஒழுகுபவராதலால், இவர்க்கு, தொண்டரடிப்பொடி யென்று திருநாமம். இளமை தொடங்கி எப்பொழுதும் தமது சித்தத்தை விஷ்ணுவினிடத்திலே செலுத்தி ''மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னுந் தெய்வத்தை நாட்டி'' என்னும் படி அப்பெருமானை மனத்திலே நிலைநிறுத்தித் தியானித்துவந்ததனால், விஷ்ணுசித்தர் என்று பெரியாழ்வார்க்குப் பெயர். கோதை–மாலை; எம்பெருமானுக்கு மாலைபோல மிக இனியளாயிருப்பவள்; அல்லது, எம்பெருமானுக்குச் சமர்ப்பித்தற்காகத் தனது தந்தையார் அமைத்துவைத்த பூமாலையை அவர்இல்லாதசமயத்தில் தான் சூடிக் கொண்டு அழகுபார்த்துப் பின்பு கொடுத்தவள்; அன்றி, எம்பெருமானுக்குப் பாமாலை சூட்டினவள்; ''ஆழ்வார்கள்தஞ் செயலை விஞ்சிநிற்குந் தன்மையளாய்ப், பிஞ்சாய்ப் பழுத்தாளை யாண்டாளை'' என்றபடி ஞானபக்தியாதிகளில் ஆழ்வார்களனைவரினும் மிகவிஞ்சியிருத்தல், மிக்க விளமையிலேயே பரமபக்தியை இயல்பாகக்கொண்டமை முதலிய சிறப்புக்களை யுடைமையால், 'வியன்கோதை' என்றார்.

கலியன் – மிடுக்குடையவன். சோழராசன் கட்டளைப்படி மங்கைநாட்டுக்கு

அரசாகிய இவ்வாழ்வார் குமுதவல்லி யென்னுங் கட்டழகியை மனஞ்செய்துகொள்ளும் பொருட்டு அவள்விருப்பத்தின்படி நாள்தோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து வருகையில், கைப்பொருள்முழுவதுஞ் செலவாய்விட்டதனால் வழிபறித்தாகிலும் பொருள் தேடிப் பாகவததததீயாராதநத்தைத் தடையற நடத்தத் துணிந்து வழிச்செல்வோரைக் கொள்ளையடித்து வரும்போது ஸ்ரீமந்நாராயணன் இவரை யாட்கொள்ளக் கருதித் தான் ஒரு பிராமணவேடங் கொண்டு பலஅணிகலங்களைப் பூண்டு மணவாளக்கோலமாய் மனவியுடனே இவரெதிரில் எழுந்தருள, இவர் கண்டு களித்து ஆயுதபாணியாய்ப் பரிவாரத்துடன் சென்று அவர்களை வளைந்து வஸ்திர–ஆபரணங்களையெல்லாம் அபகரிக்கையில், அம்மணமகன் காலிலணிந்துள்ள மோதிரமொன்றைக் கழற்றமுடியாமையால் அதனையும் விடாமற் பற்களாலே கடித்து வாங்க, அம்மிடுக்கை நோக்கி எம்பெருமான், இவர்க்கு 'கலியன்' என்று ஒருபெயர் கூறினு னென உணர்க. தமிழ்வேதம் – வேதங்களின் சாராம்சமான கருத்து அமையப் பாடிய தமிழ்ப் பிரபந்தங்கள். வியன்–உரிச்சொல்; வியல்என்பதன் விகாரமுமாம். நெய்வேல் – பகைவரது நிணம் தோய்ந்தவேலுமாம். (2)

[**குருபரம்பரை**]

3. **சீதரன்பூமகள்சேனையர்கோன்றென்குருகைப்பிரா**
**னுதமுனியுய்யக்கொண்டாரிராமர்நல்லாளவந்தா**
**ரேதமில்வண்மைப்பராங்குசதாசரெதித்தலைவர்**
**பாதமடைந்துய்ந்தவாழ்வானெம்பார்பட்டர்பற்றெமக்கே.**

(பொருள்) **சீதரன்** – (பரமாசாரியனான) திருமாலும், **பூமகள்** – (அத்திருமாலினது சிஷ்யையான) திருமகளும், **சேனையர்கோன்**–(அப்பெரியபிராட்டியாரின் சிஷ்யரான) சேனைமுதலியாரும், **தென்குருகைப்பிரான்** –(அச்சேனைத்தலைவரதுசிஷ்யரான) அழகிய திருக்குருகூரில் அவதரித்த தலைவராகிய நம்மாழ்வாரும், **நாதமுனி** – (அச்சடகோபரது சிஷ்யரான) ஸ்ரீமந்நாதமுனிகளும், **உய்யக்கொண்டார்** (அந்நாதமுனிகளின் சிஷ்யரான) உய்யக்கொண்டாரும், **இராமர்** – (அவருடைய சிஷ்யரான) ராமமிச்ர ரென்னுந் திருநாமமுடைய மணக்கால்நம்பியும், **ஆளவந்தார் நல்–** (அவரது சிஷ்யரான ஞானங்கனிந்த) நலங்கொண்ட ஆளவந்தாரும், **ஏதம் இல் வண்மை பராங்குசதாசர்** (அவர்சிஷ்யரான) குற்றமில்லாத உதாரகுணமுள்ள பெரியநம்பியும், **எதித்தலைவர்** (அவர்சிஷ்யரான) யதிராஜராகிய ஸ்ரீபாஷ்யகாரரும், **பாதம் அடைந்து உய்ந்த ஆழ்வான்**– (அவருடைய) திருவடிகளைச் சரணமடைந்து நல்வாழ்வுபெற்ற கூரத்தாழ் வானும், **எம்பார்**– (அவ்வாழ்வான்போலவே ஸ்ரீபாஷ்யகாரருக்கு அதிஅந்தரங்க சிஷ்யரான) எம்பாரும், **பட்டர்** –(கூரத்தாழ்வானுடைய குமாரரும் எம்பாரது சிஷ்யரு மான) பட்டரும், (ஆகிய இவர்கள்) **எமக்கு பற்று** – எமக்குத் தஞ்சமாவர்; (எ–று)

இந்நூலாசிரியர்க்குப் பட்டர் ஸ்வாசாரியராதலால், குருபரம்பரையில் அவரளவே கூறலாயிற்று. சீதரன் முதற் பட்டர் ஈருகச் சொல்லும் குருபரம்பரைக் கிரமத்தில் எதித்தலைவர்க்குப் பின்னே எம்பார்க்கு முன்னே கூரத்தாழ்வானை வைக்க வேண்டிய அவசியமில்லையாயினும், ஸ்வாசாரியரான பட்டருக்குக் கூரத்தாழ்வான் திருத்தமப்பனுராதல் பற்றியும், தம்குலமுதல்வரான திருவரங்கத்தமுதனுர் ஸ்ரீபாஷ்ய காரருடைய திருவடிகளில் ஆசிரயித்தற்குக் கூரத்தாழ்வான் புருஷகாரராய் நின்றமை பற்றியும், அவ்வாழ்வானை இடையிலே நிறுத்தினுர். இது, இந்நூலாசிரியருடைய குலகுருபரம்பரை யென்க. அன்றியும், ஸ்ரீபாஷ்யகாரரது நியமனத்தின்படி சென்று பட்டர்க்கு த்வயோபதேசஞ்செய்து ஆசாரியராகி அவர்க்குப் பஞ்சஸம்ஸ்காரங்களையும் திருவாய்மொழி முதலிய கிரந்தங்களையும், அவற்றின் வியாக்கியாநங்களையும் அருளினவர், எம்பார்; பட்டருக்கு ஜாதகரும நாமகரண சௌளோபநயநாதிகளையும், ஸ்ரீபாஷ்யாதி கிரந்தங்களையும் அருளினவர், திருந்தந்தையாரான கூரத்தாழ்வான்; ஆதலால், ஆழ்வானையும் பட்டர்க்கு ஆசாரியரென்றல் ஒருவாறு அமையும்.

ஸ்ரீதரன் – வடசொல்; திருமகளைத் (திருமார்பில்) தரிப்பவன்; பூமகள்– (மலர்களிற் சிறந்ததான) தாமரைமலரில் வாழும் மகள். தென்குருகை–தெற்கிலுள்ள குருகூரெனினுமாம்; இது, தென்பாண்டிநாட்டிலுள்ளது. ஆழ்வார் திருநகரியென வழங்கும். நாதமுனி– தலைவராகிய முனிவர்; யோகீசுவரர். முநி–மநநசீலன்; ஸ்ரீரங்கநாதனுடைய 'நாதன்' என்ற திருநாமத்தை வகித்து நம்மாழ்வாரால் தமக்கு உபதேசிக்கப்பட்ட அர்த்தங்களை அடைவே எப்பொழுதும் மநநம்பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிற அந்தணராதலால், நாதமுனி யென்று பெயர் வழங்கலாயிற்று என்பதையும் உணர்க. உய்யக்கொண்டார்–மணக்கால்நம்பி முதலிய பலரையும் உய்யுமாறு ஆட்கொண்டவர்; அன்றி, நாதமுனிகளால் உய்வுபெற ஆட்கொள்ளப் பட்டவ ரெனினுமாம். மணக்காலென்கிற ஊரில் திருவவதரித்தவ ராதலால் மணக்கால்நம்பி யென்று திருநாமம்பெற்ற ஆசாரியரது இயற்பெயர், ராமர் என்பது; கடவுளின் பெயரை அடியார்கட்குஇடுதல் மரபு. நாதமுனிகளின் பேரனுரான யமுனைத்துறைவர் இளமையிலே ராஜபுரோகிதனும் மகாவித்துவானுமான ஆக்கியாழ் வானேடு வாதஞ்செய்யத்தொடங்கியபோது இராசபத்தினியானவள் 'இவர் தோற்க மாட்டார்' என்று அரசனுக்கு உறுதிகூற, அரசன் அதனை மறுத்து, 'நமது ஆக்கியாழ்வான் தோற்ருல் இவர்க்குப் பாதிஇராச்சியம் தருவேன்' என்று பிரதிஜ்ஞைசெய்ய, உடனே நடந்த பலவகை வாதங்களிலும் யமுனைத்துறைவரே வெற்றியடைய, அதுகண்டு தனதுபிரதிஜ்ஞை நிறைவேறினமைபற்றி மகிழ்ச்சிகொண்ட இராசமகிஷி 'என்னையாள வந்தவரோ' என்று கொண்டாடியதனுல், இவர்க்கு 'ஆளவந்தார்' என்று திருநாம மாயிற்று. பெரியநம்பியின் மறுபெயரான பராங்குசதாசரென்பது பராங்குசரென்னும் ஒருதிருநாமத்தையுடைய நம்மாழ்வாரது அடியவரென்று பொருள்படும். இவர் ஸ்ரீபாஷ்யகாரர்க்குப் பஞ்சஸம்ஸ்காரங்களையும் மந்த்ரரத்நத்தையும் அருளி அவரை நம்

தரிசநப்பிரவர்த்தகராம்படி செய்திட்ட சிறப்புத்தோன்ற, இவர்க்கு ‘ஏதமில்வண்மை’ என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இங்கு வண்மை, கைம்மாறு கருதாது மந்திரோபதேசஞ்செய்தல்; அதற்கு ஏதமின்மை, நூல்முறைக்கும் சிஷ்டாசாரத்துக்கும் சிறிதும் வழுப்படாமை. எதித்தலைவர் – சந்யாசிசிரேஷ்டர். யதி என்ற வடசொல், எதியென விகாரப்பட்டது. யந்திரம் – எந்திரம், யமன் – எமன், யஜ்ஞம் – எச்சம், யது – எது, யஜுர் – எசுர் என்பன போல. ஆழ்வான் – எம்பெருமானுடைய குணகணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர். கூரமென்கிற தலத்தில் அவதரித்தவராய், அத்தலத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய ‘ஆழ்வான்’ என்ற திருநாமத்தை வகித்த வராதலால், ‘கூரத்தாழ்வான்’ என்று வழங்குகிற பெயர். இங்கு நாமைகதேசே நாமக்ரஹணத்தால் ‘ஆழ்வான்’ எனப்பட்ட தென்றும்கொள்க. ஸ்ரீபாஷ்யகாரர் கோவிந்த பட்டருடைய வைராக்கியத்தைக் கண்டு அவர்க்குச் சந்யாசாச்சிரமந் தந்தருளித் தமது திருநாமங்களிலொன்ருன எம்பெருமானு ரென்ற பெயரை அவர்க்குச்சாத்த, அவர் அப்பெரும்பெயரைத் தாம் வகிக்க விரும்பாதவராய் ‘தேவரீர்க்குப் பாதச்சாயை யாயிருக்கிற அடியேனுக்குத் தேவரீர் திருநாமச்சாயையே அமையும்’ என்று விண்ணப் பஞ்செய்ய பாஷ்யகாரரும் அப்பெயரையே சிதைத்து எம்பார் என்று பெயரிட்டருளினார். பண்டிதர்க்கு வழங்குகின்ற ‘பட்டர்’ என்ற பெயர் – கூரத்தாழ்வானுடைய குமாரர்க்குச் சிறப்பாகவழங்கும். எம்பெருமானாரால் நாமகரணஞ்செய்தருளப் பெற்றவர், இவர். பற்று– பற்றுக்கோடு, ரக்ஷகம். எமக்கு என்ற தன்மைப்பன்மை, ஸ்ரீவைஷ்ணவரனை வரையும் உளப்படுத்தியது; கவிகட்குரிய இயற்கைப்பன்மையுமாம். (3)

[எழுபத்துநான்கு சிங்காசநாதிபதிகள்]

4. **திருமாலையாண்டான் திருக்கோட்டிநம்பி திருவரங்கப்**
**பெருமாளரையர்திருமலைநம்பிபெரியநம்பி**
**யருமால்கழல்சேரெதிராசர் தாளிற்சிங்காதனராய்**
**வருமாரியர்களெழுபத்துநால்வரென்வான்றுணையே.**

(பொருள்) **திருமாலையாண்டான்–, திருக்கோட்டிநம்பி–, திருவரங்கப்பெருமா ளரையர்–, திருமலைநம்பி–, பெரியநம்பி–,** (என்பவர்களுடைய) **அரு மால் கழல்** – அருமையான சிறந்த திருவடிகளை, **சேர்** – அடைந்த, **எதிராசர்** – எம்பெருமானுருடைய, **தாளின்**–திருவடிசம்பந்தத்தால், **சிங்காதனர் ஆய் வரும்** – ஸிம்ஹாஸநாதிபதிகளாய் விளங்குகின்ற, **ஆரியர்கள் எழுபத்துநால்வர்** – ஆசாரியர்கள் எழுபத்துநான்குபேரும், **என் வான் துணை** – எனக்குச் சிறந்த துணையாவர் (எ–று)

முதலிரண்டியிற்குறித்த ஐவரும், ஸ்ரீபாஷ்யகாரர்க்குப் பஞ்சாசாரியரெனப்படு வர். அவர்களில், திருமாலையாண்டான், இவர்க்குத் திவ்வியப்பிரபந்த வியாக்கியாநம் அருளிச்செய்து ‘சடகோபன் பொன்னடி’ என்கிற திருநாமத்தைச் சாத்தியருளினர். திருக்கோட்டியூர்நம்பி, இவர்க்கு திருமந்த்ரார்த்தத்தையும் சரமச்லோகார்த்தத்தையும்

அருளிச்செய்து ‘எம்பெருமானுர்’ என்கிற திருநாமத்தைச் சாத்தியருளினுர்; திருவரங்கப் பெருமாளரையர், இவர்க்குப் பெரியதிருமொழிமூலமும், திருவாய்மொழிமூலமும் கண்ணிநுண்சிறுத்தாம்புவியாக்கியாநமும் த்வயார்த்தமும் அருளிச்செய்து ‘லக்ஷ்மண முனி’ என்கிற திருநாமஞ்சாத்தியருளினுர்; பெரியதிருமலைநம்பி, இவர்க்கு ஸ்ரீராமாயண வியாக்கியாநம் அருளிச்செய்து ‘கோயிலண்ணன்’ என்கிற திருநாமஞ்சாத்தியருளினுர். பெரியநம்பி, இவர்க்கு ‘ராமாநுஜன்’ என்கிற திருநாமமும் திருமந்திரமும் த்வயசரம ச்லோகங்களும் உள்படப் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தருளி, முதலாயிரம் இயற்பா என்ற ஈராயிரமூலத்தை அருளிச்செய்தார்.

எழுபத்துநால்வர் – பட்டர், சீராமப்பிள்ளை, கந்தாடையாண்டான், அநந்தாழ் வான், எம்பார், கிடாம்பியாச்சான் முதலியோர். இவர்கள் பெயர்வரிசையை, குருபரம்பராப் பிரபாவம் முதலிய நூல்களிற் காணலாம். இவர்கள், ஸ்ரீபாஷ்யகாரரிடமிருந்து உபயவேதாந்தார்த்தங்களையும் உபதேசம்பெற்று அவராலேயே ஆசாரியபுருஷர்களாக நியமிக்கப்பட்டவர்கள். சிங்காதனராய்வரும் ஆரியர்கள் – ஆசாரியபீடத்தில் வீற்றிருந்து அதற்கு உரிய அதிகாரத்தை நிர்வகிப்பவர்கள். ‘எதிராசர்தாளிற் சிங்காதன ராய் வருமாரியர்கள்’ என்ற சொற்போக்கினுல், பாஷ்யகாரராகிய ஒருசக்ரவர்த்தியின் கீழடங்கி ஆட்சிசெய்யும் சிற்றரசராவர் இவரென்பது தோன்றும்.

‘‘மங்காதகீர்த்தியெதிராசர்பாதமணிமுடியாத், தங்காதலாற்றந்தலைச் சூடிக் கொண்டு தடங்கடல்சூழங்காசினியைப்புரக்குமெட்டெட்டுடனையிரண்டாஞ், சிங்காதனக் குருராயர்தம்போர்சொலிற் றீதறுமே’’ என்ற திருவேங்கடக்கலம்பகத்துக் காப்புச்செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

[**நம்மாழ்வார்**]

**5. மாறன்பராங்கதிதந்தடியேனைமருட்பிறவி**
**மாறன்பரானகுழாத்துள்வைப்பான்றொல்லைவல்வினைக்கோர்**
**மாறன்பராமுகஞ்செய்யாமலென்கண்மலர்க்கண்வைத்த**
**மாறன் பராங்குசன் வாழ்கவென்னெஞ்சினும்வாக்கினுமே.**

(பொருள்)**மால்தன்** – திருமாலினுடைய, **பராங்கதி** – பரமபதத்தை, **தந்து** –அளித்து, **அடியேனை** – தொண்டனுன என்னை, **மருள் பிறவி மாறு அன்பர் ஆன குழாத்துள் வைப்பான்** – மயக்கமுள்ள பிறப்பு நீங்கப்பெறுகிற அடியார்களான முக்தர்களுடைய கூட்டத்தில் (ஒருவனுகச்)சேர்த்தருளவிருப்பவனும், **தொல்லை வல்வினைக்கு ஓர்மாறன்** – அநாதியாய் வருகிற வலிய கருமங்கட்கு ஒரு சத்துருவாயுள்ளவனும், **பராமுகம் செய்யாமல் என் கண் மலர்க்கண் வைத்த மாறன் பராங்குசன்** – உபேக்ஷைசெய்யாமல் என்மீது தாமரைமலர்போன்ற(தனது) திருக்கண்பார்வையை வைத்தருளியவனும் மாறனென்றும் பராங்குசனென்றும் பெயர்களையுடையவனுமான ஸ்ரீசடகோபன், **என் நெஞ்சினும் வாக்கினும் வாழ்க** – எனது மனத்திலும், மொழியிலும் வாழக்கடவன். (எ–று)

*கே$_3$ாபாலர்க்கு மிடுக்குடைத்தான ஸிம்ஹபுங்க$_3$வம் போலே அடங்காமல் திரிகிறவன். (அத்தன்) ஸ்வாமீ. (7)*

***அவ.–*** *ஸௌலப$_4$்யனவன் அப்பூச்சி காட்டுகின்றானென்கிறார்.*

***ஸ்வா.– எட்டாம்பாட்டு.*** *(கொங்கையித்யாதி$_3$) குப்ஜைக்குக் கொங்கை போலேயிறே முதுகில் வலியகூன்இருப்பது. இவளுடைய உடம்பில்வக்ரம் போலே காணும் இவளுடைய அறிவும். இவளுடைய வசநத்தைக்கொண்டு, ''மாத்ருபித்ருவசநபரிபாலநம் செய்யப்போனார்'' என்கையொழிந்து, குப்ஜா வசநம்செய்யவோ போய்த்துவென்னில்; கூன்தொழுத்தைக்கடிய சொல்லு முண்டாயிற்று; அந்தக்கடிய சொல்லைக்கேட்டிறே சக்ரவர்த்தி அநுமதி செய்தது. எல்லாத்துக்கும் ஹேது இவளாகையாலே இவள் சொல்கொண்டே போனாரென்னலாமிறே. பீ$_3$ஜாங்குரந்யாயத்தாலே.*

*(குவலயத்துங்கக்கரியும்) பூ$_4$மியிலுண்டான ஆனைகளில்விஞ்சின ஶத்ருஞ்ஜயன் முதலான வானைகளும். (பரியும்) உச்சைஶ்ரவஸ்ஸுபோலே யிருக்கிற குதிரைகளும். (இராச்சியமும்) அக$_2$ண்ட$_3$கமான ராஜ்யமும். (எங்கும்) தாமெழுந்தருளுகிற காடுதானும். தாமெழுந்தருளுகிறகாடும் ப$_4$ரதனுக்குக்*

(அசோதையிளஞ்சிங்கம் – கோபாலகோளரி) தாய்க்கடங்காதவன் ஊர்க்கு அடங்கானிறே. கோள் – மிடுக்கு. (அத்தன்) ஸ்வாமீ. கீழ்ச்சொன்ன ஸ்வப$_4$ாவங்களுக்குத் தோற்றுச் சொல்லுகிற வார்த்தை. வந்தப்பூச்சிகாட்டுகின்றான்.(7)

**கொங்கைவன் கூனி சொற்கொண்டு குவலயத்**
**துங்கக்கரியும் பரியுமிராச்சியமும்**
**எங்கும் பரதற்கருளி வன்கானடை**
**அங்கண்ணனைப் பூச்சிகாட்டுகின்றா னம்மனே யப்பூச்சிகாட்டுகின்றான்.(8)**

**வ்யா.– எட்டாம்பாட்டு.** (கொங்கையித்யாதி$_3$) முதுகிலேமுலை புறப்பட்டாப்

***''இளம்சிங்கம்'' என்றபோதே இவ்வர்த்த$_2$ம் ஸித்$_3$தி$_4$த்திருக்க மீளவும் ''கோளரி'' என்ன வேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (அசோதையித்யாதி$_3$). இத்தால் ''இளஞ்சிங்கம்'' என்றது– ஹேதுவும், ''கோளரி'' என்றது – ஸாமர்த்$_2$யமுமென்று தோன்றுகைக்காக, மீளவும் அருளிச்செய்தாரென்றதாயிற்று. ''தத்துக்கொண்டாள்கொலோ, தானேபெற்றாள்கொலோ, என்னும்படியிருக்குமவனாய்'' என்றத்$_4$யாஹரித்து''சித்தமனையாள்'' இத்யாதி$_3$யாக அந்வயமாதல்; அன்றிக்கே ''சித்தமனையாளித்யாதி$_3$ – இவன்படி எத்திறம், இவனைத் தத்துக்கொண்டாள்கொலோ, தானேபெற்றாள்கொலோ'' என்றத்$_4$யாஹரித்து அந்வயமாதல் கண்டுகொள்வது. (7)***

*அரு.– எட்டாம்பாட்டு. (கொங்கையித்யாதி$_3$) ''கொங்கையையுடையளான*

*கொடுத்தாரோவென்னில்; வாலி, ராமஶரத்தைப்பிடித்துவைத்து, ''என்னைக் கொன்றத்தால் உமக்கென்ன லாப$_4$முண்டு'' என்று நாநாவான விகல்ப விஶேஷங்களைச் சொல்ல, அவன்சொன்னதுக்கெல்லாம் போரும்படி ''ப$_4$ரதராஜ்யத்திலே நீ ப்$_4$ராதாவினுடைய ஸ்த்ரீயை ஸ்வீகரிக்கக்கடவையோ?'' என்ன; ''அந்த தே$_3$ாஷம் அவனுக்குமில்லையோ'' என்ன; அப்படிச் சொல்லுவுதியாகில் கண்டவிடமெல்லாமம் கழுமலையாக்குவே னென்றாரிறே. ஆகையால் காடும் ப$_4$ரதராஜ்யமென்னுதல்; அன்றிக்கே, த$_4$ர்மத்தாலும் ஶௌர்யத்தாலும் நீ எறிந்துகொள்ளவல்லதெல்லாம் உனக்குத் தந்தோமென்னுதல். பெருமாள் ''நாம் தந்தோம்'' என்னாரே, ''ஐயர் தந்தார்'' என்னுமித்தனையொழியவாயிருக்க, பெருமாள் தந்தாரென்பானென்னென்னில்; சக்ரவர்த்தி கொடுத்தாலும்,*

---

போலே திரண்டு கிளர்ந்து வலிய கூனையுடையளான மந்த$_2$ரையுடைய வசநத்தைக் கொண்டு. காட்டுக்குப்போயிற்றுபித்ருவசநங்கொண்டாயிருக்க, குப்ஜையுடைய வசநங்கொண்டென்பானென்னென்னில் ''ந மந்த$_2$ராயா ந ச மாதுரஸ்யா தே$_3$ாஷோ ந ராஜ்ஞ:'' என்கிறபடியே வநப்ரவேஶஹேதுக்கள் சொல்லுகிறவிடத்தில் முந்துற வெடுத்தது இவளையிறே. இவளுடைய வசநத்தாலே கலக்கிய மாமனத்தனளாயிறே கைகேசி வரம் வேண்டிற்று; அதடியாகவிறே சக்ரவர்த்தி போகச்சொல்ல வேண்டிற்றும். ஆகையால் எல்லாவற்றுக்கும் மூலம்இதுவாகையாலே இவளுடைய சொல்கொண்டு போனாரென்கிறது.

(குவலயத்துங்கக்கரியும்) பூ$_4$மியில் ஆனைகளெல்லாவற்றிலும்விஞ்சின ஶத்ருஞ்ஜயன் முதலானவானைகளும். (பரியும்) அப்படி லோகவிலக்ஷணமான குதிரைகளும். (இராச்சியமும்) அக$_2$ண்ட$_3$கமான ராஜ்யமும், (எங்கும்) ''இக்ஷ்வாகூணாமியம் பூ$_4$மிஸ்ஸஶைலவநகாநநா'' (ரா.கி.18–5) என்கிறபடியே எழுந்தருளுகிற காடுதானும்.(பரதற்கருளி) கைகேயி வராநுகு$_3$ணமாக சக்ரவர்த்தி வசநத்தின்படியே

---

***வன்கூனியை'' என்று சொல்லலாயிருக்க, கொங்கைபோலேயென்று நிந்தை$_3$ தோன்றவேண்டியருளுகிறார் (முதுகிலேயித்யாதி$_3$). ''பிதுர்வசந நிர்தே$_3$ஶாத்'' என்று காட்டுக்குப்போகைக்கு ப்ரத$_4$ாநஹேது சொல்லியிருக்க, குப்ஜாவசநத்தை ப்ரத$_4$ாநஹேதுவாகச் சொல்லக்கூடுமோவென்கிற ஶங்காநுவாத$_3$ம்பண்ணிப்பரிஹரிக்கிறார் (காட்டுக்கித்யாதி$_3$). ''ந மந்த$_2$ராயா:'' என்கிற வசநத்தில் ப$_4$ரதாழ்வான் விஷாத$_3$ாதிஶயத்தாலே மற்றை ஹேதுக்களைக்கழிக்கும் போது, முந்துற இத்தைக்கழிக்கையாலே இதுவே ப்ரத$_4$ாநஹேதுவென்று கருத்து. அந்த ப்ரத$_4$ாந்யத்தை உபபாதி$_3$க்கிறார் (இவளுடையவித்யாதி$_3$).***

***''கரியும் பரியும்'' என்றது – ஜாத்யேகவசநமென்று கருதியருளுகிறார் (பூ$_4$மியிலித்யாதி$_3$). ''குவலயத்துங்க'' என்றவிஶேஷணம் ''கரியும் பரியுமிராச்சியமும்'' என்றத்தோடந்வயிக்கிறதென்று திருவுள்ளம். ''கூனிசொல்லைக்கொண்டோ ப$_4$ரதற்கருளின***

*பெருமாள் அநுமதி வேணுமிறே, அப்ரதிஷித்$_3$த$_4$ம் அநுமதம் ப$_4$வதியிறே.*

*(வன்கானடையங்கண்ணன்) ஸுமந்த்ரனையும் தேரையும் திருப்பிவிட்டு, துன்னுவெயில் வறுத்த வெம்பரலாய், புகும்வழி தெரியுமித்தனையொழியப் புறப்படும்வழி தெரியாதிறே. அப்படியிருக்கிற காட்டிலே திருவடிகள் நோவ எழுந்தருளுகையாலே அழகிய ஸுலப$_4$னென்கிறுர்.(8)*

***அவ.–*** *பெருமிடுக்கன் அப்பூச்சி காட்டுகின்றுனென்கிறுர்.*

***ஸ்வா.–*** *ஒன்பதாம்பாட்டு. (பதகமித்யாதி$_3$) பதகமுதலையின் வாயிலே அகப்பட்ட ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்தனுன ஸ்ரீக$_3$ஜேந்த்$_3$ரன். ''க$_3$ஜ ஆகர்ஷதே தீரே க்$_3$ராஹ*

ஸ்ரீப$_4$ரதாழ்வானுக்குக் கொடுத்தது.

(வன்கானடையித்யாதி$_3$) ஒருவரால் ப்ரவேஶிக்கவரிதான வலிய காட்டை யடைந்த அழகிய ஸுலப$_4$னுனவன். கட்டினகாப்போடே காடேறப்போகச்சொன்ன விடத்தில், முக$_2$த்தில் கருகுதலின்றிக்கே, முடியைத் தவிர்ந்து, ஜடையைப் புனைந்து நாட்டைவிட்டுக் காடேறப்போனபடியை நினைத்து, அழகிய ஸுலப$_4$னென்கிறது. அன்றிக்கே, ''அங்கண்ணன்'' என்றது ''ராம: கமலபத்ராக்ஷ:'' (ரா.ஸு.35–7) என்கிற படியே அழகிய திருக்கண்களையுடையனென்னவுமாம். அப்போது, ''ராஜ்யைஶ்வர்யத்தை விட்டுக் காட்டில் போந்தோம்'' என்னும் க்லேஶமின்றிக்கே, அகவாயில் ஹர்ஷம் திருக்கண்களிலே தோன்றும்படியாகப் போனபடியைச் சொல்லுகிறது. (8)

**பதகமுதலைவாய்ப் பட்டகயிறு**
**கதறிக்கைகூப்பி யென்கண்ணு! கண்ணுவென்ன**
**உதவப்புள்ளூர்ந்தங் குறுதுயர்தீர்த்த**
**அதகன்வந்தப்பூச்சிகாட்டுகின்று னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றுன். (9)**

**வ்யா.– ஒன்பதாம்பாட்டு.** (பதகமுதலை) பதகம் – முதலையினுடைய கொடுமை, ''கொடியவாய்விலங்கு'' (பெரிய திரு.5–8–3) என்னக்கடவதிறே. ''அதன்விடத்தினுக் கனுங்கி யழுங்கியவானை'' (திருப்பள்ளி. 2) என்னும்படி ஸ்ரீக$_3$ஜேந்த்$_3$ராழ்வானை நோவுபடுத்தின கொடுமையைச் சொல்லுகிறது. அன்றிக்கே, ''பாதகம்'' என்கிறத்தை

***தென்னவருளுகிறுர் (கைகேயி இத்யாதி$_3$). ''நாகம் க$_3$ந்துகாமஸ்ய த்யஜதஶ்ச வஸுந்த$_4$ராம்। ஸர்வலோகாதி$_4$கஸ்யேவ லக்ஷ்யதே சித்தவிக்ரியா'' என்கிற வசநத்தைக்உட்கொண்டு அழகையும் ஸௌலப்$_4$யத்தையு முபபாதி$_3$க்கிறுர் (கட்டினவித்யாதி$_3$). (8)***

***அரு.ஒன்பதாம்பாட்டு. (பதகமுதலையித்யாதி$_3$) (விலங்கு) என்று – திர்யக்காய், முதலையைச்சொல்லுகிறது. கொடுமையை ப்ரமாணபூர்வகம் விஶேஷிக்கிறுர் (அதனித்யாதி$_3$). (விடத்தினுக்கு) விஷத்துக்கு. (அனுங்கி) நோவுபட்டு. (அழுங்கிய) கூப்பிட்ட. (அதாவது)***

*ஆகர்ஷதே ஜலே'' (விஷ்ணு தர்மம் 69–46) என்று நெடுங்காலம் நீருக்கிழுக்க, கரைக்கிழுக்க, ''ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்தனை க$_3$ஜேந்த்$_3$ரனை விரோதி$_4$த்தது பாதகமோ? இதுக்கு ஹேதுவானது பாதகமோ?'' என்னும் விகல்பம் தோன்றினுல், ஶாபபோபஹதனுய்ச் செய்தது மாய், ஶாபவிமோசநஸாபேக்ஷனுமாய்ச் செய்ததுமாகையாலே, இதுக்கு ஹேதுவான பூர்வபாபமே பாதகமாமித்தனை யிறே. அன்ருகில் ஶபித்தவன் மேலே வைக்கையிறே உள்ளது. ஆனுலும் ''பதகமுதலை'' என்று – முதலையின் மேலே பாதகத்தை வைத்தாரே.*

*(கதறிக்கைகூப்பி என்கண்ணு! கண்ணுவென்ன) ''நாராயணு!ஓ! மணிவண்ணு!'' என்ருப்போலேயிறே, ''கண்ணு! கண்ணு!'' என்றதும், ''கதறி'' என்பானென்னென்னில்; அதி$_4$காரத்துக்குத் தகுதியல்லாததைச் சொல்லுகை யாலே. தகுதிதானென்னென்னில்; நெஞ்சுக்கு விஷயமான தே$_3$வதாந்தர்யாமி*

''பதகம்'' என்று குறைத்துக்கிடக்கிறதாய், பாதகத்தையுடைத்தான முதலை யென்னவு மாம். அதாவது – ஶாபோபஹதமாய் வந்து கிடந்ததிறே. இம்முதலை ''ஆனையாலே தன்னுடைய ஶாபமோக்ஷம்'' என்றறிகையாலே தன் கார்யஸித்$_3$தி$_4$யளவும் இவன்காலை பிடித்து பிடி நழுவவிடாதே நின்றபடி. (வாய்ப்பட்டகளிறு) அதன் வாயிலே அகப்பட்ட யானையானது. தன்னிலமல்லாமையாலே ஒரு நீர்ப்புழுவின் கையிலே அகப்பட்ட தாய்த்து. வெளிநிலமாகில் இதின் அருகு வரமாட்டாதிறே அது.

(கதறியித்யாதி$_3$) அதின்வாயிலே அகப்பட்டவிடத்தில் ''நம்முடைய ப$_3$லத்தாலே தள்ளிக்கரையேறுகிறேும்'' என்று ''க$_3$ஜ ஆகர்ஷதே தீரே க்$_3$ராஹ ஆகர்ஷதே ஜலே'' என்கிறபடியே ஆயிரம் தே$_3$வஸம்வத்ஸரம் அது நீருக்கிழுக்க, தான் கரைக்கிழுக்கச் சென்ற விடத்திலும், அதுக்குத் தன்னிலமாகையாலும், அபி$_4$மதஸித்$_3$தி$_4$யாலும் ''முழுவலிமுதலை'' (பெரிய திரு.5–8–3) என்னும்படி ப$_3$லமதிஶயித்து, தனக்குத் தன்னிலமல்லாமையாலும், அபி$_4$மதாலாப$_4$த்தாலும் ப$_3$லம் க்ஷீணமாய், துதிக்கை

***என்றது – பாதகத்தையுடைத்தாகையாவதென்றபடி. (கிடந்ததிறே) என்றவநந்தரம் ''ஆகையாலே'' என்றுஶேஷம். (அதாவது) என்றதுக்கு (நின்றபடி) என்றத்தோடந்வயம். இப்படி க$_3$ஜேந்த்$_3$ராழ்வானைப் பிடிக்கையால் இதுவே பாதகமென்று கருத்து. ஆனை ப$_3$லவத்தாயிருக்க, அகப்படுவானென்னென்ன வருளுகிருர் (தன்னிலமித்யாதி$_3$).***

***''கைகூப்பி–கதறி–கண்ணு கண்ணு'' என்றந்வயித்து இந்த காயிகவாசிகங்கள் மாநஸி கமான ததே$_3$கரக்ஷகத்வாத்$_4$யவஸாயமில்லாதபோது கூடாமையாலே, அதுக்கும் உபலக்ஷணமாக்கி இதுக்கு, ஆகிஞ்சந்ய அநந்யக$_3$தித்வங்களைச் சொல்லவேண்டுகையாலே, இவற்றையெல்லாம் ஸப்ரமாணமாக உபபாதி$_3$த்துக்கொண்டு தாத்பர்யமருளுகிருர் (அதன்வாயிலே என்று தொடங்கி பலகாலும் சொல்ல) என்னுமளவும். (அபி$_4$மதஸித்$_3$தி$_4$ யாலும்) என்றது – ஶாபவிமோசகனுன க$_3$ஜேந்த்$_3$ரன்திருவடிகளை லபி$_4$க்கையாலுமென்றபடி.***

*யென்னுதல். ஸ்வாந்தர்யாமி யென்னுதலிறே.*

*இந்த ஆபத்து ''மழுங்காத ஞானமே படையாக நீங்கும்'' என்று நெடுங்காலம் சென்றவளவிலும், நீங்காமையாலே, ''தி$_4$க்$_3$ ப$_3$லம் க்ஷத்ரிய ப$_3$லம்'' என்ற விஶ்வாமித்ரனைப்போலே ப$_4$க்திமார்க$_3$த்தை தி$_4$க்கரித்து ப்ரபத்தி மார்க்க$_3$த்திலே போந்து, சக்ரவர்த்தி ஶப்$_3$த$_3$வேதி$_3$யாய் எய்தாப்போலேயிறே ''கண்ணா!கண்ணா'' என்ற சொல்முடிவதற்கு முன்னே அவன் கண்ணிலே தோன்றும்படி, அந்த:புரம் கைநெரிக்க, ச$_2$த்ர சாமரங்கள் பிற்பட, வெறுந்தரையிலே நாலிரண்டடியிட்டு, பெரியதிருவடியைப் பண்செய்யப் பெறாமல் ஊர்ந்துசென்று நின்று பூர்வப$_4$க்தி தன்னையே ஸாத்$_4$யமாக்கினானிறே.*

*(அங்குறுதுயர்தீர்த்த) ''அங்கு'' என்றது –முதலை கவ்வின விடத்தில். (உறுதுயர்) ஆனையின்துயர்ஆனைக்கும் தனக்கும் தக்கதுண்டிறே. அன்றிக்கே,*

---

முழுத்தும்படியாகையாலே, ''இனி நம்மால் செய்யலாவதொன்றுமில்லை'' என்று ''பரமாபத$_3$மாபந்நோ மநஸா சிந்தயத்$_3$த$_4$ரிம்'' (விஷ்ணு த$_4$ர்மம் 69–47) என்கிறபடியே இத்த$_3$ஶையில் ஸர்வேஶ்வரனையே தனக்கு ரக்ஷகனாக நினைத்து; தன்கையையெடுத்து அஞ்ஜலிபண்ணி, தன்ஆர்த்தியெல்லாம் தோற்றும்படி கூப்பிட்டுக்கொண்டு, 'எனக்கு நிர்வாஹகனானவனே!'' என்று பலகாலும்சொல்ல.

''நாராயணா!ஓ!மணிவண்ணா! நாகணையாய்! வாராய்'' (சிறியதிருமடல் 50) என்று கூப்பிட்டானாகவருளிச்செய்தார் திருமங்கையாழ்வார்; இவர் ''என்கண்ணா! கண்ணா! என்று கூப்பிட்டானாகவருளிச்செய்தார். ''மூலேதி முக்தபத$_3$மாலபதி த்விபேந்த்$_3$ரே'' என்று கொண்டு– ''மூலமே' என்று கூப்பிட்டானாக பௌராணிகர் சொன்னார்களிறே. இவைதன்னில் சேரும்படி யென்னென்னில், ''மூலம்'' என்கிற விடத்தில் அஸாத$_4$ராண விக்$_3$ரஹ விஶிஷ்டனான ஆகாரத்தை நினைத்துக் கூப்பிட்டானாகையாலே, அதுக்குப் பர்யாய ஶப்$_3$த$_4$ங்களையிட்டு ஆழ்வார்களருளிச்செய்தார்களாகையால், எல்லாம் தன்னில் சேரக்குறையில்லை.

---

***(அபி$_4$மதாலாப$_4$த்தாலும்) என்றது – கைங்கர்யாலாப$_4$த்தாலு மென்றபடி. வீப்ஸையால் ப$_2$லிதம் (பலகாலும்) என்றபடி.***

***நாராயணத்வத்தையிட்டுக் கூப்பிட்டானென்றும், 'எனக்கு நிர்வாஹகனே' என்று கூப்பிட்டானென்றும், மூலத்வத்தையிட்டுக் கூப்பிட்டானென்றும், இம்மூன்று பேருடைய வாக்யங்களும் பரஸ்பர விருத்$_3$த$_4$ங்களென்று ஶங்கித்துப்பரிஹரிக்கிறார் (நாராயணா ஓ! வித்யாதி$_3$). பௌராணிகரோடேவிரோத$_4$ம் பரிஹரித்தது-இப்பாசுரங்களிலும் அர்த்தா$_2$த் பரிஹ்ருதமென்று கொள்வது. (அதுக்கு) மூலமென்று கூப்பிட்டதுக்கு. பர்யாயமென்றது– ஏகவிக்$_3$ரஹ விஶிஷ்ட விஷயமாகையாலே.***

***''உதவப்புள்ளூர்ந்து' என்கிறவிடத்தில் த்வராதிஶயம் தோன்றுகையால், அத்தை***

*''அங்கு'' என்றது – துதிக்கை முழுத்தும்படியான வாபத்தாய், களகளாஶப்$_3$த$_3$ம் தோன்ற க்லேஶிக்கிறவளவிலும் ''நின்றுஆழிதொட்டான்'' என்னும்படி நின்றது; இன்னமும் பூர்வோபாஸந வாஸநையிலே புரியுமோவென்றிறே. அந்த ப்ரபத்தி ஸ்வீகாரத்திலும் உபாயபு$_3$த்$_3$தி$_4$ கழியாதபோது இத்தனை அருமையுண்டுபோலேகாணும். இத்தனை காலமும் இவனுக்கு நடந்தஶக்தி இன்று குலையவேண்டிற்றிறே, இந்த ஸ்வீகாரப்ரபத்திதனக்கும் இந்த ப்ரபத்தி தனக்கும் ப$_2$லப்ரத$_3$ாநம் செய்யவேண்டிற்றாகில் ஸங்கல்பஸஹஸ்ரைக தே$_3$ஶமே போருமிறே. இத்தைப்பற்றவிறே ப$_4$ட்டர் ''ப$_4$க$_3$வதஸ் த்வராயை நம:'' என்றருளிச்செய்ததும், அங்ஙனன்றிக்கே, இப்படி த்வரித்திலனாகில் ''மறையும் மறையும்'' என்றாரிறே சிற்றாட்கொண்டார்.*

---

(உதவவித்யாதி$_3$) இந்த ஆர்த்தத்$_4$வநி திருச்செவிப்பட்டபோதே திருப்படுக்கையில் நின்றும் பதறியெழுந்திருந்து ''அதந்த்ரித சமூபதிப்ரஹித ஹஸ்தம்'' இத்யாதி$_3$ப்படியே ஸேநைமுதலியார் திருக்கைக்கொடுக்கவும் பற்றாதே, திருவடிநிலை கோத்து, எழுந்தருளுகையுமின்றிக்கே, வெறும் தரையிலே பத்தெட்டடியிட்ட பதற்றத்தைக் கண்டு 'இதுக்கடியென்?' என்று ப$_4$யப்பட்டு தி$_3$வ்யாந்த:புரம் கைநெரிக்க, பெரிய திருவடியைப் பண்செய்யப்பெறாமல், வெறும்புறத்திலே மேற்கொண்டு, ''அந்த ஆர்த்திக்கு உதவவேணும்'' என்னுமத்தைப்பற்ற அவனை ப்ரேரித்துவிரைய நடத்திக்கொண்டு சென்று. அந்தப் பொய்கையில் முதலையின் கையிலேயகப்பட்டு ஸ்ரீ க$_3$ஜேந்த்$_3$ராழ்வான் பட்டஅதிமாத்ர து$_3$:க$_2$த்தைப்போக்கின. ஸ்ரீக$_3$ஜேந்த்$_3$ரனுக்கு து$_3$:க$_2$மாவது, ''நாஹம் களேப$_3$ரஸ்யாஸ்ய த்ராணார்த்த$_2$ம் மது$_4$ஸூத$_4$ந கரஸ்த$_2$ கமலாந்யேவ பாத$_3$யோரப்பிதும் ஹரே:'' (விஷ்ணு த$_4$ர்மம்) என்கிறபடியே கையிற்பூ, செவ்வியழியாமல் திருவடிகளில் சாத்தப் பெறுகிறிலோமென்னுமது. (அதகன்) மிடுக்கன். இப்படி ஆஶ்ரிதரக்ஷணம் பண்ணின ஶக்திவிஶேஷத்தைச்சொல்லுகிறது.

---

***ப$_4$ட்டர் ஸ்ரீஸூக்திப்படியே உபபாதி$_3$ப்பதாகத் திருவுள்ளம்பற்றி ''கதறி'' என்கிறத்தை கடாக்ஷித்தும், ''கிமிதிசாகுலாந்த:புரம்'' என்றத்தையும் ''நாகணையாய்'' என்றத்தையும் கடாக்ஷித்துக்கொண்டு அர்த்த$_2$மருளிச்செய்கிறார் (இந்தவார்த்த த்$_4$வநியித்யாதி$_3$). (இத்யாதி$_3$ப் படியே) என்றதுக்கு (மேல்கொண்டு) என்றத்தோடு அந்வயம். கீழ், ''அஸ்வீக்ருதப்ரணீத மணிபாது$_3$கம்'' என்றத்தையும், மேலே ''அவாஹநபரிஷ்க்ரியம்'' இத்யாதி$_3$யையும் கடாக்ஷித்து 'கிமிதிசாகுலாந்த:புரம்' என்றதுக்கர்த்த$_2$மருளிச்செய்கிறார் (பத்தெட்டித்யாதி$_3$). (பண்செய்கை) அலங்கரிக்கை. (விரைய) ஶீக்$_4$ரமாக. உறுகை– அடைகையாய், (பட்ட) என்கிறது. ''கதறி'' என்றத்தைக்கடாக்ஷித்து ''துயர்'' என்றதுக்கு ப$_2$லிதம் (அதிமாத்ரேத்யாதி$_3$). ''துயர்'' என்றது – ஸாமாந்யஶப்$_3$த$_3$மாகையால், களேப$_3$ரத்ராணம் அர்த்த$_2$மாகில், ப்ரமாண விரோத$_4$ம் வருமென்று விஶேஷிக்கிறார் (ஸ்ரீ க$_3$ஜேந்த்$_3$ரேத்யாதி$_3$). (9)***

*(உறுதுயர் தீர்த்தவதகன்) நல்விரகறிந்துஉறுதுயர்தீர்த்தபெருமிடுக்கன். அன்றியே, க்ருபாப்ரேரகனாய் ஸங்கல்ப நிப$_3$ந்த$_4$நமான ஸ்வாதந்த்ர்யம் பின்செல்லும்படியான ஶக்திமானென்னவுமாம். வந்தப்பூச்சி காட்டுகின்றான். (அதகன்) மிடுக்கன். (9)*

**அவ.–** *நிக$_3$மத்தில் இத்திருமொழி கற்றார்க்குப் ப$_3$லம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.*

**ஸ்வா.–பத்தாம்பாட்டு.** *(வல்லாளித்யாதி$_3$) ''பாரதம் கைசெய்தவத்தூதன்'' என்கிறவிடத்தில் ''என்வருகிறதோ'' என்றப$_4$யமும், நூற்றுவர்தம் பட்டழியத் திண்டேர்மேல் முன்னின்ற வலவலையான ப$_4$யமும், காயுநீர்கடம்பேறித் தீயபணத்தில் பாய்ந்த ப$_4$யமும், இருட்டில் பிறந்துபோன விடத்தில் வந்த ப$_4$யங்களும், அநுகூலப்ரதிகூலரால் வந்த ப$_4$யங்களும், ''விழுங்கினதுப்பமும் பாலும் தயிரும் தன் பருவத்துக்கு ஸாத்மியாதோ'' என்கிற ப$_4$யமும், ''அசோதையிளஞ்சிங்கம் – கோபாலகோளரி'' என்னும்படி க$_3$ர்வோத்தரமான வ்யாபாரங்களால் வந்த ப$_4$யமும், அவதாரத்துக்கும் ஹேதுவாய், அவன் கானிடை நடந்த ப$_4$யமும், ஆனைக்கருள்செய்ய உதவப்புள்ளூர்ந்த ப$_4$யமும், வல்லாளிலங்கை மலங்கச்சரம்துரந்தகாலத்து ராக்ஷஸரால்வந்த ப$_4$யமும், எல்லாம் நிவ்ருத்தமாகைக்காக, திருக்கையில் ஆழ்வார்களைக் காட்டியருள,*

---

(வந்தப்பூச்சி காட்டுகின்றான்). (9)

**அவ.–** நிக$_3$மத்தில் இத்திருமொழி கற்றார்க்குப் ப$_2$லம்சொல்லித் தலைகட்டுகிறார்.

**வல்லாளிலங்கைமலங்கச் சரந்துரந்த**
**வில்லாளனை விட்டுசித்தன்விரித்த**
**சொல்லார்ந்தவப்பூச்சிப் பாடலிவைபத்தும்**
**வல்லார்போய் வைகுந்தம் மன்னியிருப்பரே.**

**பெரியாழ்வார் திருவடிகளே ஶரணம்**

**வ்யா.– பத்தாம்பாட்டு.** (வல்லாளிலங்கை) வலிய ஆள்களையுடைத்தாகை யாலே, ஒருவராலடர்க்கவொண்ணாத பரிகரத்தை யுடைத்தாய்க்கட்டுடைத்தான லங்கையானது. ராவணன்மதிக்கும்படியான ஆண்பிள்ளைகள் வர்த்திக்குமூரிறே.

---

***அரு.–*** *பத்தாம்பாட்டு.* ***(வல்லாளித்யாதி$_3$) (அடர்க்கை) – மேலிடுகை. ''வல்லாளன்'' என்கிறதைவிஶேஷித்து உபபாதி$_3$க்கிறார் (ராவணனித்யாதி$_3$). ''மலங்க'' என்றதுக்கு – சித்தவிப்$_4$ரமம் அர்த்த$_2$மாக்கி உபபாதி$_3$க்கிறார் (செருப்புமித்யாதி$_3$). (தேவாரம்) ராக்ஷஸர்களுடைய ஆராத்$_4$ய தே$_3$வதாந்தரம். (பிடாரால்) அபி$_4$மாநத்தால்.***

*பூதநா ஶகடயமளார்ஜுநாதி$_3$களால் வந்த விரோத$_4$த்துக்குப் ப$_4$யப்பட்ட திருவாய்ப்பாடியில் பெண்களுக்கும் இவர்தமக்கும் அவை ப$_4$யவர்த்$_3$த$_4$கங்க ளாயிருக்கையாலேயிறே ''அப்பூச்சி'' என்றது.*

*ஆழ்வார்களைக்காட்டினவாறே, பெண்கள் ''அப்பூச்சி'' என்றருளக் கூடும். அவர்களுடைய ஸ்நேஹமும் ப$_4$யப$_4$ாவநையாகையாலே, ''நெய்த்தலை நேமி'' (1–2–12) என்றது முதலாகப்பலவிடங்களிலும் கண்டார்களேயாகிலும், 'மறக்கவும் ''இப்போதுகண்டோமே'' என்றுநினைக்கவும் கூடுமாகையாலே. இவர் ''வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு''(திருப்பல்.2) என்று தொடங் கிப் பலவிடங்களிலும் ஆழ்வார்களோடே பழகிப் போந்தவர் ''அப்பூச்சி'' என்பானென்னென்னில்; இவர்க்கு ஸ்வரூபம் இதுதானேயாய்ச் சொல்லுகை யாலே யென்னுதல். பெண்கள் பாசுரத்தை வ்யாஜமாக்கினாலும் இதுதானே யிறே இவர்க்கு ஸ்வரூபம். ஆனாலும் ''அப்பூச்சி'' என்கிற பாசுரமில்லையே யாகிலும் ''வயிறு மறுக்கினாய்'' ''அப்பூச்சி'' என்கிறவிவைதானேயிறே இவர்க்கு யாத்ரை. இவரருளிச்செய்த விடங்களிலும் திருவுள்ளத்தில் கிடப்பது இது தானேயிறே.*

*(வல்லாளித்யாதி$_3$) வலிமையாலே பறித்துக்கொண்டதாகையாலே ''வல்லாளிலங்கை'' என்கிறார். (மலங்க) செருப்பும் தேவாரமும் ஒக்கக் கட்டும் படியாக. இலங்கையிலே தேவாரமுமுண்டோவென்னில் ''அக்$_3$நி ஹோத்ராஶ்ச வேத$_3$ாஶ்ச ராக்ஷஸாநாம் க்$_3$ருஹேக்$_3$ருஹே'' என்கிறபடியே அவையுமுண்டாதல். அன்றியிலே, அவர்கள் விரும்பினவை அவர்களுக்குத் தேவாரமிறே. (சரம்துரந்தவில்லாளன்) ''ராமஶரம்'' என்று ப்ரஸித்$_3$த$_4$மிறே. ''மாறுநிரைத்திரைக்கு(திருவாய் 7–4–7)மிறே. ''ஒருவரிருவரோர்மூவர்'' (திருவாய் 8–6–3) என்னக்கடவதிறே. (வில்லாளனை) இதுப்ரஸித்$_3$தி$_4$. (விட்டு சித்தன்விரித்த) இவ்வவதாரத்தில் ஶௌர்யாதி$_3$களைக் கொண்டிறே, எல்லா வவதாரங்களிலும் விரித்தருளிச்செய்ததும். தொடங்குகிறபோதே ''பாழாளாகப் படைபொருதான்'' (திருப்பல். 3) என்றது முதலாகவிறே மேல்விரித்தது.*

---

(மலங்க) செருப்பும் தேவாரமும் ஒக்கக்கட்டிப் போக்கிடம்தேடி மலங்கும்படியாக. (சரந்துரந்தவில்லாளனை) திருச்சரங்களை மேன்மேலும் நடத்தின திருவில்லையுடைய வனை. இத்தால் – ஈஶ்வரத்வப்பிடாராலன்றிக்கே, அவதாரத்துக்கு அநுகு$_3$ணமாகநின்று அம்பாலே அவ்வூரையடர்த்த ஆண்பிள்ளைத்தனத்தைச் சொல்லுகிறது. இத்திருமொழி க்ருஷ்ணாவதார விஷயமாயிருக்க, நிக$_3$மத்தில் இப்படியருளிச்செய்தது அவ்வவதாரத் துக்கும் இவ்வவதாரத்துக்குமுண்டான ஐக்யத்தைப்பற்றவிறே. ''வன்கானடையங் கண்ணன்'' () என்று இந்த ஐக்யம் கீழும் சொல்லப்பட்டதிறே.

பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பவையாம். 'நதே ரூபம் ந சாகாரோ நாயுத$_4$ாநி நசாஸ்பத$_3$ம்'' என்பதினுல் பரம் பொருளுக்கு ரூபமில்லை ஆகாரமில்லை என்று தோற்றலாம். ஆனுல் ''தத$_2$ாபி புருஷகாரோ ப$_4$க்தானும் த்வம் ப்ரகாஶஸே'' என்பதால் ஐயம் தெளிவடைகிறது. ரூபம், ஆகாரம் முதலியவைகள் தனக்காக அல்ல, பக்தருக்காக. முதல் விண்ணப்பத்தில் இவ்விதம் பரார்த்தமான பகவானின் ரூபம் வர்ணிக்கப்படுகிறது.

வேதத்தை ப்ரமாணமாக ஒப்புக் கொள்வோரில் சிலர், ''பரமாத்மா உண்டு, ஆனுல் அவனுக்கு விக்ரஹம் இல்லை'' என்பர், ஆனுல் நமது ஸித்தாந்தத்தில், பரமாத்மா உண்டு என்று கூறும் வேதமே அவனுக்கு ரூப, குண, விபூதிகள் உண்டென்றும் கூறுவதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் உள்ள சில வாக்யங்கள் அவனுக்கு குணங்களும் விக்ரஹமும் இல்லை என ஐயம் கொள்ளும்படி இருக்கின்றன. ''அபாணிபாத$_3$: ஜவநோக்$_4$ரஹீத'' (அவனுக்கு காலில்லை. ஆயினும் விரைவாக நடப்பான். இவ்வாறே அவனுக்குக் கண்ணில்லை, ஆயினும் காண்பான்.) என்றெல்லாம் கூறப்பட்டிருக்கின்றன. மேலும், அவன் நிஷ்கலன், நிர்குணன் என்றும் வேதம் இன்னெரு இடத்தில் கூறுகிறது. ஸ்ரீராமாநுஜர் இந்த சிக்கலை மிகஅழகாக விடுவித்திருக்கிறுர். இதன் மர்மம் என்னவென்றுல், வேதத்திலுள்ள நிஷேதம், விஹித வ்யதிரிக்த விஷயத்தைப்பற்றி. அதாவது, வேதத்தில் ''ரூபம், குணம் இல்லை'' என்பது, அதே வேதத்தில் விவரிக்கப்பட்டுள்ள ரூபகுணங்களைப் பற்றியல்ல.

இது எவ்வாறு என்பதை வேறெரு உதாரணத்தின் மூலம் அறியலாம். வேதம் ஜீவ ஹிம்ஸையைத் தடுக்கிறது. ஆயினும் யாகத்தில் சில மிருகங்களின் வபையை ஹோமம் செய்யவேண்டும் என்றும் ஆணையிடுகிறது. இந்நிலையில் ஸாரமான பொருள் என்னவென்றுல், யாகத்தில் தவிர, மற்ற இடங்களில் வேதம் ஜீவஹிம்ஸையைத் தடுக்கிறது.

இம்முறையிலேயே பரம் பொருளுக்கு ரூபகுணங்கள் உண்டா என்பதை நிர்ணயிக்க வேண்டும். அவன் ஶரீரம் பரம போக்யமானதென்று வேதம் முறையிடுகின்றது. ''ஹிரண்ய ஶ்மஶ்ரு:'' (பொன் போன்ற மீசையை உடையவன்) ''தஸ்ய யத$_2$ா கப்யாஸம் புண்ட$_3$ரீக மேவமக்ஷிணீ'' (அவனின் இருகண்கள் ஆதவன் ஒளியால் மலர்ந்த செந்தாமரையை ஒத்தவை) என்றெல்லாம் அவன் வர்ணிக்கப்பட்டிருக்கிறுன். ஆகையால், அவனுக்கு ரூப குணங்கள் இல்லை என்று கூறும் ஶ்ருதிகளுக்கு வேறுபொருள் கொள்ளல் வேண்டும், ''நம்முடையதைப் போல் வெறுக்கத் தக்க ஶரீரம் அவனுக்கு இல்லை'' என்பதே அப்பொருள். அவன் ஶரீரம் திவ்யமானது. அப்ராக்ருதமானது. இவ்வுலகிற்குப் புறம்பானது. இவ்வாறு இச்சிக்கல் ஸ்ரீபாஷ்யத்தில் விடுவிக்கப்பட்டிருக்கிறது. சங்கராசார்யர் பரப்ரஹ்மத்திற்கு பரார்த்த நோக்கில்

ஶரீரத்தை ஒப்பவில்லை. ஆயினும் அவர் கூட அவனுக்கு அப்ராக்ருத ஶரீரம் உண்டு என்பதை கீதையின் 11–5 வது ஶ்லோகத்தின் உரையில் காட்டியுள்ளார். ''தி$_3$வ்யாநி'' என்னும் அடைமொழி அங்கு பகவானுடைய ரூபங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை விளக்குகை யில் ''தி$_3$வி ப$_4$வாநி தி$_3$வ்யாநி அப்ராக்ருதாநி'' என வரைந்துள்ளார்.

### பரரூபம்

இனி பகவானின் ஐவகைப் பட்ட ரூபத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். அப்ராக்ருதமான ஸ்ரீவைகுண்டத்தில், திவ்யமங்கள விக்ரஹத்துடன் இருக்கும் நிலையை ''பரத்வாவஸ்தை'' என்பர். அது அவனுக்காக அல்ல. ஸ்ரீபூமிநீளா தேவியர்களுக்காக, நித்யமுக்தர்களுக் காக. அவர்கள் யாவரும் அநுபவித்து ஆநந்தப்படுவதற்காக.

பெரியவாச்சான்பிள்ளை, கண்ணன் கோகுலத்தில் கோபியருடன் கூடிக்களித்த காலத்தில், அவனுக்கு பரமபதத்தில் இருந்த அன்பிற்கு ஓர் உவமை கூறுகின்றார். முத்தாள் பிச்சை எடுப்பாளோ என்று அச்சுற்று அவளுக்கு படியளக்கும் கணவன் போல், பகவான் பரமபதத்தில் இருப்பவர்களுக்குப் படிஅளந்து கொண்டிருந்தான் என்கிறார். ''படி'' என்றால் ''விக்ரஹம், உருவம்'' என்றும் பொருள் உண்டு. இதனால் பரமபதத்தில் இருப்பவர்களுக்கு அவன் விக்ரஹமே ஜீவாதாரமானது. ஆயினும் இளையாளிடம் மோஹிக்கும் கணவனைப்போல, கோபியர்மேலே கண்ணனுக்கு அதிக காதல் என்பது தெளிவாகிறது.

### வ்யூஹரூபம்

வ்யூஹரூபம்என்பதுஉலகத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலு மான 'ஜகத் வ்யாபாரத்தை'' நிர்வஹிக்க ஏற்றுக்கொண்டதாகும். இந்நிலையில் வாஸுதேவன், ஸங்கர்ஷ ணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்னும் நான்கு மூர்த்திகளாய் எம்பெருமான் எழுந்தருளியுள்ளான். ஆயினும் ஶாஸ்த்ரங்களில் ஸங்கர் ஷண, ப்ரத்யும்ந அநிருத்தர்களைப் பற்றியே அதிகம் பேசப்பட்டிருக் கிறது. ஜ்ஞாநம், ஶக்தி, பலம், ஐஶ்வர்யம், வீர்யம் தேஜஸ் என்னும் ஆறுகுணங்களும் பரவாஸுதேவனுக் கும் வ்யூஹ வாஸுதேவனுக்கும் ஸமம்.

இக்காரணத்தினால்தான் என்னவோ, வ்யூஹவாஸுதேவனைப் பற்றி அதிகம் கூறப்படவில்லை. மற்ற மும்மூர்த்திகளும் இரண்டிரண்டு குணங்கள் மேலெழுந்தவர்களாய் படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களை நடத்துகின்றனர். ஸங்கர்ஷணன் ஜ்ஞாநபலங்களினால் அழித்தலை நடத்துகிறான். ஐஶ்வர்ய வீர்யங்களுடன் கூடியவனாய் ப்ரத்யும் நன் மநு முதலியோர்களைப் படைக்கி றான். அநிருத்தனே வென்னில், ஶக்தி, தேஜஸ்ஸுக்களினால் காலம் முதலிய னவற்றைப் படைத்து, உலகத்தைக் காக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறான்.

ஸ்ரீ:

# SRISAILESADAYAPATRAM

# ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம்

If Undelivered return to
R.Raghuraman (a) Balaji
Editor:
24/71, Puthur Agraharam,
Trichy-620 107.
mob: 99946 06427